Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර


பக்கம் 24 ரூபா 20.00

மார். 29 - ஏப். 04, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 706

## பிள்ளைகளைக் காப்பாற்றித் தாருங்கள்! பெற்றோர்களின் கண்ணீர்!!





பிணத்தைப் பேசவைக்க முடியுமா? வஞ்ஞானிகள் ஆய்வு!

## ஊடக சுதந்திரம் வெறும் தந்திரமே!

## கிரிக்கெட் சூதாட்டமும் வுல்மரின் கொலையும்!

நடந்தது என்ன?

## கவர்ச்சி காட்டமாட்டேன் -ஷகீலா





## கணவர் கொடுமை, நடிகை விவாகரத்து!

# ஆன்மீகம்

## தத்துவம் மிக்க அர்த்தமுள்ள இந்துமதம்

**பிறரது** சொத்தை அபகரிப்பது பாவம். அறவழி தப்பி நடப்பது பாவம். பொய் பேசுதல் பாவம். பொல்லாங்கு வேலைகளில் ஈடுபடுதல் பாவம் என்றெல்லாம் சைவசமய நூல்களில் கூறப்பட்டுள்ளது.


தத்துவங்களெல்லாம் ஏட்டளவில் மட்டும் இருப்பதால் பயனில்லை. படித்து அதன்படி ஒழுகும் போதுதான் அதில் கூறப்பட்ட உண்மைகளை உணரமுடியும். அர்த்தமுள்ளது சமய தத்துவங்கள்.

இந்து மதம் கூறும் தத்துவங்கள் ஒவ்வொன்றும் அர்த்தபுஷ்டி யானவை. அமுதமானவை. அள்ளிப் பருகவேண்டிய அரும் பொறுப்பு நூல்களைப் படித்துணரும் நுண்ணறிவாளர்களிடையேயுள்ளது.

தேடல் சுகமானது அது தேடும் விதத்தைப் பொறுத்தே அமையும். அறிவுநூல்களைத் தேடிப்படிப்பது நல்வாழ்க்கை வாழ அவசியமானது தான்.

ஆன்மீக நூல்களும் அறவாழ்க்கை வாழ அவசியமானதே. அர்த்தமுள்ள இந்து மதம் கவிஞர் கண்ணதாசன் எழுதிய அரும் பொக்கிஷத்தை அவசியம் படித்துணர்வதால், கவலைகளை மறந்து உண்மைகளை உணர்ந்து உன்னதமான வாழ்வு வாழ வழி அமையலாம். எனவே நன்றே செய்யுங்கள் அதனை அன்றே செய்யுங்கள்!

சிவஸ்ரீ அ.அரசரெட்ணம் ஐயர், சேனையூர்.



## கிறிஸ்துவின் சரீரம்

**உங்கள்** சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறிவீர்களா?...(கொரி6:15) கிறிஸ்துவுக்குள் நம் அனைவரையும் அவயவங்களாகக் கொண்ட அமைப்பு, கிறிஸ்துவின் சரீரமாக வேதாகமத்திலே விளக்கப்பட்டுள்ளது. கர்த்தர் எங்களுக்கு வெவ்வேறு தாலந்துகளை, வரங்களை, திறமைகளை அருளி உள்ளார். எங்கள் அனைவருக்கும் திருச்சபையிலே வெவ்வேறு பொறுப்புக்களையும், தொழிற்பாடுகளையும் செயற்படுத்தும்படி பணிக்கிறார், நாம் அவற்றுக்கு செவிசாய்த்து கீழ்ப்படிகிறோமா?

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்தில் அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். (ரோமன் 12:4,5) பிரயோசனமற்ற உறுப்பாய் எம்மில் எவருமே இல்லை. ஒவ்வொருவருடைய தொழிற்பாடும் கர்த்தரின் பணிக்கு அத்தியாவசியமாக உள்ளது. எமது பங்கை, அது பெரிதோ சிறிதோ - மனம் குன்றாமல் உற்சாகத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை சீராக இயங்கி, கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

உடல் உறுப்புக்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இசைந்து, தொழிற்படுகின்றனவோ, நாமும் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் உதவியாக இசைந்து, ஒரே நோக்கத்திற்காக தொழிற்படுவது மிகவும் அவசியம். அப்போது தான் திருச்சபையானது கிறிஸ்துவை, உருக்குலையாமல் தெளிவாக பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும். கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே. ஆகவே தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (கொரி 6:20)

செ. கீதாஞ்சலி.

## மறுமை நாளை நம்புங்கள்!

**நிச்சயமாக** மறுமை நாளை நம்புவதும், அறிந்து கொள்வதும் அதை அதிகமாக நினைவு கூருவதும், இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதும் முக்கியமான காரியமாகும். எனவே மறுமை நாளின் அமளிகள், அதன் கடுமைகள் இவைகளை நினைவு கொள்வதை விட்டும் மறந்திருப்பதைப் போன்று மனிதனின் உள்ளத்தை கல்லாக்கி அவனை பாவங்களின் மீது துணிவை ஏற்படுத்தக்கூடியது வேறு எது இருக்க முடியும்.

மறுநாள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்,

அந்நாள் குழந்தைகளை நரைத்தவர்களாக்கி விடும், 73:17. மேலும் கூறுகிறான், மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக இறுதி நாளின் அதிர்ச்சி மகத்தான பெரும் நிகழ்ச்சியாகும், அந்த நாளில் பாலூட்டிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தான் பாலூட்டும் குழந்தையை மறந்துவிடுவதையும், ஒவ்வொரு கா்ப்பிணியும் தான் சுமந்திருக்கும் குழந்தையைப் பெற்றுவிடுவதையும் நீங்கள் காண்பீர்கள். இன்னும் மனிதர்களை மதிமயங்கிவர்களாகக் காண்பீர்கள். அவர்கள் (மதுவில்) மயங்கிவர்களல்லர் எனினும் அல்லாஹ்வின் வேதனைமிகக் கடுமையானதாகும். 22:12.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

## கவிதைப் போட்டி இல. 703



பாராட்டுக்குரியது


### அகாலம்

நிர்ப்பந்தத்தால் -
ஆயுதம் தூக்கிய தம்பி
அகால மரணம், அதனை
அறிந்த அக்காவுக்கு
ஆறாத துயரம் - இது
வீட்டுக்கொரு
பிள்ளை வீதம்
தொடரும் அவலம்!

-முஸ்னா றஷிகா,
நியூ ரோட்,
கல்முனை - 07.




## கவிதைப் போட்டி இல.706



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 03.04.2007.

கவிதைப் போட்டி இல.706
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### புன்னகை பூக்காதா?

வாடா மலரே உன் வதனம்
வாட்டமுற்றது ஏனோ?
மங்கையர் தினத்திலாவது
உங்கள் வாழ்வில்
புன்னகை பூக்குமா?

- யூ. செல்லத்தம்பி,
கல்முனை - 03.

### ஏன் இந்த ஏக்கம்?

உறவுகளையும்
உடைமைகளையும்
உணர்வுகளையும்
பிறந்த மண்ணில்
தொலைத்துவிட்டு
எஞ்சிய கண்ணீருடன்
ஏங்கி நிற்கும் இவனின்
எதிர்காலம் எவர் கையில்?

- யூ.எல்.நபீர்,
அக்பர் கிராமம்.

### பெண் குரல் எதற்காக?

இன்று....
'சர்வதேச மகளிர் தினம்!
என்று
பெருமை மட்டும் தான்.
அடக்கி ஒடுக்கப்பட்டு,
நடுங்கி வாழும் கொடுமையே
அடிமைகள் எமது
'சுதந்திரம்.!

- சு. இளங்கோவன்,
கொழும்பு - 14.

ஏற்கனவே எனது பெற்றோரைப்
பறிமுதல் செய்துவிட்டனர்
இன்று எனக்காக வந்த உணவும்
பறிமுதல் செய்யபட்டு விட்டது
நித்தமும் தொடரும் இவ்வகை
அவலங்களால்
கண்ணீருக்குத்தான் எவ்வளவு
தொல்லைகள்
என்னால்!

- எம்.ஐ.எம். சர்ஜுன்,
ஏறாவூர்.

### பொலிவிழந்த பூவதனம்

பொலிவிழந்து போன
பூ வதனம்
இக்கால கட்டத்தில்
பூவையர்களுக்கு
சோதனைதான் என்பதை
சொல்லிப் பறைசாற்றும்
உதாரணப்படம்

- கவிக் குயிலன்,
சேனையூர் - 06.

### தன்மானம்

மண்ணிலே நாம் வாழ்ந்துதான்
ஆகவேண்டும்
மனதைத் திடப்படுத்திக் கொள்
போர் புரியும் தரப்புகள்
தன்மானப் பிரச்சினையால்
மாறி மாறிச் ஷெல் அடிக்க
இடிந்தது எம் வீடு, அழிந்தது எம்
வாழ்வு
அவர்களுக்கென்ன நாம்தான் அழ
வேண்டும்.

- சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### எதைச் சொல்லி அழ!

நோயிற் கணவன்
நொடிந்து கிடப்பதையா
பசியிற் குழந்தை
கதறித் துடிப்பதையா
அகதிகளாக ஆண்டுகள் பல
அலைந்து திரிவதையா
எதைச் சொல்லி
நான் அழ....

- அ. சந்தியாகோ,
கண்டி.

### எப்போது வருவான்?

மழைகாணா பயிர் போல்
வாடும் மங்கையின்
கண்ணீரைத் துடைக்க
கயவர்களால் கடத்தப்பட்ட
கணவன்.
எப்போது வருவானோ?

- முஹம்மது ஹஸனி,
கல்முனை - 07.

# உங்கள் பக்கம்

## குப்பைக்கருகில் புத்தர் சிலை! அதிகாரிகள் கண் திறப்பது எப்போது?

**கொழும்பு - 8,** கொட்டாரோட், கோதமி ரோட் இரண்டாவது ஒழுங்கையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு குப்பைத் தொட்டியொன்று இருந்தது. அந் நேரம் குப்பைகள் யாவும் ஒழுங்காகத், தொட்டியில் போடப்பட்டு, மாநகரசபையின் குப்பை அள்ளும் லொறி மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. அக்காலகட்டத்தில் அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த பொது மலசலக்கூடத்தை அகற்றிவிட்டு, பொது வாசிகசாலையொன்று அமைத்தார்கள். இதன் அருகில் ஆண்களும் பெண்களும் குளிப்பதற்கும், உடைகளை கழுவுவதற்கும் பொதுக் கிணறு ஒன்றுமிருக்கிறது.

ஏற்கனவே இருந்த குப்பைத் தொட்டி அகற்றப்பட்டதற்குப் பதில், அவ்விடத்தில் எந்தவித தொட்டிகளும் இதுநாள் வரை கட்டித்தராதபடியால், கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் குடியிருக்கும் அப்பகுதியில் வாழும் மக்கள், அன்றாடம் தங்கள் வீட்டிலுள்ள குப்பைகளை ஒரு பொது இடத்தில் கொட்டி வருகிறார்கள். இதைக் கட்டாக்காலி மாடுகள், நாய், காகம் போன்றவை இழுத்துப் போடுவதாலும், காற்றின் வேகத்தில் குப்பைகள் அடித்துச் செல்லப்பட்டு, சொப்பிங் பேக், கடதாசி போன்றவை பறந்து சென்று, அப்பகுதி முழுவதையும் குப்பைக் காடாக்கி வருகிறது. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரக் கேடும் ஏற்படுகிறது.

வாசிகசாலையில் படித்துக் கொண்டிருப்போருக்குச் சகிக்க முடியாதிருக்கிறது. பொதுக் கிணற்றில் குளித்துவிட்டு, உடைகளைக் கழுவிக் கொண்டு வரும்போது, காற்று கொஞ்சம் அதிகமாக வீசினால், கழுவிக் கொண்டு வரும் உடைகளில் எல்லாம் தூசியும், குப்பையும் படிந்து உடைகளைக் கழுவும் வேலை இரட்டிப்பாகிறது. இதனால் பொது மக்கள் மிகவும் விசனமடைகிறார்கள்.

தற்பொழுது குப்பை கொட்டிவரும் இடத்தில் ஒரு பெரிய குப்பைத் தொட்டி ஒன்றை நிறுவித் தந்தால், தங்களது பிரச்சினைகள் யாவும் தீர்ந்து விடுமென வரியிறுப்பாளர்களாகிய பொதுமக்கள் கருதுகிறார்கள். மாநகர சபையின் குப்பை அள்ளும் லொறி கிழமையில் ஒரு நாள் மட்டுமே அப்பகுதிக்கு வருவதால் குப்பைகள் யாவும் தேங்கி விடுகிறது.

எனவே தயவு செய்து இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு பொது மக்கள் சார்பாக மாநகர சபையைக் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.ராம்,
கோதமி ரோட்,
பொரளை.

# வாசகர் சாலை

## முரசு முஸ்லிம் மக்களுக்கும் முத்தாய் மலர்ந்தது

கடந்த 28.12.2006 இல் திருகோணமலை என்.புண்ணியம் வாசகர் பகுதியில் "தமிழ் இனத்தின் குரல் நீ" என்று குறிப்பிட்டபோது அதன் இன்னொரு பகுதி மறைக்கப்பட்டாற்போல் தெரிந் தது.

முஸ்லிம்களுக்கு தினசரியில்லாத காலத்தில் தினமுரசு முஸ்லிம் மக்களின் கண்ணீரையும், உரிமையையும் வெளியுலகுக்கு எடுத்தியம்பியதை மறக்க முடியுமா? முரசினால் முஸ்லிம் மக்களும் பயனடைந்தது ஆவணப் படுத்தப்பட வேண்டியது. என் புண்ணியமே...! இதையும் விரும்பினால் செதுக்குங்கள். ஏனையோரும்தான்.

- ஆயிஸா றிஸ்வின்,
மூதூர்.

## தனித்துவம்

என்றும் என் மனங்கவர்ந்த தினமுரசே!

உன்னுள் புதைத்திருக்கும் ஒவ்வொரு விடயமும் காலத்தின் தேவையறிந்து வாசக நெஞ்சங்களுக்கு அள்ளி வழங்கும் புதையல் என்றே கூற வேண்டும். உன்னுடைய வளர்ச்சி கண்டு தினமும் தினமும் பொறாமைப்படும் ஈனர்களுக்கு உன் முரசம் கொட்டும் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு பாடமாக அமையட்டும். எக்காரணத்திற்காகவும் நடுநிலையை தவறாது தவறுகளை துணிவுடன் கூறுவதே உன் தனித்துவம். வாழ்க! வளர்க்க உன் பணி!

-எஸ்.கீர்த்திகா,
வவுனியா.

## முரசின் வரப்பிரசாதம்

வாரத்தில் ஒரு நாள் என் எதிர்பார்ப்புகளுக்கு தீனி போடும் தினமுரசின் புதிய வரவான புரட்சித் தலைவர் பிடெல் கெஸ்ட்ரோவின் வரலாறு உண்மையில் என்போன்ற தேடலுள்ள பல வாசகர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மேலும் பல புதிய ஆக்கங்களுடன் உள்ளதை உள்ளபடி துணிந்து கூறும் முரசின் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

-கே.பாலசூரியா,
காந்திநகர்.

## உலகறியச் செய்வாய்!

தேனேந்தும் தமிழ் போல
தித்திக்கும் முரசே உன்
வானேந்தும் புகழ் என்றும்
வற்றாது பெருக என்
கோலேந்து கை வரைந்த
வாழ்த்துக்கள் கோடி.

வாரத்தில் ஓர் நாள் நீ
வலம் வந்து எம் மனதை
மகிழ்விக்கும் போதெல்லாம்
உன் தகைமை
வேறெந்த மலருக்கும்
இல்லையென் றுரைப்பதெல்லாம்
உண்மையை உலகறியும் வாழ்த்துக்கள்.

-எஸ்.புண்ணியம்,
தம்பலகமம்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# புலிகளின் இலகு ரக விமானம் தாக்குதலின் பின்னர் பாதுகாப்பாகத் தப்பிப்போனது எவ்வாறு?

## -விசேட விசாரணைக் கமிட்டி தீவிர பரிசீலனை

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது புலிகளின் இரண்டு இலகு ரக விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடாத்தி விட்டு, பாதுகாப்பாக தப்பிச் சென்றமை தொடர்பாக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்தப்பட்டபோது இலங்கை விமானப்படையின் வான்பரப்பு தற்காப்பு அமைப்பு முறை செயற்பட்டிருந்தால் ஏன் புலிகளின் இலகு விமானங்கள் இரண்டும் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்று பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பி இருந்தனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் பூரண விபரங்கள் பின்னர் வெளியிடப்படுமென்று ஊடகத்துறை அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்திருந்த போதும், விமானத் தளத்திலுள்ள விமானப் பாதுகாப்பு அமைப்பு முறை செயற்பட்டதால்தான் பாரிய இழப்புகளைத் தவிர்க்கமுடிந்ததென்று விமானப்படை அதிகாரிகுறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்திருந்தார். பாதுகாப்புக் காரணங்களுக்காக மேலதிக விபரங்களை வெளியிட முடியாதென்றும் அவர் தெரிவித்திருந்தார்.





மூலோபாயக் கண்காணிப்பு ராடார் அமைப்பு கடந்த 12ஆம் திகதி முதல் செயலிழந்திருந்ததாலேயே விமானக்கட்டுப்பாட்டு நிலையத்தினால் புலிகளின் இலகு விமானத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று தெரிவிக்கப்படும் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாகவும் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தாழ்நிலை உயரத்தில் பறக்கும் இலகு ரக விமானங்களை ராடார் அமைப்புகள் காட்டுவதில்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மீது 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் போது, தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட இலகு ரக விமானத்தை சக்தி வாய்ந்த ராடார் கருவி காட்டிக் கொடுக்கவில்லை என்றும் விமானத்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புலிகளிடம் சிறிய ரக விமானங்கள் இருப்பதாகவும் ஒரு சிலரை மட்டுமே கொண்ட சிறு விமான அணி இருப்பதாகவும் 1998ஆம் ஆண்டிலிருந்தே செய்திகள் வெளிவந்ததாக விமானத்துறை நிபுணர்கள் தெரிவித்தனர். அவர்களிடம் இரண்டு இலகு ரக விமானங்களும், இரண்டு சிறிய ஹெலிகொப்டர்களும் இருப்பதாகவும் ஆளில்லா விமான மூலம் இலங்கை விமானப்படையினர் நடத்திய புலனாய்வுகள் உறுதி செய்திருக்கின்றன. புலிகளிடம் சிறு விமானங்களும் விமான அணியும் இருப்பதாக இலங்கை அரசாங்கம் உலக நாடுகளுக்கு அறிவித்ததோடு, இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் புகார் தெரிவித்திருந்தது. விமான ஓடுபாதையை சோதனையிட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பலதடவை முயற்சியெடுத்தபோதும் புலிகள் இயக்கம் அதற்கு அனுமதிக்கவில்லை. கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள இரணைமடு என்ற இடத்தில் புலிகளின் முதலாவது விமான ஓடுபாதை அமைக்கப் பட்டிருந்தது. முல்லைத்தீவிலிருந்து 26 கிலோ மீற்றர்கள் வடமேற்காகவுள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் புலிகளின் இரண்டாவது ஓடுபாதை யுத்த நிறுத்த காலத்தில் அமைக் கப்பட்டது. இந்த இரு விமான ஓடுபாதைகள் மீதும் கிட்டத்தட்ட இரு தடவை களுக்கு மேல் 2005 - 2006 ஆண்டு காலப் பகுதியில் இலங்கை விமானப்படையினர் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

விமானப் பாகங்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டு பொருத்தப்பட்டனவா அல்லது விமானம் நாட்டுக்குள் கடத்திக் கொண்டு வரப்பட்டனவா என்று விசேட விசாரணைக் குழு ஆராய்ந்து வருகின்றது.

புலிகளிடம் இருக்கக்கூடிய இலகு ரக விமானங்களில் ஒன்று செக். நாட்டுத் தயாரிப்பாக இருக்கலாமென்றும் மற்றையது சுவிஸ் நாட்டு பயிற்சி விமானமாக இருக்கலாமென்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. கனடாவில் விமானப் பொறியியலாளராக பணியாற்றிய வீ.சோமலிங்கம் அல்லது லெப்ரினனட் சங்கர் என்று அழைக்கப்படுபவரே புலிகளின் விமான அணியை கட்டியெழுப்பியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பூரணமாகப் பயிற்சி பெற்ற விமானப் பொறியியலாளரான இவர், புலிகளின் பகுதிக்குள் ஆழ ஊடுருவித் தாக்கிய படையணியினரால் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு உஷார் நிலையில்!

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது புலிகளின் இலகு ரக விமானம் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளதை அடுத்து தமிழ் நாட்டின் வான் பரப்பில் பாதுகாப்புச் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இந்திய விமானப்படைச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் இயக்கம் தமிழகத்தின் பந்தோபஸ்துக்குப் பாதிப்பு விளைவிக்கக் கூடிய எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார்கள் என்று கருதப்படுகின்ற போதிலும் உஷார் நடவடிக்கைகளைத் தளர்த்திவிட முடியாதென்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. "ஆசியாவிலேயோ அல்லது வேறெங்குமோ அரசாங்கத்தின் விமானப்படைத் தளத்தின் மீது தாக்கிவிட்டு தப்பிச் செல்லக் கூடிய பயங்கரவாத அமைப்பொன்று கிடையாது. புலிகள் இயக்கத்திடம் பாரிய விமானப்படை இல்லையென்ற போதிலும் ஓரிருவர் பயணம் செய்யக் கூடிய இலகு ரக விமானங்களைப் பயன்படுத்தி கெரில்லா பாணியிலான தாக்குதலை நடாத்தக்கூடிய சக்தி அதற்குண்டு."

தாய்லாந்திலிருந்தும் இந்தோனேஷியாவிலிருந்தும் ஆயுதங்கள் பெறப்பட்டு, தமிழகத்தை இடைப்பாதையாகப் பயன்படுத்தி, வன்னிக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றைத் தடுப்பது தொடர்பாக இலங்கை - இந்தியப் படைகள் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பது குறித்து ஆராய்ந்து வரும் வேளையிலேயே புலிகளின் விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாய்லாந்திலிருந்தும் இந்தோனேஷியாவிலிருந்தும் புலிகள் ஆயுதங்களைக் கடத்திச் செல்வதாக எமக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. என்று அந்தமான், நிக்கோவா தீவுகளின் பிரதி கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் பி.கே.நாயர் இந்திய ஆசிய செய்திச் சேவைக்குத் தெரிவித்திருந்தார். சமீபத்தில் பொத்துவில் அறுகம்பை கடலிற்கு அப்பால் இலங்கை விமானபபடையினர் தாக்கி மூழ்கடித்த புலிகளின் இரு கப்பல்களில் விமான உதிரிப்பாகங்கள் கொண்டு செல்லப் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பரமேஸ்வரியை பயங்கரவாதியாக்கியதால் அவரை ஜனரஞ்சகப்படுத்தியதே மிச்சம்!

### -ஜனநாயக தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு

'மௌபிம' சிங்களப் பத்திரிகையின் சுயாதீன ஊடகவியலாளர் முனுசாமி பரமேஸ்வரி, நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டமை, அவர் மீது சுமத்தப்பட்ட பயங்கரவாதக் குற்றச்சாட்டு தவறானதென்பதையே காட்டுகிறது. மலையகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணான பரமேஸ்வரி, தமிழ்பேசும் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல் தொடர்பான விபரங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதில் கணிசமாகப் பங்களித்துள்ளார். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு சில அதிகாரிகளின் தவறான செயற்பாடுகளுக்கு அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது என்று ஜனநாயகத் தமிழ் ஊடவியலாளர் அமைப்பின் செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- பரமேஸ்வரி அரசியல், சமூக, பொருளாதார விடயங்களை ஆழமாக ஆராய்ந்த பத்திரிகையாளரோ அல்லது அரசியல் நோக்குக் கொண்டவரோ அல்லர். சிங்களத்தில் எழுதக் கூடியவர் என்பதால் தமிழ் சமூகத்தவர் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சில விடயங்களை அம்பலத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார். சில வேளைகளில் அவர் எழுதிய விடயங்கள் சட்டத்தோடு சம்பந்தப்பட்ட சில தனிப்பட்ட அதிகாரிகளைப் பாதித்திருக்கலாம். இதற்காக கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் அவர் தடுத்து வைக்கப்பட்டமை அவரது அடிப்படை உரிமைகளை மீறும் விடயமாகும்.



ஊடகவியலாளர் பரமேஸ்வரி

சிங்கள வெகுஜனங்கள் மத்தியில் தமிழ் சகோதரர்கள் எதிர்கொண்ட துயரங்களை வெளிக்கொணர்ந்தமைக்காகத்தான் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. ஊடகவியலாளர்கள், புலனாய்வு ஊடகவியலாளராகவும் இருக்கலாம் அல்லது வெறும் சம்பவக் கோவைகளை வெளியே கொண்டு வருபவர்களாகவும் இருக்கலாம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## புலிகளின் தாக்குதலுக்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவும் காரணம்

### -இந்திய ஆய்வாளர் குற்றச்சாட்டு

பயங்கரவாத அமைப்பான புலிகள் இயக்கம், விமானப் படையணியொன்றினை உருவாக்கியமைக்கு நோர்வே தலைமையிலான யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளும் ஒரு காரணமென்று, இந்திய அமைச்சரவையின் முன்னாள் செயலாளரான பி.இராமன் என்பவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஒன்பது வருடங்களாக இலங்கையின் புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்புக்கு உட்படாத வகையில் புலிகளின் வான்படை செயற்பட்டு வந்துள்ளதாகவும் "த இன்டிபென்டின்ட்" செய்தித்தாளில் வெளியிட்ட செய்தியொன்றில் பி.ராமன் தெரிவித்துள்ளார். புலிகள் வான்படை ஒன்றை அமைத்துள்ளமை குறித்தும் அதன் பாதிப்புகள் குறித்தும் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதி தாம் கொழும்பில் சர்வதேச ஊடகவியலாளர் ஒன்றியக் கூட்டத்தில் கருத்துரைத்தமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேசம் இலங்கையில் பயங்கரவாதத்திற்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் இத்தாக்குதலைப் பாரதூரமானதாகவே கருதவேண்டி யுள்ளது. இதேவேளை பயங்கரவாத அமைப்புகளில் முதன் முறையாக புலிகள் வான்படை ஒன்றை அமைத்துள்ளமைக்கு நோர்வே தலைமையிலான போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் நடவடிக்கைகளும் காரணமென பி.ராமன் குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் 1373ஆம் பரிந்துரையின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் புலிகளின் வான்படை செயற்பாடுகள் குறித்து முறையிடவில்லை என்ற விடயத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பழ.நெடுமாறனை கைது செய்யக் கோரிக்கை

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலைப் பாராட்டி, பழ. நெடுமாறன் அறிக்கை விடுத்திருப்பதை வன்மையாகக் கண்டித்திருக்கும் தமிழக அமைப்புகள், அவரை கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகத் தமிழகத்தில் செயற்படுவோர் கைது செய்யப்படுவார்களென்று முதலமைச்சர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்திருந்ததையும் இந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## புலிகளின் அந்த ஆறு புகைப்படங்களும் முன்னரேயே எடுக்கப்பட்டவை

கடந்த திங்கட்கிழமை அதிகாலை புலிகள் விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்திய பின்னர் புலிகளின் இணையத்தளமான தமிழ் நெற்றில் வெளியிடப்பட்ட 6 புகைப்படங்களும் தாக்குதலுக்கு முன்னரே எடுக்கப்பட்டவை என்று புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் வெளியிடப்பட்ட ஒரு புகைப்படம், இலகு ரக விமானத்தில் நான்கு குண்டுகள் இருபபதை அப்படியே காட்டுவதாக அவர்கள் தெரிவித்தனர். இரு புகைப்படங்கள் பகல் வெளிச்சத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. நீலச் சீருடையில் காணப்படும் புலி இயக்க உறுப்பினர்கள் 7 பேரோடு பிரபாகரனும் காணப்படுகிறார். அந்த இலகு விமானம் தான் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது என்று திட்டவட்டமாக கூறமுடியாது என்றும் புலனாய்வாளர்கள் கூறுகின்றனர். விமானத்தில் குண்டுகள் பொருத்தப்பட்டதாக காட்டப்படும் இடம் பின்னர் பொருத்தப்பட்டிருக்கலாமென்றே கூறப்படுகின்றது. மற்றொரு புகைப்படம் நான்கு ஆசனங்களைக் கொண்ட ஒரு விமானத்தில் நீலச் சீருடை அணிந்த இரு புலி உறுப்பினர்களை காட்டுகிறது.

இதேவேளை புலிகளின் இந்த இலகு விமானங்கள் வில்பத்துவன வான் பரப்பில் காணப்பட்டதாக வெளிவந்த செய்திகள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

## கிளிநொச்சியில் கடத்தப்பட்ட யுவதியை விடுவிக்குமாறு கனடாவில் கோரிக்கை

கிளிநொச்சியைச் சேர்ந்த பத்மசீலி கனகராஜா என்ற 27 வயது யுவதியைக் கடந்த பெப்ரவரி மாதம் புலிகள் இயக்கம் கடத்திச் சென்றுள்ளதாகவும் அவரை விடுவிக்க உதவுமாறும் கோரி கனடாவிலிருந்து கஜன் கனகராஜா என்பவர் சர்வதேச அமைப்புகளுக்குக் கடிதம் எழுதியுள்ளார். தனது மருமகள் அவரது விருப்பத்திற்கு மாறாகவே கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்றும் அவரை விடுவிக்க சர்வதேச அமைப்புகள் உதவ வேண்டும் என்றும் கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள மிசிங்கா என்ற இடத்தில் வசிக்கும் கஜன் கோரியுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட பத்மசீலி கனடியப் பிரஜை அல்லர் என்பதால் அவர் சார்பில் புலிகள் இயக்கத்தோடு தம்மால் தொடர்பு கொள்ள முடியாதென்று கொழும்பிலுள்ள கனடிய உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். பொதுவாக தனிநபர் தொடர்பான விடயங்களில் தாம் தலையிடுவதில்லை என்றும் குறிப்பிட்ட அவர், வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் அமைப்போ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியோ இது தொடர்பாக உதவி புரியலாம் என்று குறிப்பிட்டார். கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் இரவீந்திரநாத்தை கடத்தியவர்கள் அவரை விடுவிக்க வேண்டுமென்று மனிதாபிமான அடிப்படையில் தாம் கோரியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க.மாற்றுக் குழுவின் அரசியல் தீர்வு யோசனைகள்

ஐ.தே.க. கட்சியின் மாற்றுக் குழு என்று கூறப்படும் அமைச்சர்கள் கருஜெயசூரிய, ஜீ.எல்.பீரிஸ், இராஜித சேனாரட்ன ஆகியோரின் அணியைச் சார்ந்தவர்களும் தேசிய இனப்பிரச்சினை யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று அரசியல் ஆய்வாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்தார். ஐ.தே.க.வின் மாற்றுக் குழுவைச் சேர்ந்த இவர்கள் ஐ.தே.கட்சியை விட இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பதாக தெரியவருகின்றது. பாராளுமன்றத்திற்கு செயலாற்று அதிகாரம் வழங்குதல், தேர்தல் முறைமை, இரண்டாவது சபை, உப ஜனாதிபதி, அதிகாரப் பகிர்விற்கான அலகு, மலையகத் தமிழ் மற்றும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான அலகு ஆகியவை பற்றி தமக்கென புறம்பான கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## படை "வலுச்" சண்டையில் நிலைமை நெருக்கடிக்குள்!

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு கௌரவமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான அவசரத்தை உணர்ந்து கொள்ளாமல் அல்லது உணர்ந்துகொண்டும் தேவையற்ற தாமதத்துக்கு வாய்ப்பளிப்பதுமானது, பிரச்சினையை மேலும் மேலும் கூர்மையடையச் செய்யும்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் சமாதானம் பற்றிய கருத்துக்கள் மேலெழுவதும், பின்னர் எதிர்ப்புச் சக்திகள் வலுவடைவதும், போராட்டம் கூர்மையடைவதும் தொடர்ந்து கொண்டே வருவதை அவதானிக்க முடிகிறது. இதே மாதிரியான ஒரு சூழலே தற்போதும் உருவாகியிருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான திட்ட வரைபுகள் தயாரிக்கப்படுவதற்கு இன்னும் நிர்ணயிக்க முடியாத கால எல்லை நீடிக்கின்ற நிலையில் இந்த அரசை பலமிழக்கச் செய்யவும், அதிகாரத்தரப்பை மாற்றி மீண்டும் பூஜ்ஜியத்திலிருந்து பிரச்சினையை பார்க்கச் செய்யவுமான அரசியல் சூழ்ச்சிகள் நடைபெற்றுவரும் நிலையில், மறுபக்கம் அரசு நடத்தும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் பல கட்ட வளர்ச்சி கண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. அரசின் அரசியல் முயற்சிகளை ஏற்கப் போவதில்லை என்ற தீர்க்கமான தீர்மானத்தை எடுத்துக் கொண்ட புலிகள், ஆயுத ரீதியாக தமது வலுவில் ஏற்பட்டுள்ள பின்னடைவை சரிசெய்யும் வியூகங்களை அமைக்கத் தொடங்கியுள்ளனர். இதன் சிறப்பானதொரு ஆரம்பமாகவே கடந்த 26.03.07 அன்று அதிகாலையில் புலிகள் நடத்திய வான் தாக்குதலை உணர முடிகிறது.

புலிகள் நடத்தியிருக்கும் இந்த தாக்குதல், புலிகளின் இராணுவச்சரிவை சரி செய்து சம வலுவை ஏற்படுத்தும் என்று கூறமுடியாவிட்டாலும், இலங்கை அரசுக்கும் - சர்வதேசத்துக்கும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குத் தவறான வழிகாட்டலை புலிகள் வழங்கியிருக்கிறார்கள் என்ற கவலையும் அக்கறையையும் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும்.

எனவே புலிகளின் விமானத் தாக்குதலுக்கான விளைவு எத்தகையதாக இருக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இந்த அச்சுறுத்தலுக்கு முடிவு கட்டி நாட்டினதும், நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் பெருங் கடமையாகும். எனவே அரசின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் நிச்சயம் புலிகளைக் பலவீனப்படுத்தும் நோக்கம் கொண்டதாக அமையலாம். நோக்கம் எதுவாக இருந்தாலும் அது தமிழ் மக்களின் பாதுகாப்பு, உரிமைகளைப் பாதுகாக்கின்ற விதமாக அமைய வேண்டும். புலிகளினதோ, அரசினதோ போர் நியாயங்களுக்கு எந்த வகையிலும் மக்கள் பொறுப்பாளிகளும் அல்ல, தாக்கங்களை தாங்கிக்கொள்ளக் கூடிய பெருந் தியாகிகளும் அல்ல என்பதை இருதரப்பும் புரிந்துகொள்ள வேண்டும்.

படை வலுச் சமநிலையை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு புலிகள் நடத்தும் தாக்குதல்கள், தொடர்ந்து நிலைமையை சிக்கல்களுக்குள் தள்ளிவிடப்போகிறது என்ற கவலை, கட்டுநாயக்கா விமான தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை மக்களுக்கு அதிகரித்துள்ளது. மக்களின் கவலைகளுக்கு மதிப்பளியுங்கள்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



பத்திரிகையாளர் பரமேஸ்வரி

# ஊடக சுதந்திரம் வெறும் தந்திரமே!

**கொழும்பிலிருந்து** வெளிவரும் 'மௌபிம' என்ற சிங்கள வாரப் பத்திரிகையின் சுயாதீனப் பத்திரிகையாளர் முனுசாமி பரமேஸ்வரி கைது செய்யப்பட்டமை, ஊடகங்கள் மத்தியில் பெரும் முணுமுணுப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியிருந்தது. பயங்கர வாதத்தடைச் சட்டத்தின் கீழ் இந்த யுவதி கைது செய்யப்பட்ட மையையடுத்து இலங்கையில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் அவரது பெயர் பிரபல்யம் பெற்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவரைத் தான் தங்கியிருந்த வெள்ள வத்தை விடுதியில் வைத்திருந்தார் என்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் தமது குற்றச்சாட்டில் தெரிவித்திருந்தனர். வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியிலுள்ள விடுதியொன்றில் பரமேஸ்வரியோடு தங்கியிருந்த சுசந்தி தம்பிராஜா என்ற இளம் பெண்ணுக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் 23ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் திடீரெனத் தொலைபேசி அழைப்பொன்று வந் தது. சுசந்தியின் தம்பி கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவரைப் பார்க்க வேண்டுமானால் வெள்ளவத்தை சவோய் தியேட்டருக்கு அருகில் வருமாறும் அத்தொலைபேசி அழைப்புக் கூறியது. பதறித் துடித்த சுசந்தி தன் நண்பியான பத்திரிகையாளர் பரமேஸ்வரியை அழைத்துச் சென்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர். ஏன்? எதற்காக? கைது செய்யப்படுகின்றோம் என்று கூறாமல் தாம் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று பரமேஸ்வரி தெரிவித்துள்ளார். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் தான் தம்மை அழைத்துச் சென்றனரென்று பின்னரே தெரிய வந்ததாக பரமேஸ்வரி தெரிவித்துள்ளார். நவம்பர் மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் பரமேஸ்வரி, மார்ச் மாதம் 22ஆம் திகதி விடு விக்கப்பட்டிருக்கிறார்.

நான்கு மாதங்களைச் சிறைக் கம்பிகளுக்கு பின்னால் கழித்த பரமேஸ்வரி, சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைக் கமையவே விடுவிக்கப்பட்டிருக்கிறார். தன்னைக் கைது செய்தமை தவறானது என்றும், சட்டவிரோதமானது என்றும் பரமேஸ்வரி தாக் கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவிற்கிணங்கவே அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மௌபிம பத்திரிகை, அரசாங் கத்தை விமர்சித்துச் செய்திகளை வெளியிட்டு வந்ததாலேயே அந்தப் பத்திரிகையின் நிதி முடக்கப்பட்டதாகச் சில தரப்பினர் கூறுகின்றனர். கைதுகள், ஆட்கடத்தல்கள் தொடர்பாக எழுதி வந்த காரணத்தினாலேயே பரமேஸ்வரி மீது பயங்கரவாதி என்று குற்றச்சாட்டுத் தொடுக்கப்பட்டதாகவும், இத் தரப்புகள் தெரிவிக் கின்றன. பரமேஸ்வரி, பயங்கரவாதியா? இல்லையா? என்று நீதிமன் றம் தீர்மானிப்பதற்கு முன்பதாகவே சக பத்திரிகைகள் சில அவரைப் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புள்ளவரென்று காட்டுவதற்குப் பகீரத முயற்சிகளை எடுத்திருக்கின்றன. குறிப்பாக, அரசு சார்பு ஊடகங்களைச் சேர்ந்த சில ஊடகவியலாளர்கள் இவ்வாறு சேறு பூசினர் என்று பரமேஸ்வரி குற்றம் சாட்டுகிறார். ஊடக அமைப்புகள் பரமேஸ்வரியின் கைது குறித்து கிளர்ந்தெழுந்து ஆக்ரோஷமாகப் போராடின. உலக ஊடக அமைப்புகளும் பரமேஸ்வரிக்குச் சார்பா கக் குரல் கொடுத்தன. தொழில்சார் அமைப்புகள் என்ற ரீதியில், சக ஊடகவியலாளருக்காக இந்த அமைப்புகள் குரல் கொடுத்தமை நியாயமாகும். பரமேஸ்வரி, பயங்கரவாதியல்ல என்று நீதிமன்றம் விடுவித்திருப்பதால், அவரை வேண்டுமென்றே புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருக்கிறார்கள் என்பது நிருபணமாகிறது.

ஓர் அப்பாவியான ஊடகவியலாளர் மீது பயங்கரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, உண்மையிலேயே அவருக்கு ஊறு விளைவித்தவர்களே, பயங்கரவாதத்திற்குத் துணை போகின்றவர் கள். ஆனால், பரமேஸ்வரியின் கைதினை அரச சார்பு ஊடகவியலா ளர்கள் ஒருவிதமாகவும், அரச விரோத ஊடகவியலாளர்கள் இன் னொரு விதமாகவும் அலசியிருக்கிறார்கள். அதாவது, ஊடக சுதந்திரம் என்று கூறிக்கொண்டு ஓர் அப்பாவிப் பெண்ணை பயங்கர வாதியாக சித்திரித்தவர்களும் ஊடகவியலாளர்கள்தான், அவர் பயங்கரவாதி அல்லவென்று வாதிட்டவர்களும் ஊடகவியலாளர்கள் தான். எனவே ஊடக சுதந்திரமென்பதை தத்தமக்குச் சாதகமாக ஊடகவியலாளர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மையே.

பத்திரிகை ஆசிரியர் சங்கத்திற்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் அண்மையில் வார்த்தை மோதல்கள் இடம்பெற்றதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த நாட்டில் நடைபெறும் அத்துமீறல்கள் குறித்து பத்திரிகை ஆசிரியர் சங்கம் மௌனம் சாதிப்பதாகவும், இதற்கு ஏதாவது பின்னணிக் காரணங்கள் இருக்குமா என்ற விதத்திலும் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தை ரணில் விக்கிரமசிங்க சீண்டியிருந்தார். இதற்குப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் பதிலடி கொடுத்திருந்தது. பத்திரிகை ஆசிரியர் சங்கத்தில் ஐ.தே.க. ஆதரவாளர்களும் இருக்கிறார்கள். சு.க.ஆதரவாளர்களும் இருக்கிறார்கள். ஏன் புலிகள் இயக்கத்திற்கு அனுதாபிகளாகவுள்ளவர்களும் இருக்கிறார்களென்றால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கடந்த காலங்களில் அரசியல் முரண்பாடுகள் காரணமாக பத்திரிகை ஆசிரியர் சங்கத்துக்குள்ளும் முரண்பா டுகள் எழுந்திருக்கின்றன. பெரும்பான்மையானவர்களின் அங்கீகார மின்றி, ஒரு பிரதான தேசியக் கட்சியின் நிலைப்பாட்டினை ஆத ரித்து அறிக்கை வெளியிட்டமைக்காக பத்திரிகை ஆசிரியர் சங்கக் கூட்டத்திலிருந்து சிலர் வெளியேறிய சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

எனவேதான், ஊடக சுதந்திரமென்று வாய் கிழியக் கத்தும் ஊடகவியலாளர்களும் தத்தமது வசதிக்கேற்ப ஊடக சுதந்திரம் பற்றி வியாக்கியானம் செய்து கொள்கின்றார்கள். பரமேஸ்வரியை பயங்கரவாதி என்று வர்ணித்த ஊடகவியாளருக்கு அப்படி எழுதச் சுதந்திரமிருக்கின்றது. அதைப்போன்று அவர் பயங்கரவாதி அல்லரென்று எழுதுவோருக்கும் அதற்கான சுதந்திரமிருக்கின்றது. எனவே ஊடக சுதந்திரமென்று கூறப்படுவதை, தமக்கேற்றவாறு தந்திரமாக ஊடகவியலாளர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றெழும் குற்றச்சாட்டை எவரும் நிராகரிக்க முடியாது. அரச சார்பான ஊடக நிறுவனங்கள் என்றும் அரசுக்குச் சார்பாகவே செய்திகளை, விமர்சனங்களை, விளக்கக் கட்டுரைகளை வெளியிடும். இலங்கை யில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் இதுதான் உண்மையாகும். ஊடக உரிமையாளர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கேற்பவே தனி யார் ஊடகங்கள் நடந்து கொள்கின்றன என்பதும் உண்மையாகும். ஊடக சுதந்திரமென்ற வார்த்தையை தத்தமது அளவு கோல்களுக் கேற்பவே இந்த ஊடகங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. அரச ஊடகங்கள் பெரும்பாலும் வர்த்தக நோக்குக் கொண்டவை அல்லவென்பதால், அரச சார்பு ஊதுகுழல்களாகவே செயற்படு கின்றன. அரசாங்க நிறுவனங்களின் விளம்பரங்கள், அரச ஊடகங் களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்படும் உத்தரவுகளின் சூட்சுமங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம், ரூபவாஹினி தொலைக்காட்சி, ஐ.ரி.என்., இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய அனைத் துமே அரசு சார்பு ஊடக நிறுவனங்கள். ஐ.தே.க. அதிகாரத்தி லிருந்தால், அதன் கொள்கைகளுக்குச் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டிய கடப்பாடு இந்த நிறுவனங்களுக்கு உண்டு. இதே போன்று தனியார் நிறுவனங்கள் பெரும்பாலும் வியாபார நோக் குடன் நடத்தப்படுவதால், அரச விரோத நோக்குடன் செயற்படு கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஒரு தமிழ் தினசரிக்கு, மஹிந்த ராஜபக்ஷ வுக்குச் சார்பான செய்திகளையோ புகைப்படங்களையோ முன் பக்கத்தில் வெளியிட வேண்டாமென்று நிர்வாகம் உத்தரவிட்டி ருந்தது. சுதந்திரக் கட்சிக்குள்ளேயே அதிகாரத்திலிருந்த சிலர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதை விரும்பவில்லை. இதனால் ஏரிக்கரைப் பத்திரிகை முக்கியஸ்தர்களை அழைத்து மஹிந்த வுக்கு பாரிய அளவிற்கு பிரசாரம் செய்ய வேண்டாமென்று உத்தர விடப்பட்ட உண்மை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ரணில் அதிகாரத்திற்கு வந்தால் தேசிய அரசாங்கம் அமைக்கலாம். அதன் மூலம் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டவர்களின் உத்தரவே அது. ஆனால், தலைகீழாக நிலைமை மாறியதால் ஏரிக்கரைப் பத்திரிகை யாளர்கள் சிலர் தகவல் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டார் களென்று கூறப்படுகிறது.

மௌபிம சிங்கள வாரப்பத்திரிகையும் பரமேஸ்வரியும் தற் போது ஜனரஞ்சகப்படுத்தப்பட்டுள்ளனர். மௌபிம பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திலக் குருவிற்ற பண்டார, நீண்ட காலம் ஏரிக் கரைப் பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றியவர். சிலுமின என்ற சிங்கள வாரப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர். 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐ.தே.க. கட்சிக்கு வந்த பின்னரும் அவர் அப்பத்திரிகையின் பிரதம ஆசிரி யராகவும் பணியாற்றினார். 2003ஆம் ஆண்டு சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க ஊடகத்துறை உட்பட மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்றபோதும் திலக் குருவிற்ற பண்டார பிரதம ஆசிரியராக இருந்தார். தேர்தல் காலத்தில் ஒரு கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் கொடுக்க மறுத்ததால், திலக் குருவிற்ற பண்டாரவும், லங்காபுர என்ற மற்றொரு முக்கிய பத்திரிகை யாளரும் வெளியேற்றப்பட்டனர். அதே குருவிற்ற பண்டார தற்போது பிரதம ஆசிரியராகப் பதவி வகிக்கும் மௌபிம பத்திரிகை தற்போது அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. எனவே இரண்டும் இரண்டும் நான்கு என்ற பாணியில் சிந்திப்பவர் களுக்கு உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணைய தளங்கள், திரைப்படங்கள் எல்லாமே மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தக் கூடிய ஊடகங்களாகும். வர்த்தக நோக்குக் கொண்ட ஊடகங்கள், தாம் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு ஊடக அனு சரணை என்று கூறி, விளம் பரங்களைத் தேடி பணம் சம் பாதித்துக் கொள்கின்றன. செய்திகளுக்குக் கூட விளை யாட்டுச் செய்தி, வர்த்தகச் செய்தி, உள்நாட்டுச் செய்தி, வெளிநாட்டுச் செய்தி என்றெல் லாம் ஊடக அனுசரணை களைத் தேடிப் பணம் சம்பா தித்துக் கொள்கின்றன. இலங் கையில் இரு தமிழ் வானொலி களைக் கேட்பவர்களுக்கு, "நான் தான் முதல்வன், நீ தான் முதல்வன்" என்ற பாணி யில் பிரசாரத் தம்பட்டமடிப் பதைக் கேட்க முடிகிறது. கேவலம் சிவாஜி திரைப்படப் பாடல்களை நாங்கள்தான் முந்தித் தந்தோம் என்று கூறிச் சண்டை பிடிக்குமளவிற்கு இந்த இரு வானொலிகளும் முன்னேறியிருக்கின்றன.

உலகத்தில் எங்குமே சுதந்திரமான ஊடகமென்று ஒன்று மேயில்லையென்பது அப்பட்டமான உண்மை. அமெரிக்காவின், 'வோட்டர் கேற்' ஊழலை ஊடக சுதந்திரத்தின் பாரிய சாதனை யென்று தம்பட்டமடித்துக் கொள்ளும் பலர், எமது நாட்டிலும் இருக்கிறார்கள். குடியரசுக் கட்சியின் அலுவலகத்தில் ஒட்டுக் கேட்கும் கருவிகளைப் பொருத்தி ஒட்டுக் கேட்டதை இரு ஊடக வியலாளர்கள் அம்பலப்படுத்தியதை அடுத்து அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியின் ஆட்சி கவிழ்ந்தது. அந்த நாட்டைப் பொறுத் தவரை குடியரசுக் கட்சியோ அல்லது ஜனநாயகக் கட்சியோ தான் ஆட்சிக்கு வரமுடியும். எனவே ஒரு கட்சியின் ஊழல் அம்பலப்படுத்தப்பட்டதால், மற்றக் கட்சி ஆட்சிக்கு வந்தது. மைலாய் என்ற வியட்நாமியக் குக்கிராமத்தில் குண்டுகளை வீசி கண நேரத்திற்குள் 300க்கு மேற்பட்ட அப்பாவிகளைக் கொன்று நர வேட்டையாடிய அமெரிக்க ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இந்த ஊடகப் பிதாமகர்களால் முடியாமல் போனதேன்?

ஊடகங்களுக்கு சுதந்திரம் தேவையென்பது உண்மைதான். ஆனால், பொறுப்புணர்வுடன் செய்திகளையும் விடயதானங்களை யும் மக்களுக்கு அளிக்க வேண்டிய கடப்பாடு ஊடகங்களுக்கு இருக்கிறது. அரசாங்கங்கள் தமக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஊடகங்களைக் கட்டுப்படுத்த முனைவது ஒன்றும் புதுமையான செயலல்ல. சிறிமா பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் 'தவச' பத்திரிகை நிறுவனம் இழுத்து மூடப்பட்டது. பல சந்தர்ப்பங் களில் இந்த நாட்டில் பத்திரிகைத் தணிக்கை அமுல்படுத்தப்பட்டி ருக்கிறது. தணிக்கை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யுத்தம், இனமுறுகல், வெளிநாட்டுப் படையெடுப்பு போன்ற நெருக்கடியான காலகட்டத்தில், ஊடக தணிக்கை என்பது அவசியமானதாகும்.

இந்த நாட்டில் இனவாதம் தலையெடுப்பதற்கும், யுத்தம் மூளுவதற்கும் இனவெறி பிடித்த அரசியல் வாதிகளைப் போன்று, ஊடகவியலாளர்களும் பங்களித்திருக்கிறார்கள். சில சிங்கள ஊடகவியலாளர்கள், தமிழ் மக்களுக்கு எதிரான விடய தானங்களையும், சில தமிழ் ஊடகவியலாளர்கள் சிங்கள மக்க ளுக்கு எதிரான செய்திகளையும் கொட்டை எழுத்துக்களில் வெளி யிட்டு இனவாதத்தை உசுப்பி விட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் புலிகளால் கொல்லப்பட்ட சம்பவத்தை மையமாக வைத்து, இலங்கை எங்கும் இனவாதத் தீயைமூட்டி விட்டமைக்கு சிங்கள ஊடகங்களும் பொறுப்பேற்க வேண்டும். இனக்குரோதத்தை ஏற்படுத்தாத விதத்தில் பொறுப் புணர்வோடு ஊடகங்கள் சுயதணிக்கை முறையை கைக்கொள்ள வேண்டும். எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், வாழ்வுச் சுதந்திரம் எல்லாவற்றையும் துப்பாக்கிகள் பறிக்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலையைத் தான் தமிழ் பிர தேசங்களில் வாழும் எமது மக்கள் இன்னமும் எதிர்கொள்கி றார்கள். தமிழ் ஊடகங்கள் தமிழ் தேசியத்திற்கு சார்பாகவும், சிங்கள ஊடகங்கள் சிங்கள தேசத்திற்குச் சார்பாகவும் எழுதுவதில் தவறில்லை. ஆனால் மாற்று இனத்தவர்களின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் எந்த ஊடகமும் செயற்படக் கூடாது. தமிழ் ஊடகங்களின் நெற்றிப் பொட்டுகளுக்கு நேரே ஆயுததாரிகளின் துப்பாக்கிகள் நீட்டப்பட்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கில் பத்திரி கைகள் கொளுத்தப்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

புலிகளுக்கு எதிராக எழுதினால், ஊடகவியலாளர் பலியெடுக் கப்படும் ஆபத்துக்கள் வரலாற்றுச் சம்பவங்களாகி விட்டன. வரதராஜப்பெருமாளின் பல்கலைக்கழக சகபாடியும், பெருமாள் முதலமைச்சராக இருந்தபோது அவரது வெகுஜன ஊடகத்துறை செயலாளராகவும் பணிபுரிந்த ஐயாத்துரை நடேசன், பின்னர் புலிகளுக்காக தனது பேனாவை பயன்படுத்த நிர்ப்பந்திக்கப் பட்டார். இந்தியப்படை வெளியேறியபோது புலிகளால் கைது செய்யப்பட்ட நடேசன், பல இலட்சம் ரூபா கொடுத்த பின்னரே நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். அவர் சுட்டுக் கொல்லப் படும் வரை புலிகளுக்காக செஞ்சோற்றுக்கடன் தீர்த்து வந்தார். எந்தத் துப்பாக்கி அராஜகத்திற்கு அவர் துதி பாடினாரோ, அந்தத் துப்பாக்கி அராஜகமே இறுதியில் அவரைப் பலியெடுத்தது. மக்கள் மத்தியில் கருத்து ரீதியான தாக்கங்களைச் செலுத்தக்கூடியவை ஊடகங்கள். இதனால்தான் நிர்ப்பந்தங்களுக்கும், கட்டுப்பாடுக ளுக்கும் கொலை அச்சுறுத்தல்களுக்கும் இவை ஆளாகின்றன.

ஊடகங்களுக்கு சுதந்திரம் தேவை. அவை அநியாயங்களுக்குத் துணை போகக் கூடாது. மக்கள் வெகுஜ னங்களின் நியாயமான சகல உரிமைகளுக்காகவும் துணிச்ச லாகத் தமது பேனா முனையைப் பயன்படுத்துபவர்களே மக்கள் சார்ந்த ஊடகவியலாளர்களாகப் பரிணமிக்க முடியும்.

நரன்

## ஊரிலிருந்து....



ஆயுதங்களை எப்பிடி எப்பிடி எல்லாம் பதுக்கி அல்லது ஒளிச்சு வைக்க முடியுமோ அதை எல்லாம் ஆமிக்காரர் கண்டுபிடிச்சுட்டினம். பனை உச்சி, ஐஸ்கிரீம் பெட்டி, முந்திரிப்பழக்கூடை, ஏன் தேவாலய கூரையில வைச்சிருந்த ஆயுதங்களைக்கூட ராணுவம் கண்டுபிடிச்சிருக்கு. இதுக்கு சனம் குடுத்த துப்பும் பிரதான ஒரு காரணம்.

ஆனால் நான் சொல்லப்போற ஒரு விஷயத்தை கேட்டால் ஆச்சரியப்படுத்தான் போவியள். 86, 87 இல இறங்கின இயக்கங்களை புலிகள் தடை செய்யேக்க ஏனைய இயக்கக்காரர் பல இடங்களில ஒளிச்சு வைச்ச பெருமளவு ஆயுதங்களும் 20 வருஷம் கழிஞ்சும் இன்னும் எடுபடாமல் இருக்காம். இந்த தகவலை அண்மையில மேற்கத்திய நாடொன்றில இருந்து ஊருக்கு வந்த முன்னாள் போராளி ஒருவர் இந்நாள் அரசியல் கட்சி சகா ஒருத்தரோட பகிர்ந்து கொண்டது மாத்திரமில்லாமல் எடுத்துக் காட்டியிருக்கிறாராம்.

# பிள்ளைகளைக் காப்பாற்றித் தாருங்கள்! பெற்றோர்களின் கண்ணீர்!!

**இலங்கையில்** தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நடத்தப்பட்ட அஹிம்சை வழிப்போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், ஆயுதப் போராட்டத்துக்கான சூழல் தோற்றம் பெற்று இளைஞர்கள், யுவதிகள், பெற்றோர்கள் உற்சாகத்தோடு, பிள்ளைகள் இயக்கங்கள் இணைவதை ஊக்குவித்தனர். இயக்கங்களில் எதிர்கொண்ட உணவுப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினைகளிலும் தம்மாலான பங்களிப்பினையும் செய்தனர். சுருக்கமாகச் சொன்னால், இயக்கங்களை ஊட்டி வளர்த்தவர்கள் தமிழ் மக்கள். அது இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் அரசியல் உரிமைகளுக்காகவும் போராட்ட சக்திகள் ஒன்று சேர்ந்த பொற்காலம்.

> மக்கள் வன்னிக்குள் அகப்பட்டால் பிள்ளைகளை இயக்கத்துக்குப் பிடித்துக் கட்டாயப் பயிற்சிகளை வழங்கவும் வசதியாக இருக்கும் என்பதுவே புலிகளின் திட்டமாக இருக்கிறது. ஆகவேதான், புலிகள் தங்களை மடுவுக்குப் போக விடாமல் தடுக்கின்றனர். ஆனால் புலிகளிடம் எங்கள் பிள்ளைகளைப் பலிகொடுக்க நாங்கள் தயாரில்லை. எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றித் தாருங்கள் என்று பெற்றோர்கள் கூறுகின்றனர்.


அந்தப் பொற்காலம் கடந்து வந்து சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னால் அதை திரும்பிப் பார்க்கின்றபோது, செல்வச் செழிப்போடு வாழ்ந்த எங்கள் மக்களையும் காணவில்லை, அவர்களின் வியர்வை வடிந்து மண்ணோடு பசளையாகி விதைத்ததையெல்லாம் விளையச்செய்த பொன் நிறைந்த பூமியையும் காணவில்லை, "இயக்கப் பெடியள் வருகினம்" என்றால் சாதி, சமய, வேற்றுமை மறந்து சொந்தப் பிள்ளைகளைப் பார்க்கின்ற அன்பையும் காணவில்லை. இன்று எங்கள் மக்கள் வாழ்ந்த தாயகம், மக்கள் வாழ்ந்த - மகிழ்ச்சி கொண்டாடிய - தடயங்களை இழந்து மக்களைத் தொலைத்து தூரவிரட்டி, குருதி வடிந்தோடி, ஒவ்வொரு விடியலிலும் கோழி கூவ மறந்தாலும், எங்கோ ஒரு திசையில் ஒரு மனித ஓலக் குரல் கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு கொலைக்களமாக காட்சி தருகிறது. போராட்டம் திசைமாறியுள்ளது.

மக்களும் போராட்டத்தின் விருப்பங்களிலிருந்து விடுபட்டு, போராட்டத்தைக் கண்டும், போராளிகளைக் கண்டும் அச்சப்படுகின்றனர். இன்று போராட்டம் என்பது எஞ்சியிருக்கும் மக்களை கொன்றொழிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை என்றும், போராளிகள் என்றால் கொலைகாரர்கள், கொள்ளைக் காரர்கள் என்றும் கருதுகின்ற நிலை உருவாகியுள்ளது. துவக்கு தூக்கிய தமிழ் இளைஞர்களை எவராக இருந்தாலும் அவர்களை நம்பவோ, அவர்களை பாதுகாக்கவோ மக்கள் இன்று தயாராக இல்லை.

இந்த மாற்றத்தின் உச்சக்கட்டமாக இன்று விடுதலையின் பெயரால் அழிவுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் புலிகள் என்று மக்கள் வெளிப்படையாக கூறுவதைக் கேட்கமுடிகிறது. இதற்கு பெரும் உதாரணமாக மன்னார் மடுதேவாலயத்தில் உயிர் காக்க ஓடிவந்து தஞ்சம் புகுந்துள்ள தமிழ் மக்கள் கூறும் வாக்குமூலங்கள் சான்றாக இருக்கின்றன.

மடுதேவாலயத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அங்கு அகப்பட்டிருக்கும் மக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மீட்கவுமாக படையினர் நடத்திவரும் தாக்குதல்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள இடம்பெயர்ந்த மக்கள் மடுதேவாலயத்தில் தஞ்சம் புகுவதற்காக ஓடியபோது அவர்களைப் புலிகள் தடுத்துள்ளனர், மடுதேவாலயத்திற்குப் போக வேண்டாம் என்று கூறியுள்ளனர். இதுபற்றி தேவாலய நிர்வாகத்தினர் புலிகளிடம் கேட்டபோது, மடுக்கோயில் "புனிதஸ்தலம்" என்றும். அது அகதிகள் தங்கும் சத்திரமல்லவென்றும் கூறியிருக்கின்றனர்.

இந்தத் தகவலை தேவாலய நிர்வாகத்தினரே வெளிப்படையாகக் கூறி இருக்கின்றனர். புலிகளின் தடுப்பையும் மீறி மடுதேவாலயத்துக்கு ஓடிய சிலரைப் புலிகள் தாக்கியதாகவும் மக்கள் அதையும் எதிர்த்து தமது பிள்ளைகளுடன் மடுதேவாலயத்தக்கு ஓடி வந்துள்ளனர். ஏற்கனவே சுமார் 10000 பேர் மடுக்கோயிலில் தஞ்சம் புகுந்துள்ளனர். தேவாலயத்தில் வளாகத்துக்குள் கடந்த வருடம் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் மடுதேவாலயப்பகுதி பகுதி, யுத்த சூனியப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தப் பிரதேசத்தில், படையினரோ, புலிகளோ ஆயுதங்களுடன் நடமாட முடியாது என்பதை இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே மடுதேவாலயத்தில் போய் தஞ்சமடைவது தான் தற்போதைக்குப் பாதுகாப்பானது என்று மக்கள் நம்புவது நூற்றுக்கு நூறு



புலிகளால் பிடிக்கப்பட்ட தமது மகளை மீட்டுத்தருமாறு கதறியழும் தாயொருவரைப் படத்தில் காணலாம்.

வீதம் சரியானதாகும். இல்லையேல் தாக்குதல்கள் நடக்கும் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து மடுதேவாலயத்துக்குப் போக ஏன் புலிகள் தடுக்க வேண்டும்? மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் போகக் கூடிய இடத்துக்குச் செல்ல அனுமதிக்காது வன்னிக்குள் வரவழைத்தால், அது தமக்குப் பாதுகாப்பானது. இதற்கு மேலதிகமாக மக்கள் வன்னிக்குள் அகப்பட்டால் பிள்ளைகளை இயக்கத்துக்குப் பிடித்துக் கட்டாயப் பயிற்சிகளை வழங்கவும் வசதியாக இருக்கும் என்பதுவே புலிகளின் திட்டமாக இருக்கிறது. ஆகவேதான், புலிகள் தங்களை மடுவுக்குப் போக விடாமல் தடுக்கின்றனர்.

ஆனால் புலிகளிடம் எங்கள் பிள்ளைகளைப் பலிகொடுக்க நாங்கள் தயாரில்லை. எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றித் தாருங்கள் என்று பெற்றோர்கள் கூறுகின்றனர். எனவே தமது பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொள்வதோடு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மடுப் பிரதேசம் வந்த பிறகு அங்கிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று விடமுடியும் என்பதற்காகவும் புலிகளின் தடைகளையும் மீறி மக்கள் மடுதேவாலயத்துக்குச் சென்றனர். அங்கு அகதிகளின் எண்ணிக்கை சுமார் 15000மாக அதிகரித்தது.

இதுபற்றி கருத்துக் கூறிய தேவாலய நிர்வாகிகள், புலிகள் கூறுகின்ற கூற்றை மறுத்தனர். இது தேவனின் ஆலயம். மக்களுக்கு நல்ல செய்தியை மட்டுமல்ல, பாதுகாப்பையும் வழங்க வேண்டிய கட்டாயம் எமக்கு இருக்கின்றது. மக்களை ஆபத்திலிருந்து காப்பதும், பராமரிப்பதும், தேவாலயத்தின் புனிதத்தைக் கெடுத்து விடுவதாகவோ சத்திரமாக்கிவிடுவதாகவோ அமையாது என்று கூறினார். இந்தக் கருத்தை வெளியில் மக்களைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் கூறிய தேவாலய நிர்வாகத்தில் ஒருவரான எமிலாயான் பிள்ளை பாதிரியார் (21.03.07) அன்று தமிழோசைக்கு கருத்துச் சொன்ன அடுத்த நாள் 22.03.07 அன்று புலிகளால் தாக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலானது கண்டனத்துக்குரியது. ஆனால் இந்தச் சம்பவம் குறித்து சக ஊடகங்களோ அரசியல் பிரதிநிதிகளோ, மூச்சுக் காட்டாமல் இருந்தது ஆச்சரியமே. உண்மையில் புலிகள் மீது விரோத மனப்பான்மையுடன் பாதிரியார் இதைச் சொல்லியிருக்கமாட்டார். மக்களை மடுதேவாலயத்துக்கு வர புலிகள் தடையாக இருக்கக்கூடாது என்ற கருத்துப்படவே சொன்னார். பாதிரியாருக்கே இந்த நிலை என்றால் - சாதாரண மக்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரிந்த விடயமே. மக்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுபட்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வர விரும்புவதன் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு வாகரையில் ஜனாதிபதிக்கு மாலை அணிவித்ததற்காக குருக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதும், மக்களை தடுக்காதீர்கள் என்றதற்காக பாதிரியார் தாக்கப்பட்டதும் போராட்டம் எந்த திசையில் செல்கிறது, மக்கள் ஏன் வெறுக்கிறார்கள் என்பதற்கும் தமது பிள்ளைகளை இனியும் கொலைக்களம் அனுப்பாமல் பாதுகாத்துக் கொள்ள மக்கள் ஏன் விரும்புகிறார்கள் என்பதற்குப் பொருத்தமான உதாரணமாகும்.

இனி, எந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தார்கள், படையினரின் நகர்வுகள் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டது என்பதை சுருக்கமாக பார்க்கலாம்.

மடுதேவாலயத்தைச் சுற்றி வளைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான தாக்குதல் திட்டம் வவுனியாவிலிருந்து இரண்டு முனையில் படை நகர்வைச் செய்வதனூடாக எடுக்கப்பட்டது.

வவுனியா வீதி தம்பனைச் சந்தியிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தம்பனை வரையான ஒரு நகர்வைப் படையினர் செய்தனர். இப்போது மேலும் முன்னேறி பெரிய பண்டிவிரிச்சான் சென்று விட்டால் அடுத்து மடுவுக்குப் போய் விடலாம். இதேபோல வவுனியாவிலிருந்து பெரியபண்டிவிரிச்சானுக்குக் கிழக்காகவும் ஓமந்தைக்கு இடையாகவும் மடுவை நோக்கிய ஒரு நகர்வைச் செய்த படையினர், இரணை இலுப்பைக் குளத்தைச் சென்றடைந்தது தற்போது அங்கு நிலைகொண்டுள்ளனர். இங்கிருந்து பூம்புகார், விளாத்திக்குளம், பாலம்பிட்டி, விளாத்திக் குளம், விநாயகர் குளம், பாலைத்தீவு, தட்சணா மருதமடு, கீரி சுட்டான் ஆகிய அடுத்தடுத்த கிராமங்களைக் கடந்து மடுவுக்குப் போவதும் இரண்டாவது நகர்வின் திட்டமாக உள்ளது. இந்த நகர்வுக்கு முன்னதாகவும், நகர்வின் போதும் குறிப்பிட்ட கிராமங்களிலிருந்தே சுமார் 5000 மக்கள்

அலசுவது

**- மதியூகி -**

இடம்பெயர்ந்தனர். மடுவுக்குப் படையினர் வந்துவிடக்கூடிய தூரத்தில் இருப்பதாக தேவாலயத்தைச் சூழவுள்ள பண்டி விரிச்சான், கீரி சுட்டான், பாலம்பிட்டி, குறுவில்வான் ஆகிய பகுதிகளையும் மடு வீதி, சின்னப் பண்டிவிரிச்சான் பகுதியையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டால் அங்கு அகப்பட்டிருக்கும் மக்கள் இடம்பெயர்ந்து சென்று விடுவார்கள். இந்த முயற்சி வெற்றியளித்து புலிகள் மடுப்பகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டால், மடு கை விடப்பட்ட நிலையில் புலிகளின் அடுத்த முன்னரங்காக இருக்கப்போவது பரப்புக்கடந்தான், பெரியமடு தவிர இரணை இலுப்பைக்குளத்துக்கு கிழக்காகவும் மேற்காகவும் உள்ள பகுதிகளாகவே இருக்கும்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

# அதிரடி அய்யாத்துரை



**ரெண்டெழுத்தார்** விமானத்தில வந்து கடந்த 26ஆம் திகதி அதிகாலையில தாக்குதல் நடத்தினது பாதுகாப்புத் தரப்புக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கெண்டதை நான் சொல்லித்தான் நிரூபிக்க வேணுமெண்டதில்லையுங்கோ. அதில ஒரு பகிடி பாருங்கோ, உது டெஸ்டிங்தான். இனியும் எங்கட பகுதியில வந்து உவை தாக்கிச்சினமெண்டால் நாங்களும் உப்பிடிப்புகுந்து தாக்குவம் எண்டு சொல்லி இருக்கினம் ரெண்டெழுத்தார். சொன்னால் சொன்ன மாதிரி வருவினமோ, இல்லையோ எண்டது ஒருபக்கமிருக்கட்டும். முக்கியமான சில பேர் ஏதோ தலைக்கு மேலாலை ஆபத்து வந்திட்டுது எண்டு அடிக்கொரு தடவை ஆகாயத்தைப் பாக்கினம். இன்னும் சில பேருக்கு இரவுப் பட்டால் என்ன நடக்குமோ எண்டும் யோசனையாக இருக்குதாம். சில படை அதிகாரிகள் பொறுமை இழந்து ரெண்டெழுத்தார் அவ்வளவு துணிச்சல் உள்ளவை எண்டால் ஒருக்கால் பகலில வந்து பார்க்கட்டுமே அப்ப தெரியும் எங்கட மூவிங் எண்டு சொல்லினமாம். உதுக் கிடையில ரெண்டெழுத்தாரின்ர பணத்துக்கு வேலை செய்யிறவையள் தொடர்பாக பலத்த தேடல்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்குதாம். ரெண்டெழுத்தாரின்ர விமானம் வந்து போன அண்டைக்கு ராடாரில இருந்து பார்த்துக்கொண்டிருந்தவை பாதுகாப்பைப் பார்க்காமல் என்ன படம் பார்த்துக் கொண்டே இருந்திச்சினம் எண்டும் சிலபேர் கேள்விமேல கேள்வியாக் கேட்டுக் குடைஞ்சு கொண்டு இருக்கினம். உதுகளைப் பார்த்தால் ரெண்டெழுத்தார் விமானத்தில வந்து போட்டது ரெண்டு குண்டு தான். ஆனால் அதாலை, உளவியல் ரீதியாக பல குண்டுகள் வெடிச்சுட்டுது. ரெண்டெழுத்தாரிற்ற இலகு ரக விமானம் இருக்குது கவனமெடுங்கோஎண்டு தலையில அடிச்சுக் கொண்ட போதெல்லாம் காதில எடுத்துக்கொள்ளாமல், ஆ...வன்னியில ரெண்டெழுத்தாரின்ர விமானம் மேல எழும்புச்சுது எண்டால் எங்களுக்குத் தெரிஞ்சுடும் நாங்கள் பின்னிப் பிரிச்சுப் போடுவம் எண்டு வாய் வீரம் பேசினவை இப்ப என்ன சொல்லப் போகினம் எண்டு சனம் கேக்குதுகள். அவை உப்பதான் விசாரணையைத் தொடங்கி இருக்கினமாம். எப்ப முடியிறது. பதில் எப்பக் கிடைக்கிறதுங்கோ...

**கூத்தமைப்பு** எம்.பி.மார் மீன்பாடும் நாட்டுக்குப் போய் அவலப்படும் மக்களைப் பார்க்கயில்லை. சும்மா தலைநகரில நிண்டு ஸ்டேட்மெண்ட் விடுகினம் எண்டு குற்றச்சாட்டுக்கு மேலை குற்றச்சாட்டுக்கள் வந்த வண்ணம் இருக்கிறதாலை, தங்களுக்கு பாதுகாப்புத் தந்தால் மீன்பாடும் நாட்டுக்குப் போய் பார்த்துப் போட்டுத் திரும்புவம் எண்டு காதும் காதும் வச்ச மாதிரி அதிகாரத் தரப்பாரிற்றக் கேட்டும் பார்த்திச் சினம். பிறகு உந்த குசுகுசுப்பு வெளியால கசிஞ்சு போட்டுது எண்டு பயணத்தை போஸ்போன் பண்ணிச்சினம்.

உதுகளுக்கிடையில கடந்த வாரம் அயல் நாட்டு இராஜதந்திரியையும் போய் சந்திச்சிருக்கினம். உந்த சந்திப்பில சேனாதியாரும், சம்பந்தமானவரும் மட்டும்தான் போயிருக்கினமாம். என்ன விஷயம் கதைச்சியள் எண்டு கேட்டதுக்கு குறிப்பாக மீன்பாடும் நாட்டின்ர கரண்ட் சிச்சுவேஷன் எப்படியிருக்குது எண்டும், ரெண்டெழுத்தாரின்ர போக்குகள் பற்றியும் தெரிஞ்சு கொள்ளிறதுக்காக உவையனின்ர நாடி பிடிச்சுப் பார்க்கத் தான் உந்தச் சந்திப்பு நடந்ததாம். உந்தச் சந்திப்பை ஊடகங்களுக்குச் சொல்ல வேண்டாம் எண்டும் சொல்லப்பட்டதாம், ஏற்கனவே சம்பந்த மானவரின்ர நாடித்துடிப்பு படு வீக்காக இருக்கேக்க அவரின்ர நாடித்துடிப்பைப் பிடிச்சுப் பார்த்து அயல்நாட்டுக்காரர் தமிழ் மக்களின்ர நாடித்துடிப்பு ரொம்ப வீக்காகத்தான் இருக்குது எண்டு நினைச்சுக் கொண்டிருப்பினம் எண்டு குசும்புக்கார கூத்தமைப்பு எம்.பி. ஒருவர் விளையாட்டாகச் சொல்லிச் சிரிக்கிறாருங்கோ. அவர் யாரெண்டு சொன்னால் அடுத்த தடவை சந்திக்கேக்க சிரிக்கமாட்டார். முறைப்பார் விடுங்கோ. பாவம் பிழைச்சுப் போகட்டும், நக்கல் நல்ல தம்பிக்கு வாழ்த்துங்கோ...

**மலையகத்தில** அரச செலவில நடக்கிற அபிவிருத்தித் திட்டங்கள் மிகப் பரவலாக நடைபெறுகிறதோ எண்டு உங்க இருக்கிற முன்னாள் வாத்தி ஒருவரைப் பிடிச்சுக் கேட்டனான். எதைப் பற்றிக் கேக்கிறீங்கள் எண்டு கேட்டார். இல்லையுங்கோ, உங்கத்தைய அமைச்சர்கள் அடிக்கடி பல இடங்களுக்கும் விஜயம் செய்யினமெண்டு அடிக்கடி செய்திகள் சொல்லுது. அப்புடியெண்டால் மலையகத்தின்ர அபிவிருத்தியில உவையள் முன்னரை விடவும் சுறுசுறுப்புக் காட்டினமோ எண்டுதான் கேட்ட நான் எண்டு சொன்னதுக்கு, வாத்தியார் ஒரு சிரிப்போடை என்ன சொன்னவர் தெரியுமோ?

அமைச்சர்மார் கூடிப்போயிட்டினம், வெவ் வேறு கட்சிகளில இருக்கிறவையும் சரி, தனித்தனியா இருக்கிறவையும் சரி, எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள் எண்டமாதிரி, எல்லோரும் மலையக அமைச்சர்கள் எண்டதாலை தங்கட பொலிரிக்ஸ் ஸுக்காக அடிக்கடி விஜயம் செய்யினம். எப்புடியெண்டால் கொழும்பில இருந்து அவையின்ர வீட்டுக்குப் போனாலும், அது அந்த இடத்துக்கு அவர் விஜயம் செய்யிறார் எண்டுதான் செய்தி சொல்லினம். இப்பவெல்லாம் அமைச்சர்மார் வீட்டில இருந்து விருந்துக்குப் போனாலும் அது விஜயம் எண்டு ஆகிட்டுது. ஒருவர் விஜயம் செய்தால் மற்றவையும் தங்களுக்கும் வாகனம் இருக்கு, தங்களிட்டையும் ஆக்கள் இருக்கினம் எண்டு அவையும் ஒரு பந்தா காட்டிக்கொண்டு சொந்த ஊருக்கு வந்து போகினம். உதுகளைத் தான் ஊடகங்கள் விஜயம் எண்டு ஊதித்தள்ளினம் எண்டு வாத்தி வாங்கிக் குத்துறாருங்கோ. எல்லா அமைச்சர்மாரும் வாத்தியின் தப்புக்கணக்குக்குள்ள, சேத்தியில்லை எண்டு நான் நினைக்கிறேனுங்கோ...... வ்.

**திருவாணமலையிலையும்**, யாழ். குடா நாட்டிலையும் ஒரே தடவையில இரண்டு மூண்டு கொலையள் எண்டு நடக்குதுங்கோ. யார் சுடுகினம், யார் சாகினம் எண்ட எந்த விளக்கமும் தெரியாமல் சனம் இருக்குதுகள். எப்பவாவது திடீரெண்டு ஒரு சம்பவம் நடந்துதெண்டால் அதைக் கட்டுப்படுத்துறது சிரமமெண்டு சொல்லலாம். உது என்னடாவெண்டால் பட்டியல் தயாரிச்சு வைச்சு சுடுமாப்போலை தொடர்ச்சியாகத் தினமும் தீர்த்துக் கட்டிக் கொண்டு இருக்கினம். உதுகளை தடுத்தமாதிரியோ, யாரைம் பிடிச்சமாதிரியோ இல்லாமல் காவல் துறையினர் இருக்கினம். உவை என்ன செய்யினம். இத்தனை கொலைகளில ஒண்டைக்கூட தடுத்து இருக்க முடியாதோ. ஒரு சம்பவத்துக்கான குற்றவாளியவா கைது செய்திருக்க முடியாதோ எண்டு சனம் கேக்கினம். சனம் கேக்குதெண்டது ஒரு பக்கம் இருந்தாலும் காவல் துறை, சட்டம், ஒழுங்கு எண்டு சொல்லிக் கொண்டு திரியிற வைக்கு உந்தக் கொலைகள் பற்றி கவலை இல்லையோ. ஒரு முன்னேற்றம் கூடவா ஏற்படவில்லை. உதாரணத்துக்கு, உலகக்கோப்பைக்காக ஜமைக்கா போன பாகிஸ்தான் பயிற்சியாளர் இறந்து கிடந்தார் எண்டதோடை விடாமல், இறந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா, கொலையெண்டால் யாருக்குத் தொடர்பிருக்கும், யார் யாரைச் சந்தேகப்பட வேணும், என்ன காரணமாக இருக்கும் எண்டு பல முனைகளில் விசாரணை நடத்தினமே. ஒரு கொலைக்கே இத்தனை விசாரணை எண்டால், நம்ம நாட்டில நடக்கிற தொடர் கொலைகளுக்கு என்னங்கோ செய்திருக்க வேணும். துரதிர்ஷ்டம் ஒண்டையும் இவை செய்யினமில்லை எண்டதை சிம்பிளா யோசிச்சுப் பாருங்கோ.....

# மனம்

**உலகிலேயே** மிகவும் சுத்தமாக இருக்க வேண்டிய இடம் எது என்று என்னைக் கேட்டால், மனிதனின் மனம் என்றுதான் சொல்வேன். மனதுக்குள் அழுக்குகளை சேர்த்துக் கொண்டிருக்கும் ஒருவர், எவ்வளவுதான் புனிதம் பற்றிப் பேசினாலும் அது அழுக்குத்தான். குழந்தைகளைத் தவிர, எவரின் மனமும் சுத்தமாக இருக்க வாய்ப்பு இல்லை. ஆகையால் தெய்வம் குழந்தைகளின் மனதில் குடியிருக்கிறது.

மனம் என்றதும் எல்லோரும் இதயப் பக்கமாக நெஞ்சைத் தொட்டுக் கொள்கிறோம். எண்ண அலைகளை ஏற்படுத்துகிற மூளையில் தான் மனம் இருப்பதாக விஞ்ஞானம் சொல்கிறது. மனிதனை வெட்டிக் கூறு போட்டாலும் இது இதயம், இது மூளை என்று காட்ட முடியுமே தவிர இது மனம் என்று எதையும் காட்ட முடியாது. இந்தத் தேடல் ஒரு பக்கமிருக்கட்டும்.

தெய்வ சிந்தனையும் - அரக்கச் சிந்தனையும் மனதின் ஒரே இருக்கையில் எப்படி சம தளத்தில் இருக்கமுடியும். இதுதான் என் கேள்வி? தெய்வமும் - தீய சக்தியும் குடியிருக்கக் கூடிய அற்புதமானது இம் மனித மனம் என்றால், பாவம் மனிதன் வெறும் ஏவல் மிருகம். தெய்வம் ஏவும்போது நன்மையைச் செய்கிறோம். தீயது ஏவும்போது தீமையைச் செய்கிறோம். தீயதை தாழ்ந்த இடத்திலும், தெய்வத்தை உயர்ந்த இடத்திலுமாக நினைத்துக் கொள்ளும் மனிதனின் அறியாத்தனத்தை நினைத்து வருந்துவோம்.

மனம் சொல்கிறபடி மனிதன் வாழ்கிறான். மனிதனின் சுயத்தைத் தீர்மானிப்பது மனம். மனதில் அமைதி இல்லாத போது, மனிதன் தவறுகளைக் கூட மிகப் பழக்கப்பட்டது போல் செய்கிறான். தியானம் என்பதெல்லாம் மனதை ஒரு நிலைப்படுத்தும் கட்டாய முயற்சிதான். உலக நடப்புகளை மறந்து முதலில் ஒரு நிமிடமாவது இருந்து விட வேண்டும் என்று மனதிடம் நான் மன்றாடியிருக்கிறேன். மூச்சு விடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டும், ஒரே ஒரு புள்ளியை மட்டும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டும், கண்களை மூடிக்கொண்டும், இப்படி பல முறைகளைக் கையாண்டு தோற்றுப் போயிருக்கிறேன். இவ்வாறெல்லாம் செய்து மனதைக்கட்டுப்படுத்த முடியாது என்பது புரிந்தது. இதற்கெல்லாம் அப்பாற்பட்டு மனது தன் பணியைச் செய்து கொண்டிருக்கிறது.

இறுதி முயற்சியாக ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி மாத்திரம் நினைத்துக் கொண்டு இருந்தும் பார்த்தாயிற்று. மனம் அடங்குவதாக இல்லை. நான் ஒன்றை நினைத்தால் மனதுக்குள் இன்னொன்று





ஓடிக்கொண்டே இருக்கிறது.

நண்பர் ஒருவர் வெளிநாடு போவதாகச் சொல்லிப் போனால், அவர் போய் வீடு சேர்ந்து விட்டார்" என்ற செய்தியை மட்டும் எதிர்பார்க்க மனம் விரும்பாமல் விபத்து நடந்து அவருக்கு ஏதும் நடந்துவிட்டதாகக் கூட செய்திவரலாம் என்று மனம் நினைக்கும். ஒரே விஷயத்தை சாதகமாகவும், பாதகமாகவும் மாறி மாறி நினைத்துக் கொண்டு மனம் பாடாய்ப்படுத்தும்.

என்னுடைய மனதிடம் எனக்குப் பிடித்தது எந்தவொரு காரியத்தையும் துணிச்சலோடு முதலில் எனக்கு தெரியப்படுத்துவதுதான். பிறகு அதைச் செய்தேனா, தவறிவிட்டேனா என்பதெல்லாம் இரண்டாம் பட்சமானது. நண்பர்கள் அடிக்கடி சொல்வார்கள், நான் எந்தக் காரியத்தையும் திட்டமிடுகின்ற அளவுக்கு தொடர்ந்து முயற்சித்து முடிப்பதில்லை என்று. அதில் உண்மையும் இருக்கிறது. சில திட்டங்கள், என்னை அறியாமல் தவறுகின்றன. அல்லது என்னால் தொடர முடியாமல் போய் விடுகின்றன. சில விடயங்களைத் தெரிந்தே நான் தொடராமல் விட்டு விடுகிறேன். என்ன முடிவை நான் எடுத்திருந்தாலும் அதை செய்விப்பது என் மனதுதான். அது தீர்மானிக்கிறது நான் எதைத் தொடரவேண்டும். எதைத் தொடரக்கூடாது என்பதை. நான் என்ன செய்யமுடியும். நன்மைகளை அதிகமாகச் செய்து அதன் விருப்பத்துக்குரிய இடத்தைப் பிடித்துக் கொண்டால் தெய்வம் நம்மை வழி நடத்துகிறது. தீமைகளைச் செய்து அதில் திருப்தி காணுகின்ற போக்கு நமக்குள் மிதமிஞ்சுகின்றபோது தீய சக்தி நம்மை ஆட்டிப் படைக்கிறது. இரண்டுக்குமிடையில் மனம் போனபோக்கில் அலைந்து திரிந்து வாழ்ந்து திரிய பழகிக் கொண்டால், பைத்தியம் பிடிக்கிறது.

மனம் பற்றி உங்களை நீங்களே அடிக்கடி கேட்டுப்பாருங்கள். இந்தப் பாட்டு வரிகள் அதற்கு உதவும்.

கண்போன போக்கிலே - கால் போகலாமா?
கால் போன போக்கிலே - மனம் போகலாமா?
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?
மனிதன்போன போக்கிலே மறந்து போகலாமா?




# பிணத்தைப் பேச வைக்க முடியுமா? விஞ்ஞானிகள் ஆராய்ச்சி!

**ஒரு பெரிய** சைஸ் ஊசியைப் போட்டால், செத்துப்போன பிணம் 10 நிமிடங்களில் எழுந்து விடும், அடுத்த அரை மணி நேரத்தில் சாப்பிடத் தொடங்கி "இப்ப நான் எங்கிருக்கேன்?" என்று பேச ஆரம்பித்து வாக்கிங் கிளம்பி விடும். அதன் பிறகு மீண்டும் 60 வயசுக்கு ஆயுட் காலம்.

இது புதிய ஹொலிவுட் படக்கதை அல்ல! உலகம் முழுக்க சோடாப்புட்டி கண்ணாடியை மாட்டிக் கொண்டு நூற்றுக் கணக்கான விஞ்ஞானிகள் இரவு, பகலாக பிணங்களுடன் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிற சர்வமகா நிஜம்.

மனித உடலில் எது ஊனமடைந்தாலும் செயற்கை கருவி, பைபாஸ் சர்ஜரி வரை சரி செய்து விட முடிகிறது. விலங்குகளின் குளோனிங், டெஸ்ட் டியூப் பேபி எனப் பிறப்பின் இரகசியத்தைக் கூட நம்மவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். ஆனால், ஆதாம் - ஏவாள் காலம் முதல் உயிர் பிரிவதை மட்டும் ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு வேளை, அப்படி கண்டு பிடித்து விட்டால்.... வெரி சிம்பிள் "இப்பத்தான் உங்களை நினைச்சேன். ஆயுசு ஆயிரம் சார்" என்று சொல்ல வேண்டியிருக்கும்.

உலக விஞ்ஞானிகள் நடத்திவரும் பகீர் ஆராய்ச்சிகளை ஹார்ட் அட்டாக் வராத வகையில் சர்வ ஜாக்கிரதையாக மேலும் படிக்க ஆரம்பியுங்கள்.


அமெரிக்காவைச் சேர்ந்த பிலிக்கர் என்பவரது புகைப்படங்கள் தாம் உலகம் முழுக்க உள்ள 'விஞ்ஞானிகளை மரணத்தை வெல்ல முடியும் என்று உஷார் படுத்தியது. ஏராளமான விலங்குகளின் ஆவி பிரிவதை கடைசி நொடிகளில் கிளிக் செய்து வைத்திருக்கிறார் பிலிக்கர்.

இவரது கூட்டாளியான விஞ்ஞானி பி.டபிள்யூ.போத்தா, "கண்ணுக்குத் தெரியும் இந்த ஆவியை ஒரு டெஸ்ட் டியூப்பில் பிடித்து விட்டால் போதும், அக்குவேறு, ஆணி வேறாக ஆராய்ச்சி



செய்து மரண இரகசியத்தைக் கண்டு பிடித்து விடுவோம்'' என்கிறார்.

வாஷிங்டன், டகோமாவில் உள்ள ஐ.ஏ.என்.டி.எஸ். எனப்படும் "இன்டர்நேஷனல் அசோசியேஷன் பார் நியர் டெத் ஸ்டடீஸ்" என்ற அமைப்பு மரணங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து



வருகிறது. டாக்டர் ஜெப் தலைமையில் பலர் இதன் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

இவர்களுக்கு வேலை, யாராவது சாகப் போவதாகக் கேள்விப்பட்டால் அவருடன் கடைசி வரை இருந்து, கண்காணித்து ஆராய்ச்சி செய்வது தான்

வயிற்று வலி முதல் ஹார்ட் அட்டாக் வரை மருந்து கண்டுபிடித்த நாம் மூளைச் சாவுக்கும் மருந்து கண்டு பிடிப்பது அவசியம் என்கிறார்கள் இவர்கள்.

சாவு என்பது ஒரு சாதாரண நிகழ்வு. தேவையில்லாமல் இதன் மீது நமக்கு பீதி ஏற்பட்டு விட்டது. மரணத்திற்கு முன்னதாக முதுமைக்கு மருந்து கண்டு பிடிக்க வேண்டும் என்பது இவர்களது கருத்து.

இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் மிக்கேல் சபோம், நான் மரணத்துக்கு மருந்து கண்டு புடிச்சிட்டேன் என்று கத்துகிறார்! ஒருவரது மரணம் எப்போது தள்ளிப் போனதோ, அப்போதே மரணத்தை வென்று விட்டதாகத்தான் அர்த்தம். வேண்டுமானால் இது தொடக்கமாக இருக்கலாம் என்கிற அவர், பாம் ரெனால்ட்ஸ் என்கிற சாகக் கிடக்கிற பெண்மணிக்கு உயிர் பாலித்தவர்.


இருதயமும், மூளையும் முற்றிலும் செயலிழந்து பெரிய பெரிய டாக்டர்களால் கைவிடப்பட்டு, உடல் டெம்பரேச்சர் 60 டிகிரிக்கும் குறைவான பாம் ரெனால்ட்ஸை தனது நவீன அறுவை சிகிச்சை மூலம் உயிர் பிழைக்க வைத்திருக்கிறார் மிக்கேல்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)


## நிரூபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி
### அதிசயம் ஆனால் உண்மை







46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

**குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே**

**வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.**

**ஜேர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற வீபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-

# இன்னொருவர் பார்வையில்

"**தமிழருக்குப்** பிரச்சினை உண்டு" என்ற பிரதான தலைப்பிலும், அதன் பின்னர் தொடர்ச்சியாகப் பல்வேறு உபதலைப்புகளிலும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த ஆய்வறிக்கையைப் பார்த்து அதிர்ச்சியும் பரவசமும் அடைந்தேன். பேராசிரியர் நளின் டி.சில்வா, உதய கம்மன்பில போன்றோர் சர்வகட்சி பிரதிநிதிகள் கமிட்டிக்குச் சமர்ப்பித்த ஆவணத்திற்குப் பதிலளிக்கும் விதத்தில், முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி.எஸ்.தவராஜா இந்த ஆய்வறிக்கையை சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தமை உண்மையில் பாராட்டுக்குரியது. பேராசிரியர் நளின் டி.சில்வாவின், பச்சை வகுப்புவாதம் கக்கும் கட்டுரைகளை ஆங்கிலப் பத்திரிகைகளில் நான் பார்த்து ஆச்சரியம் அடைந்திருக்கிறேன். மிக மோசமான, கீழ்த்தரமான பாணியில் வகுப்புவாத நச்சு விதைகளைத் தூவும் வகையிலமைந்த இவரது கட்டுரைகளைப் பார்த்தபோது அவரொரு பேராசிரியரா என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது. உதய கம்மன்பிலவின் கட்டுரையைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், திரு.தவராஜா அளித்த பதில், எந்தளவிற்கு இந்த சிங்களப் புத்திஜீவிகள் இருவரும், சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இனவாதத்தைக் கக்கியிருப்பார்களென்பதை என்னால் ஊகிக்க முடிகின்றது.

ஆணித்தரமான, அற்புதமான ஆய்வறிக்கையை ஆதாரங்களுடன் சமர்ப்பித்தமைக்காக திரு.எஸ்.தவராஜாவிற்கு முதற்கண் எனது பாராட்டைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இதுகாலவரை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி குறித்து நான் ஒரு வித்தியாசமான கருத்தையே கொண்டிருந்தேன். சிங்கள அரசாங்கங்களின் இனவாதத்திற்குத் துணை போகும் கட்சியென்றே கருதி வந்தேன். ஆனால், இந்த ஆய்வறிக்கயைப் பார்த்தபோது, எந்தளவிற்கு தமிழ் பேசும் மக்களின் நலனை ஈ.பி.டி.பி. முன்னிலைப்படுத்தி, செயற்பட்டு வருகின்றதென்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. தமிழர்கள் தொடர்பான வரலாற்றை மகாவம்சம் எவ்வாறு திரிபுபடுத்தியது என்பது முதல், தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தத் தூண்டப்பட்ட காலம் வரையிலான உண்மைகளை மிகத் தெளிவாக அறிக்கை விளங்கப்படுத்தியிருந்தது. குருசீடப் பரம்பரைப் பாணியில், கர்ண பரம்பரைக் கதையாக கட்டவிழ்த்து விடப்பட்ட பொய்களை, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், தாதுசேன

## ஒரு வரலாற்றுப் பொக்கிஷம்

*-மெயின் வீதி, யாழ்ப்பாணம்.*

மன்னனின் சகோதரனான மகாநம தேரர் தமிழர்களை இந்நாட்டின் பூர்வீக குடிகளல்லர் என்று கூறியிருந்ததை நிராகரித்த விதம் பாராட்டுக்குரியது. இந்த நாட்டின் வரலாறு தெரிந்த காலம் தொட்டு தமிழ் மக்களும் இந்த நாட்டில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்ற உண்மையை, அழகாக விரித்துச் சொல்லியிருக்கின்றீர்கள்.

பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள், கிராமங்களை ஒன்றிணைத்த ஆட்சி முறைகளை அல்லது இராஜதானிகளை ஏற்படுத்தி, அவற்றினூடாக தமது மொழி, கலாசார, சமூக, அரசியல் அடையாளங்களை வரலாற்றுக் காலம் பூராவும் பேணி வந்திருக்கிறார்கள் என்பதை ஆதாரத்துடன் விளக்கியிருக்கின்றீர்கள். அது மட்டுமல்ல தெற்கு, அல்லது சிங்கள மன்னர்களுடன் யுத்தம் நடத்திய காலங்களும், சமாதான சகஜீவனமாக வாழ்ந்த காலங்களும் இருந்திருப்பதை விளங்கப்படுத்தியுள்ளீர்கள். சிங்கள மன்னர்களுக்கு நெருக்கடி நேர்ந்த காலங்களில், தமிழ் மன்னர்கள் கைகொடுத்து உதவியிருக்கிறார்கள் என்பதையும் விளங்கப்படுத்தியிருக்கிறீர்கள். யாழ்ப்பாணத்து, கடைசி மன்னனான சங்கிலியன், 1545ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்களுக்கு எதிராகப் போராடுவதற்காக சீதாவாக்கை மற்றும் கண்டிய மன்னர்களுக்கு ஆதரவாக கோட்டேக்கு படைவீரர்களை அனுப்பியதை உதாரணமாகக் காட்டியுள்ளீர்கள்.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் தமிழ் மக்கள் வாழ்ந்த விதம் பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சின் கீழ், 1833இல் ஐந்து நிர்வாக மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டமை பற்றியும், அதன் கீழான அரசியல் அதிகாரப் பகிர்வு முறை பற்றியும் விளங்கப்படுத்தியிருந்தீர்கள். டொனமூர், சோல்பரி, 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு ஆகியவை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய சாதக, பாதகங்கள் பற்றியும் விளங்கப்படுத்தப்பட்டமை பாராட்டுக்குரியது.

தேசிய இளைஞர் காங்கிரஸ், யாழ்.வாலிபர் காங்கிரஸிற்கு அளித்த உறுதிமொழியிலிருந்து பின்வாங்கியமை, ஐம்பதிற்கு ஐம்பது கோரிக்கை, தனிச் சிங்களச் சட்டம், தரப்படுத்தல் போன்றவை பற்றியெல்லாம் ஆய்வறிக்கை குறிப்பிட்டிருந்தது. இனத்துவப் பெரும்பான்மை ஆட்சி முறை, அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் பேசும் மக்களுக்கு அநீதியையே இழைத்து வந்திருக்கின்றது. மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்ட விதம், தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களில் நம்பிக்கை வைக்கத் தலைப்பட்டமை போன்றவை பற்றி, வரலாற்று ரீதியான ஆதாரங்களுடன் தரப்பட்ட விளக்கங்களும் பாராட்டுக்குரியவை. சுருங்கச் சொன்னால், சேகரித்து வைக்கக்கூடிய ஒரு வரலாற்று ஆவணம் என்று இதனைக் குறிப்பிடலாம்.

*இப்படிக்கு,*
*சங்கரப்பிள்ளை ரமணன்*

**சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. சார்பில், முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி., எஸ்.தவராஜா சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து சேர்ந்தன. அனைத்துக் கடிதங்களையும் பிரசுரிக்க இடவசதி போதாது என்பதால், தேர்ந்தெடுத்த சில கடிதங்களை மட்டும் பிரசுரிக்கிறோம்.**

**(ஆ-ர்).**



## தமிழீழம் காண்போம்

*ஆ.கருணாகரன்*
*2ஆம் வட்டாரம்*
*புதுக்குடியிருப்பு*
*07.03.07*

**ஈழமக்கள்** ஜனநாயகக் கட்சியை, மாற்றுக் கட்சி என்றுதான் தமிழ் மக்கள் சொல்வதுண்டு. அதாவது, தமிழ் மக்களுக்கு எதிராக மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்கள் என்பதே அதன் அர்த்தம். ஈ.பி.டி.பி.கூட தன்னை மாற்றுக் கருத்துக் கொண்ட கட்சியென்றே கூறி வருகின்றது. புலிகள்தான், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுபவர்கள். அதனால்தான் அவர்களை ஏகப்பிரதிநிதிகள் என்று தமிழர்கள் அழைக்கின்றார்கள். ஆகவேதான் 22 எம்.பி.க்களை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். புலிகள் இயக்கத்தின் கொள்கைகளை ஆதரித்து தேர்தலில் நின்றபடியால்தான், தமிழரசுக் கட்சி சார்பில் 22 எம்.பி.க்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். பிரபாகரன் தமிழ் மக்களின் உன்னதமான தலைவர். அவரின் காலத்திலேயே தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும். நாம் சுதந்திர தமிழீழத்தில் வாழுவோம். நீங்கள் வெறும் அறிக்கைகளை சமர்ப்பித்துக் கொண்டிருங்கள். உங்களுக்கு தமிழ் மக்களின் வரலாறு துரோகிப் பட்டத்தை நிரந்தரமாக சூட்டப் போகின்றது. இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?

***பதில் :–*** இந்தக் கடிதம் ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சியின் கருத்துகளுக்காக அதன் மத்திய குழு உறுப்பினர் பேரின்பநாதன் சுதாகரனிடம் கையளிக்கப்பட்டது. அவர் தந்த பதிலை அருகே தருகின்றோம்.

## தமிழ் மக்களின் தலைகளில் தப்புத் தாளங்கள்!

**உங்கள்** கருத்துக்களுக்காக நீங்கள் கோபிப்போம் என்று நீங்கள் நினைத்தால் அது தவறானது. நீங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களைச் சொல்வதற்கு சகலவிதமான உரிமைகளும் உண்டு. "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது" என்று சொல்லுவார்கள். அந்த விதத்தில்தான் உங்கள் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. மற்றவர்களின் பேச்சுத் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், வாழும் சுதந்திரம் ஆகியவை மதிக்கப்பட வேண்டுமென்று நம்புபவர்கள் நாங்கள். உங்கள் மூளைக்குள் திணிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களைத் தவிர வேறு கருத்துக்களை மதிக்கக் கூடாது என்று துப்பாக்கிகள் மிரட்டுவதை நாம் அறிவோம். நாம் ஜனநாயகம், பன்முகத் தன்மை, ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பவர்கள். நீங்கள் கூறுவதைப் போன்று நாங்கள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள்தான். ஆனால் நீங்கள் அர்த்தப்படுத்தும் விதத்தில், தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் நாங்கள் அல்லர். தமிழீழம்தான் தமிழ் மக்களுக்கு விடிவு தரும் என்பது உங்கள் நம்பிக்கையாக இருக்கலாம். அல்லது உங்கள் மூளைக்குள் வலிந்து திணிக்கப்பட்ட ஒன்றாகவும் அது இருக்கலாம். தமிழீழம், அதாவது யுத்தத்தின் மூலம் நாட்டைப் பிரிப்பது என்பது தான் உங்கள் தலைவர் பிரபாகரனின் கருத்து. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் பேச்சுவார்த்தையூடாக தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு நீதியான, கௌரவமான, நீடித்த தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். சுருங்கச் சொல்வதானால், தமிழீழமா? அல்லது ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சியா? என்பதே அடிப்படைப் பிரச்சினை. இந்த இலக்குகளை அடைவதற்கான மார்க்கம் யுத்தமா? அல்லது பேச்சுவார்த்தையூடான தீர்வா? என்பது மற்றொரு முரண்பாடு. வரலாற்றிலிருந்து சில பாடங்களை நான் உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

புலிகள் இயக்கம் தனது கடந்த கால மற்றும் நிகழ்கால நடவடிக்கைகள் ஊடாக தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளை மட்டுமல்ல, சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தியையும் தேடிக் கொண்டுள்ளது. தமிழ் மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் ஆதரவும் ஒத்தாசையும் இல்லாமல் தமிழீழத்தைக் காண முடியாது. தமிழீழம் என்பது வெறும் கானல் நீர். இந்த நாட்டில் இடம்பெற்ற சகல இனப் படுகொலைகளின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களை விட, பல பத்து மடங்கு தமிழ் மக்களை கொன்றொழித்தவர்கள் புலிகள். சிங்களப் படையினரால் கொல்லப்பட்ட தமிழர்களை விட, மிக அதிகமான தமிழர்களைக் கொன்றவர்கள் புலிகள். ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்.போன்ற சக அமைப்புகளையும் தாக்கியழித்தவர்கள் புலிகள். தமிழீழ இலட்சியத்திற்காகவே ஆயுதம் ஏந்திய இந்தச் சகோதர இயக்கங்களின் ஆயிரக் கணக்கான இளைஞர்களைத் துடிக்கப் பதைக்கக் கொன்று குவித்தவர்கள் புலிகள்.

தமிழீழம்தான் தேவையென்று புலிகள் அன்று நினைத்திருந்தால், ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இந்த இயக்கங்கள் அனைத்தையும் ஐக்கியப்படுத்தி, அரச படைகளுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றிருக்க முடியும். சகோதரப் படுகொலைகளில் ஈடுபட உத்தரவிட்ட பிரபாகரனால், தமிழ் மக்களின் விடிவிற்கல்ல, முடிவிற்கே வழி சமைக்க முடியும்.

தமிழ் மக்களின் பெரும் தலைவர் அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் அரசியல்வாதிகளை புலிகள் இயக்கம் கொன்று குவித்திருக்கின்றது. மனோ மாஸ்ரர், விஜிதரன், செல்வி போன்றவர்களையும் பலியெடுத்தவர்களே புலிகள். பாரிஸ் சபாலிங்கம், கேதிஸ் லோகநாதன் போன்ற இன்னும் பலரையும் கொன்றிருக்கிறார்கள். பிரபலமான தமிழ் ஊடகவியலாளர்கள் பலரைக் கொன்றவர்களும் புலிகள் தான்.

புலிகளின் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் அடிமைகளைப் போல் வாழ்கின்றார்கள். புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக அவர்களால் வாய் திறக்க முடியாது. பேனா பிடித்து எழுத முடியாது. வரி, மிரட்டிப் பணம் பறித்தல், கப்பம் பெறுதல் போன்ற இன்றைய பாதாளச் செயற்பாடுகளுக்கு முன்னோடி உதாரண புருஷர்களாகத் திகழ்ந்தவர்களும் புலிகளே. தனிப்பட்ட ரீதியான தாக்குதல்களை நடத்துவது எமது நோக்கமல்ல. இருந்தாலும் சொல்லித்தான் ஆகவேண்டி இருக்கிறது. உமாமகேஸ்வரனின் காதலி ஊர்மிளாவைச் சுட்டுக் கொல்ல உத்தரவிட்ட பிரபாகரன், யாழ்.பல்கலைக் கழகத்தில் உண்ணாவிரதமிருந்த மதிவதனியைக் கடத்திச் சென்று கல்யாணம் முடித்ததில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை ஒரு கணம் யோசித்துப் பாருங்கள். 22 எம்.பி.க்கள் தெரிவு செய்யப்பட்டமை பற்றிக் கூறியிருந்தீர்கள். தேர்தல் மோசடி, கள்ள வாக்குகளாலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனரென்று தேசிய, சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்தன.

புலிகள் இயக்கதிதிற்குள் முரண்பட்டுக் கொண்ட நூற்றுக் கணக்கான இளைஞர் யுவதிகள், மாத்தையாவைப் போல் புலித் தலைவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வடக்கிலிருந்து எழுபத்திஐயாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசும் முஸ்லிம்களை விரட்டியவர்கள் புலிகள். அவர்களின் உடைமைகளையெல்லாம் அபகரித்துக் கொண்டு விரட்டியவர்கள், கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல்களுக்குள் புகுந்து, நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களின் உயிர்களை வேட்டையாடினார்கள். வேறொரு வார்த்தையில் சொல்வதானால், வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தவர்களும் அவர்களே.

தமிழ் பேசும் மக்களுக்கு நீண்டகாலப் பிரச்சினைகளும் உண்டு. குறுகிய காலப் பிரச்சினைகளும் உண்டு. இவற்றையெல்லாம் தீர்க்கின்ற நோக்கம் புலிகளுக்கு என்றுமே கிடையாது. கிழக்கில் தமிழ் மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி அரச படைகள் மீது தாக்குதலை ஆரம்பித்த புலிகள், படையினர் பதிலடியை ஆரம்பித்ததும், ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழ் மக்களை நட்டாற்றில் தவிக்க விட்டு விட்டு தப்பியோடி விட்டார்கள். முகமாலையில் தாக்குதலை நடத்தி, ஏ-9 பாதையை மூடவைத்து, யாழ்.குடா நாட்டு மக்களை அவஸ்தைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவோடு தேன்நிலவு நடத்தி, கொஞ்சிக் குலாவி விட்டு, அவரைக் கொன்றனர். மாபெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்றதன் மூலம் தமிழக மக்களின் எதிர்ப்பை மட்டுமல்ல, முழு இந்திய மக்களின் எதிர்ப்பையுமே சம்பாதித்துக் கொண்டார்கள் புலிகள். மேலே கூறப்பட்ட காரணங்களிலிருந்து புலிகள் நடத்துவது விடுதலைப் போராட்டமா அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளா என்பதை தமிழ் மக்களால் புரிந்து கொள்ள முடியும்.

விடுதலைப் போராட்டம் என்றால், அதற்கோர் இலக்கு வேண்டும். சரியான அரசியல் தலைமை வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான பாதை தெளிவுபடுத்தப்பட வேண்டும். நண்பர்கள் யார்?, எதிரிகள் யார்?, இயக்கு சக்திகள் எவை?, இலக்கு சக்திகள் எவை?, நேச சக்திகள் எவை? என்பதெல்லாம் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாகும். சகட்டுமேனிக்கு தாக்குதல் நடத்தும் புலிகள் இயக்கம், தனது தவறுகளைப் புரிந்து கொண்டு நியாயமான பாதையில் அடியெடுத்து வைக்கத் தவறினால், அழிவையே சந்திக்கும் என்பதே அப்பட்டமான உண்மையாகும்.

*-சந்தாதோட்டம், பருத்தித்துறை*
*06.02.07*

## மண்ணை இழந்த மக்கள்

*-கிறீன் வீதி, திருகோணமலை.*

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம், இதுவரை காலமும் நான் அறிந்திருக்காத பல உண்மைகளை உள்ளடக்கியிருந்தது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன், அதிலும் குறிப்பாக திருகோணமலையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவன் என்ற வகையில், தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களை நான் பல வருடங்களாக கண்டும், கேட்டும் வருகின்றேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகின்றது. பள்ளிப் பருவத்தில் நான் ஓடியாடி விளையாடிய காலத்தில், எனது மண்ணிலிருந்த இனசௌஜன்யம் இன்று இல்லை. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், அதன் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்கள் ஆகியவற்றை அனுபவித்தவர்களை நான் பார்த்திருக்கின்றேன். இனவெறியின் கோர முகத்தின் காரணமாக திருமலை மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். சில கரையோரக் கிராமங்களை விட்டு பல நூற்றுக் கணக்கானவர்கள் தமிழ் நாட்டுக்குத் தஞ்சம் தேடிப் போயிருக்கின்றார்கள்.


அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், கிழக்கு மாகாணத்தின் இனரீதியான சனத்தொகையை வெகுவாகப் பாதித்திருக்கின்றது. கந்தளாய் கல்லோயாத் திட்டங்கள் மட்டுமல்ல, இன்னும் பல குடியேற்றத் திட்டங்கள் பல்வேறு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, திருகோணமலையில் தமிழ் மக்கள் தமது மண்ணைப் பறிகொடுத்திருக்கிறார்கள். வாழ்வோடும் சாவோடும் போராட வேண்டிய ஒரு நிலையை இன்று எதிர்கொள்கின்றார்கள். அரச உதவியுடனான குடியேற்றத் திட்டங்கள் பற்றி நீங்கள் வெளியிட்ட தகவல்கள் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன.

*-நன்றி*
*இப்படிக்கு,*
*கே.கனகசபை.*
*21.03.07*




**எதிலும்** முன்னின்று செயற்படும் துணிச்சல் மிக்கவர். சொல்லப்போனால் மாணவர்களுக்கு வழிகாட்டியாக செயற்பட்டவர்.

சுதந்திரமான செயற்பாடுகளை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்பது விஜிதரன் போன்ற பல்கலைக்கழக மாணவர்களின் விருப்பமாக இருந்தது. பல்கலைக்கழக மாணவர்களின் சுயாதீனமான சிந்தனை புலிகளுக்கு எரிச்சலைக் கொடுத்திருந்தது. யார் வழிகாட்டி என்று தகவல் திரட்டினார்கள் புலிகள்.


கிட்டு

அப்போது புலிகளின் யாழ். தளபதி கிட்டு யாழ். பல்கலைக்கழகத்தினுள் அடிக்கடி சென்று வருவது வழக்கம். கிட்டுவின் பொழுது போக்கு குரங்கு வளர்ப்பது. எங்கு பார்த்தாலும் மோட்டார் சைக்கிளில் குரங்குடன் திரிவார்.

கிட்டு பல்கலைக்கழக வளாகத்தினுள் சென்று வருவது அங்குள்ள மாணவர்களுக்கு பிடிப்பில்லை. ஏதோ சுவடு எடுக்கத்தான் வருகிறார் என்று பலருக்கும் தெரியும். விழிப்புணர்வுள்ள ஒரு பெண்கள் அணியும் பல்கலைக்கழகத்தினுள் இருந்தது. அவர்களுக்கும் புலிகளின் வழிமுறைகள் பிடிக்காது.

புலிகளின் தலைவர் பிரபாகரனை இன்று திருமணம் முடித்திருக்கும் மதிவதனியும் ஆரம்பங்களில் அந்த அணியில்தான் இருந்தவர். அவர் எவ்வாறு பிரபாகரனுக்கு மனைவியாக மாறினார் என்பது இரகசியம் அல்ல. ஆனாலும் அதை இன்னொரு கோணத்தில் இன்னொரு தடவை பார்க்கலாம்.

ஒரு முறை கிட்டு பல்கலைக்கழக வளாகத்தினுள் மிக வேகமாக மோட்டார் சைக்கிளில் நுழைந்த போது, அவரை அருவருப்பாக பார்த்தனர் மாணவிகள். கிட்டுவிற்கு அது பிடிக்கவில்லை. மாணவிகளுக்கு அருகில் சென்றார். அவர்களை பார்த்து மிரட்டல் தொனியோடு

ஏய்!.. என்னை யார் என்று தெரியுமா?.... தெரியும்தானே என்ன நடக்கும் என்று! என்றார்.

கிட்டுவின் மிரட்டலைக் கண்டு யாரும் மிரண்டதாகத் தெரியவில்லை. அங்கு நின்றிருந்த ஒரு மாணவி. கிட்டுவின் கேள்விக்கு துணிச்சலோடு பதில் சொன்னார்.

ஓம்!.... தெரியுமே!...... என்றார்.

தன்னை புலிகளின் தளபதி என்று அந்த மாணவி கூறுவாள் என்றே கிட்டு எதிர்பார்த்தார். ஆனால் அந்த மாணவி கூறிய பதில் கிட்டுவிற்கு எரிச்சலை கொடுத்திருந்தது.

கச்சேரி றோட்டிலை குரங்கோடை திரியிறனீ!. தெரியும் எங்களுக்கு என்றார் அந்த மாணவி.

கிட்டுவிற்கு முகம் கறுத்து விட்டது. மரியாதையாக பேசியிருந்தால் மரியாதை கிடைத்திருக்கும் என்றார்கள் இதை பார்த்துக்கொண்டிருந்த சக மாணவிகள். கிட்டு அன்றுடன் அந்த மாணவிகளுடன் வாய் கொடுத்து கதைப்பதில்லை.

இவ்வாறுதான் புலிகள் பல்கலைக்கழக சமூகத்தோடு நடந்திருந்தார்கள். மாணவர்களும் அதற்கு அளவாகவே நடந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு வழி காட்டி விஜிதரன் என்ற தகவல் புலிகளுக்கு எட்டியது. காரியத்தை முடித்து விட்டனர் புலிகள். கிட்டுதான் அதன் சூத்திரதாரி. கிளர்ந்தெழுந்தது பல்கலைக்கழக சமூகம். ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள், உண்ணா விரதங்கள் என்று புலிகளுக்கு எதிராக வெடித்துக் கிளம்பியது வெகுஜனப் போராட்டம்!

விஜிதரனை விடுதலை செய்யுங்கள் என்ற சுவரொட்டிகள்

**தேடனார்**

யாழ். குடா நாடெங்கும் ஒட்டப்பட்டன. விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்டுவிட்தாக எங்கும் ஒரே பரபரப்பு! ஈ.பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் பல்கழைக்கழக மாணவர்களின் போராட்டத்திற்கு பின்புலமாகவும் பக்கபலமாகவும் நின்றிருந்தனர்.

ஆனாலும் இப்படியும் ஒரு குற்றச்சாட்டு அப்போது எழுந்திருந்தது. விஜிதரனின் பிரச்சினையை வைத்து தங்களது அரசியல் குரோதங்களை இயக்கங்கள் தீர்த்துக்கொள்வதாக இடையில் உள்ள சிலர் கருதினார்கள்.

ஆனாலும் அந்த குற்றச்சாட்டு உண்மையில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை பெறுத்த வரை தன்னோடு நல்லுறவு கொண்டிருந்த ரெலோ அமைப்போடு கூட சில இடங்களில் முரண்பட்டு நின்றிருந்தது. அதை பின்பு பார்க்கலாம்.

யாழ். இருபாலைச்சந்தி ஊடாக பல்கலைக்கழகம் நோக்கி ஓர் ஊர்வலம் நகர்ந்துகொண்டிருந்தது. இருபாலைச்சந்தியில் காத்திருந்தது ஒரு குண்டர் கூட்டம். அது புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட அடிதடி கோஷ்டி.

வானுயர கோசங்களை எழுப்பிய படி நகர்ந்து வந்த பல்கலைக்கழக மாணவர்களை நோக்கி பாய்ந்தது குண்டர் கோஷ்டி! ஊர்வலத்திற்கு குறுக்கே பாய்ந்து அட்டகாசம் செய்யத்தொடங்கியது. மாணவர்கள் தாக்கப்பட்டனர். ஊர்வலத்தின் மீது கற்கள் வீசப்பட்டன.

அசம்பாவிதங்கள் நடக்கலாம் என்று உஷார் நிலையில் காத்திருந்தது ஒரு குழு. அது வேறு யாருமல்ல ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் ஈஸ்வரன் குழுவினர்.

(சாட்சிகள் தொடரும்)

---

**703 இதழில் ஈழப்போராட்டத்தின் இரத்த சாட் சியங்கள் அங்கம்-04இல் திரு. ஆனந்தசங்கரி அவர் கள் தொடர்பாக வெளியாகியிருந்த கட்டுரை தொடர் பாக மறுப்புக்கூறி ஆனந்தசங்கரி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட கருத்து நட்போடு இங்கே பிரசுரமா கிறது.**

**வாசகர்களே!**

**இவ்வாறான உங்கள் கருத்துக்களையும், விமர்ச னங்களையும் நாம் எதிர்பார்க்கிறோம்.**

**ஆசிரியர்.**

12.03.2007

ஆசிரியர்,
தினமுரசு,
கொழும்பு.

அன்புடையீர்,

தங்களின் வாரமலர் 703ல் (மார்ச் 8 - 14, 2007) தேடனாரின் இரத்த சாட்சியங்கள் 4வது பகுதியில் எனது கருத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதாவது "தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே! எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம்" இது தவறாகும்.

விடுதலைப் புலிகளுடன் மட்டும் தான் பேசவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேனே தவிர ஒருபோதும் விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகள் என நான் குறிப்பிடவில்லை. ஆரம்பத்திலிருந்தே இதைப் பகிரங்கமாகவே நான் தெரிவித்து வந்திருக்கிறேன்.


தங்களுண்மையுள்ள,
வீ.ஆனந்தசங்கரி,
தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி.

---

**பிடலின்** தந்தை ஆயிரம் வோல்ட் பிரகாசத்துடன் பிடலைக் கட்டிப் பிடித்தார். பிடலை ஒரு கதாநாயகனாகவே என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் பிடலின் தந்தை, பிடலுக்கு ஆண்பிள்ளை கிடைத்தமையையிட்டு விபரிக்க முடியாத மகிழ்ச்சியில் இருந்தார்.

குழந்தையையும் - மிர்தாவையும் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகவும், சிறிது காலத்துக்கு அங்கு இருந்து விட்டு பின்னர் பிடலுடன் வந்து இருக்கட்டும் என்றும் மிர்தாவின் பெற்றோர் கேட்டனர். பிடல் சம்மதிக்கவில்லை. பிடலின் சகோதரிகள் பிடல் மீது எப்போதும் மிகுந்த அன்பு கொண்டவர்கள் என்பதால் தாங்கள் மிர்தாவைக் கூட்டிக் கொண்டு போவதாகக் கேட்டனர். பிடல் அதையும் மறுத்தார். மிர்தாவும் மகனும் தன்னுடன் இருப்பதையே பிடல் விரும்பினார். இதற்குக் காரணம் மிர்தாவுக்கு இனியும் ஒரு பிரிவு ஏற்படுவதையோ, மகனைப் பிரிந்து இருப்பதையோ தாம் விரும்பவில்லையென்பதை உறவினர்களுக்கு விளக்கினார். பிடலின் பிள்ளைப் பாசத்தையும் மிர்தா மீதான காதலையும் புரிந்து கொண்டவர்கள் பிடலின் விருப்பப்படி நடக்கட்டும் என்று ஒதுங்கிக் கொண்டனர். பிடல் மனைவியையும் பிள்ளையையும் தனக்கு அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர்களின் பாதுகாப்புக் கருதியும். கல்லூரிக்கு அருகிலிருக்கும் வீதியில் ஒரு இடத்தில் சிறிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு குடியேறினார்.

பிடல் தனது மகனுக்கு பிளார்ட! என்று பெயரிட்டார். பின்னாளில் "பிடலிட்டோ" என்று அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தையுடன் மனைவியைப் பராமரிப்பதில் பிடலின் தனி வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்தது. இதனால் உறவினர்கள் வந்துபோக வசதியாக, பல்கலைக்கழகத்திலிருந்த சிறிய வீட்டை விட்டு அதே தெருவில் மறைவான ஒரு இடத்தில் இன்னொரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். இந்த வீடானது நெருங்கிய உறவினர்களுக்கும், நம்பிக்கையான சகாக்களுக்கும் மட்டுமே தெரிந்தது.




இதே காலப் பகுதியில் கியூபாவின் அரசியலில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தது. இதைச் சமாளிக்கவும், தனது குடும்பச் சுமையைச் சுமக்க வசதியாகவும் இருக்கப் பொருத்தமானவராக தனது தம்பி ராடல் கெஸ்ரோவை மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு அழைத்தார்.



பிடலின் மடல் கண்டு பிடலின் கோரிக்கைகளைக் ஏற்றுக் கொண்டு ராடல் பார்த்துக் கொண்டிருந்த பண்ணை வேலைகளை விட்டு விட்டு ஹவானாவுக்கு வந்து சேர்ந்தார். ராடலின், வருகை மாணவர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. மாணவர்களின் தலைவராக இருந்த குவேரா, லெஸ்னிக், ராடல் ஆகியோரும் காஸ்ரோவிற்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் இருந்தனர்.

1950 ஆண்டு தேர்தல் அறிவிக்கப்பட்டது. சிபாஸ் பலவிதமான தந்திரோபாயங்களை நிராகரித்து விட்டார். கலவரம் வெடித்து ஹவானாவின் நகரம் முழுவதும் பெரும் பதற்றமாக இருந்தது. அரசியல்வாதிகளின் பின்னணியுடன் இயங்கிய கலவரக்காரர்கள், மக்களைத் தாக்கியும், அச்சுறுத்தியும் வந்தனர். இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக கலவரக் கும்பலுக்கு எதிராகச் செயற்படும் வகையில் மாணவர் குழுவை அமைக்கும் முயற்சிகள் நடைபெற்றன. இந்த மாணவர் குழுவுக்கு "செப்டெம்பர் முப்பது குழு" என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த மாணவர் குழுவின் தலைவராக கம்யூனிஸத்தை ஆதரிக்கும் மாணவரே இருந்தார்.


கம்யூனிஸ போக்குகளில் அதிருப்தி கொண்ட பிடல், இந்த மாணவர் குழுவில் தனது தலையீடு, குறிப்பிட்ட பங்களிப்பை வழங்காது என எண்ணினார். பிடலின் நண்பரான அல்பரடோ, குவேரா சாடோ, ஜிமினஸ் ஆகியோர் இதில் பிடலை இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. கலவரக் கும்பலை அடக்கும் நடவடிக்கையை அமைதியான வழியில் கையாளாமல் அடிதடியில் ஈடுபடுவார் என்பது ஒரு காரணமாக இருந்தது. ஆனாலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள், பிடலின் ஆலோசனைகள் இந்த செப்டெம்பர் குழுவுக்கு அவசியம் எனத் தெரிவித்தனர். மாணவர்களின் தலைவர்களில் ஒருவரான லெஸ்னிக் மாணவர்களின் இந்தக் கருத்தை வலியுறுத்தி வாதாடினார்.

அதேவேளை, ஏனைய மாணவர்களின் சந்தேகத்தையும் பிடலுக்கு எடுத்து விளக்கினார். அதாவது, கூட்டங்களுக்கோ, போராட்டத்துக்கோ வரும்போது துப்பாக்கியுடன் வரக்கூடாது. அடிக்குஅடி என்ற விதமாக கருத்துக்களைக் கூறக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். பிடல் முதலில் அதை ஏற்றுக் கொண்டார்.

கலவரக் கும்பலுக்கு எதிரான போராட்டங்களின் ஒரு கட்டமாக நவம்பர் முதலாம் திகதி நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பிடல் உரையாற்ற வேண்டுமென தெரிவித்தார். சில கம்யூனிஸ மாணவர்கள் அதை விரும்பவில்லை. ஆனாலும் மாணவர்களின் கட்டாயம் காரணமாக பிடல் உரையாற்றினார். அந்த உரையில் கலவரத்தில் ஈடுபடுபவர்களையும், அவர்களுக்கு பின்னணியில் இருக்கும் அரசியல்வாதிகளையும் மாபியாக்கும்பல் என வர்ணித்துப் பேசினார். அதை ஒழிக்க அணி திரள்வோம் எனத் தெரிவித்தார். இந்த உரை கேட்டு மாணவர்கள் உற்சாகக் கரகோஷம் செய்தனர்.

மறுபக்கத்தில் கலவரக்காரர்கள் பிடலைத் தீர்த்துக் கட்டப் பணிக்கப்பட்டனர்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி வாகனங்களில் குண்டர்கள் வந்து இறங்கினர். அவர்களுக்கும் - மாணவர்களுக்குமிடையே அடிதடி ஏற்பட்டது. நிச்சயமாக குண்டர்கள் பிடலைக் குறிவைத்தே வந்திருப்பார்கள் என்பதை புரிந்து கொண்ட லெஸ்னி தனது காரில் பிடலை ஏற்றிக் கொண்டு பல்கலைக்கழக வளாகத்திலிருந்து உடனடியாக வெளியேறினார். பிடலை பாதுகாப்பாக வீட்டில் இறக்கிவிட்டு லெஸ்னி சென்றார். லெஸ்னி ஆர்த்தோ டாக்கோ கட்சியில் செல்வாக்கு மிக்கவர் என்பதால் குண்டர்கள் தொடர்ந்து தாக்கவில்லை.



இந்தக் கலவரங்களை அடுத்து மீண்டும் பிடல் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியதாகி விட்டது. மனைவியையும், குழந்தையையும் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ள முடியவில்லையே என்று ஒரு ஏக்கம் மனதை வாட்டியது, எனினும் லெஸ்னியின் வேண்டுதலுக்கு இணங்க

**தருவது**
**எம். கேஷிகன்**

லெஸ்னியின் வீட்டில் பாதுகாப்பாக தங்கி இருப்பது என்று முடிவு செய்தார். மிர்தா குழந்தையுடன் இந்தக் காலகட்டத்தில் அனுபவித்த துன்பங்கள் விபரிக்க முடியாதவை. பிடலுடனான திருமண வாழ்வு இப்படித்தான் இருக்குமென்று தெரிந்து கொண்டு ஏற்றுக் கொண்ட போதும், குழந்தையுடன் தனிமையில் படும் துன்பங்கள் மிர்தாவை மிகவும் வாட்டியது. குழந்தைக்குச் சுகயீனம் ஏற்பட்டால்கூட மருந்து எடுக்கச் செல்ல முடியாத நிலை, தனிமையில் சென்று வர வேண்டியிருந்தது. பிடல் உதவியாக இருக்கவில்லை என்ற வருத்தம் ஒரு பக்கம், அவர் உயிருடன்தான் இருக்கிறார் என்ற திருப்தி ஒரு பக்கமாக மிர்தாவின் நிலை தொடர்ந்தது.

சில மாதங்கள் லெஸ்னி வீட்டில் தங்கியிருந்த பிடல் இந்த நாட்களில் மனைவியையும் பிள்ளையையும் பிரிந்த துயர் தன்னைப் பாதித்து விடக்கூடாது என்பதற்காக, புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினார். அதில், மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் போன்றோரின் அரசியல் புத்தகங்களைப் படித்ததுடன் சாமர் செட்மாம் ஜெக்லண்டன், எச்.ஜி.வெல்ஸ், ரோமன் ரோலண்ட் போன்றோரின் புத்தகங்களையும் படித்தார்.

(அசத்தல் தொடரும்)

# கிரிக்கெட் சூதாட்டமும் வுல்மரின் கொலையும்!

(வியட்நாம் அடுத்தவாரம் வரும்)

**பாகிஸ்தான்** கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும், இங்கிலாந்து அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரருமான பொப் வுல்மர் கடந்த 18.03.2007, ஞாயிற்றுக்கிழமை ஜமேக்காவில் திடீர் மரணமடைந்தார். இந்தியாவில் பிறந்த இவர் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளார். இந்த உலகக் கிண்ண போட்டியுடன் பயிற்சியாளர் ஒப்பந்தம் முடிவடையவிருந்த நிலையில் பாகிஸ்தானுக்குக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தீவிரமாக உழைத்து வந்த இவரின் மரணம், கிரிக்கெட் உலகையே அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. மேற்கிந்திய அணியிடமும், அயர்லாந்து அணியிடமும் படுதோல்வியடைந்த பாகிஸ்தான் அணி முதல் சுற்றிலேயே வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இத் தோல்வி காரணமாக வுல்மர் தற்கொலை செய்து கொண்டார் என்றும், மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாமென்றும், நஞ்சூட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஆரம்பத்தில் பல கோணங்களில் ஜமேக்கா பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டனர். எனினும் காலங்காலமாக கிரிக்கெட் அரங்கில் இடம் பெறும் சூதாட்ட சூழ்ச்சியே பாகிஸ்தான் அணியின் தோல்விக்குக் காரணமென்றும், இந்த உண்மைகள் பயிற்சியாளரான வுல்மருக்குத் தெரியவந்ததால், அவர் அதை அம்பலப்படுத்தி விடுவார் என்ற காரணத்தாலேயே அவர் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றும், பல முக்கிய புள்ளிகள் இதனுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் புதிய கோணத்தில் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவர் தங்கியிருந்த ஜமேக்கா கிங்ஸ்டனில் உள்ள ஹோட்டலில் அவர் வாந்தி எடுத்து, மூக்கில் இரத்தம் வழிந்த நிலையில் மயங்கிக் கிடந்ததாகவும் அவரது பிரேத பரிசோதனையின்படி, அவர் சாப்பிட்ட உணவு நஞ்சாகி இருந்தமையும், அடி காயங்கள் காணப்பட்டதாகவும் அதனால் அவர் கொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் தெளிவாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டக்காரர்களின் வலையில் சிக்குண்டு தமது அணிக்கு துரோகமிழைத்திருக்கிறார்கள். ஆனால் இன்று சூதாட்டத்தின் உச்சக் கட்டமாக ஒரு அணியின் பயிற்றுவிப்பாளரையே கொலை செய்யுமளவுக்கு மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இக் கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படாவிட்டாலும் பாகிஸ்தான் அணி வீரர்களின் கைரேகை அடையாளங்களும், DNA எனப்படும் மரபணுச் சோதனைகளும் நடத்தப்பட்டதுடன் பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் மற்றும் அணியின் உதவிப் பயிற்சியாளரான முஷ்டாக் அஹமட், அணியின் முகாமையாளர் தலித் அலி ஆகியோரிடம் ஜமேக்கா பொலிஸார் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்கள். மேலும் ஹோட்டலின் 12ஆவது மாடியில் வுல்மரின் அறைக்கு எதிரே தங்கியிருந்த மேற்கிந்தியக் கப்டன் லாராவிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் ஹோட்டலில் பொருத்தப்பட்டிருந்த இரகசிய கமராக்களினால் பிடிக்கப்பட்ட படங்களை அதி நவீன தொழில் நுட்ப முறையில் ஆய்வு செய்து வருவதாகவும் ஜமேக்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கடந்த காலங்களில் பாகிஸ்தான் அணி, மேற்கிந்திய அணி வீரர்கள் சூதாட்டங்களில் சிக்கித் தண்டிக்கப்பட்டுள்ளனர். தவிரவும் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணியும் முதல் சுற்றிலேயே வெளியேறியதால், அவர்களும் சூதாட்டக் கும்பலின் வலையில் வீழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகமும் வலுவடைந்துள்ளது. சூதாட்ட விவகாரத்தில் சிக்கிய முன்னாள் தென்னாபிரிக்காவின் சிறந்த கப்டன்களில் ஒருவரான ஹான்சி குறென்ஞ்சே விசாரணை நடந்து கொண்டிருக்கும் காலப்பகுதியிலேயே விமான விபத்தில் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமன்றி சூதாட்டங்களில் சிக்கிய கிரிக்கெட் அணியின் கீழ்த்தரமான செயல் இறுதி மூச்சு வரை கிரிக்கெட்டை நேசித்த ஒரு சிறந்த பயிற்சியாளரைப் பலியெடுக்கும் சூழலுக்கு தள்ளிவிட்டுள்ளது.

மேலும் வுல்மரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் சக்தி வாய்ந்த சூதாட்ட மாபியாக் கும்பலொன்றுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கக் கூடுமென சந்தேகங்கள் வலுவடைந்துள்ளதாலும்,

(மிகுதி அடுத்த வாரம்)



பொப் வுல்மர்

உங்களுடைய வெற்றி ... சேவை செய்பவர் இன்றே அழையுங்கள்

057-2224591-92

முழு உலக வாசிகளுக்கும் வெற்றியை ஈட்டித்தந்த

பண்டாரவெல

கலாநிதி ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமிகளைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் சுயவிலாச உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு

பண்டாரவளையில்

காலை 8.00 மாலை 6.00

சகலவிதமான வசிய மாந்திரீகம்

வசி ... வசி ... வசி ...

DR. K.A.S. SHAARMA SWAAMI

HEAD OFFICE : 18A, SENANAYAKE MAWATHA, BANDARAWELA, SRI LANKA.

TEL: 057-2224591-92, FAX: 057-2232441, MOB. 077-3227005

9A, COUNCIL AVENUE, DEHIWALA.

TEL: 057-4902050, 077-3227005

Website: sharmasami.org E-mail: sribathrakaliamman_temple@yahoo.com


## சூட்சுமம்...

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியுள்ளது என்பதை கொண்டு ஆடுகளத்தின் தன்மைக்கேற்ப கிரிக்கட் ஜாம்பாவான்களும் வர்ணனையாளர்களும் ஏன் சூதாட்டக்காரர்களும் கோதாவில் இறங்குகின்றனர்.

இதனை எதற்கு ஒப்பிடலாமெனில் வீணையின் நரம்புகள் ஒன்றாக இருந்தாலும் வீணையின் தன்மைக்கேற்ப அதன் நாதம் வேறுபடுகின்றது அல்லவா? அதுபோலவே ஆடுகளமும் பார்வைக்கு ஒன்று போலவே தோற்றமளித்தாலும் அதன் அமைப்பு முறையில் ஆட்டத்தின் பிரதிபலிப்பு வேறுபடும்.

## பிள்ளைகளை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் நகர்வுகள் தொடர்கின்ற இந்தச் சூழலில் புலிகளின் கட்டாயத்தின்பேரில் மடுத்தேவாலயத்தில் தங்கியிருந்த சுமார் 3500 பேர் அங்கிருந்து இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. இராணுவம் முன்னேறுகின்றபோது புலிகளின் பிடி தளர்த்தப்படும் போது இந்த மக்களுடன் சேர்ந்து ஏற்கனவே அங்கு வசித்து வரும் மக்களுமாக சுமார் 10000 பேர் வவுனியாவுக்கு இடம்பெயரக்கூடிய நிலையும் இருக்கிறது. படையினருக்கும் புலிகளுக்குமிடையில் இந்தப் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் 15 படையினர் கொல்லப்பட்டும் சுமார் 25 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துமிருக்கலாமென்றும் புலிகள் தரப்பில் 22 பேர் கொல்லப்பட்டதுடன் 75க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துமிருக்கிறார்கள் என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்களுக்கு சேதம் என்று பார்த்தால் பண்டிவிரிச்சானில் வீடொன்றின் மீது செல் விழுந்ததில் இருவர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிணத்தைப் பேச...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதுமாக மரணித்துப் போன எனது மூளையில் முதன் முதலாக ஒரு சின்ன சத்தத்தைக் கேட்டேன். புர்ர்ர்ர்... என்ற அந்தச் சத்தம்தான் மெல்ல எனக்கு உயிர் கொடுத்தது. சர்வ நிச்சயமாக நான் மரணத்தை உணர்ந்து திரும்பியிருக்கிறேன் என்கிறார் பாம் ரெனால்ட்ஸ்.

இவர்களைப் போலவே கெவின் வில்லியம்ஸ், பெத்தார்ட்ஸ் என உலகம் முழுவதும் ஏகப்பட்ட விஞ்ஞானிகள் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

உயிர் பிரியும் போது வலிக்குமா? வலிக்காது என்கிறார்கள் இவர்கள் ஒட்டு மொத்தமாக! உடல் உபாதைகளால் ஏற்படுவது தான் வலியே தவிர, மரணத்துக்கு வலி கிடையாது என்கிறார்கள்.

செத்துப்போன உடலை ரோபோ போல் நவீன எந்திரங்கள் மூலம் இயங்க வைக்க முடியுமா என்ற நம்பிக்கையில் கடந்த 18 ஆண்டுகளாக நூதன தயாரிப்புக்கள் மூலம் போராடிக் கொண்டிருக்கிறார் டாக்டர் பி.எம்.எச்.அத்வதார் என்பவர்.

இதெல்லாம் நடக்கிற விஷயமா டாக்டர் என்றால், “எதையும் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னால் நம்புவது கஷ்டம்தான். ரெயில், விமானம், செல்போன்களை எல்லாம் நீங்கள் நம்பவா செய்தீர்கள் என்கிறார்.

இந்த அதிர்ச்சி விஞ்ஞானிகள் உடற்பயிற்சி, உணவு முறை, ஆரோக்கிய வாழ்க்கை மூலம் மனித வாழ்வை நீட்டிக்க முடியுமா என்பது பற்றியும் இயற்கை ரீதியிலான ஆராய்ச்சி செய்யவும் தவறவில்லை. ஒரு சிலரால் மட்டும் எப்படி 110வயது வரை வாழ முடிகிறது என்கிற கேள்விக் குறிக்கும் இவர்கள் ஒரு புறம் விடை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

“கடைசி மூச்சு வரை மருத்துவ கருவிகளைக் கண்டு பிடித்து விட்ட விஞ்ஞானிகளின் அருமை பற்றி உங்களுக்குத் தெரியவில்லை. நிச்சயம் ஒரு நாள் மரணத்தின் சூட்சுமம் வெளியே தெரிய வரும் என்கிற ரஷ்ய விஞ்ஞானி ஆன்ஸ்டின் பெராக் வெளி உலகுக்குத் தெரியாமல் வேறொரு ஆராய்ச்சி நடத்தி வருகிறார்.

இறந்து போன பிணங்களுக்கு ஊசி போட்டு, உடலைப் பிரித்து உள்ளுக்குள் மருந்து, மாத்திரைகளை வைத்து தைத்து நவீன கருவிகள் மூலம் எலக்ரிக் ஷாக கொடுத்து, என்றாவது ஒரு நாள் இது எழுந்து நடமாடும் என்கிற ரீதியில் கடந்த 20 ஆண்டுகளாக இருட்டுக் கூடத்திலேயே தனது பகல் வாழ்க்கையையும் கழித்து வருகிறார்.

இவர்கள் சொல்வதைப் போல் ஒரு வேளை உயிர் இரகசியம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டால்.... பூமி பிதுங்கி வழியும் ஜனத்தொகை.

அத்தனை பேருக்கும் உணவு, இருப்பிடம், குடி தண்ணீர் வசதி என மேலும் எழும் ஆயிரக்கணக்கான பூலோக பிரளயங்களுக்கு நாம் மேலும் விடை தேடவேண்டியதாயிருக்கும்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## உடல் எண் - 9, உயிர் எண் - 6

9, 18, 27 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் இவர்கள் செவ்வாய், சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் மிடுக்காகவும், கம்பீரமாகவும், தைரியமாகவும் விளங்குவர். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று எண்ணுவர். இவர்களது நடை, உடை, பாவனைகள் ஆடம்பரமாகவும், கவர்ச்சி உள்ளதாகவும் இருக்கும். நல்ல அறிவுடைய இவர்கள் எதையும் சிந்தித்தே செயல்படுவர். சூழ்ச்சிக்காரர்களிடம் சூழ்ச்சிக்காரராகவும், எதிரிகளிடம் பலத்த எதிரியாகவும், தன்மீது அன்புள்ளம் கொண்டவரிடத்து மிகுந்த அன்புடையவராகவும் நடந்து கொள்வர். பிறரைக் கவரும் காந்த சக்தியுடையவர்கள்.

வேதாந்தம் பேசுபவர்களையும், வெட்டியாகக் கதை பேசுபவர்களையும் கண்டால் இவர்களுக்குக் கடுமையாகக் கோபம் வரும். தனது முயற்சியால் உழைத்து, உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்ற நோக்கோடு வாழ்வர். இந்த உலகத்திலுள்ள அனைத்துச் சுகங்களையும் முறையாக அனுபவிக்க ஆசைப்படுவர். நல்ல நண்பர்களைக் கொண்ட இவர்கள், நண்பர்களுக்காக எதையும் செய்ய முற்படுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் சாதாரண நிலையில் இருந்து உயர்ந்த நிலைக்கு வர வாய்ப்பிருப்பதால் பெயரை நல்ல எண்ணில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

மற்றவர்களும் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். ஆதலால் பொதுநலத் தொண்டு செய்து புகழடைவர். கடவுள் நம்பிக்கையும், சமய நம்பிக்கையும் கொண்ட இவர்கள், அடிக்கடி கோவிலுக்குப் போவதை விட தன் மனதாலே தியானம் செய்வர். எவ்வளவு இன்ப துன்பங்கள் வந்தாலும் நடுநிலையாகவே காணப்படுவர். பிறரைத் துன்புறுத்தும் விஷயங்களில் ஈடுபட மனம் கூசுவர். ஆரம்பத்திலே இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால் பெரும் செல்வந்தராக ஆகிவிடுவர்.

இன்னும் சிலருக்குப் பெயர் நன்றாக அமையாத காரணத்தால் வாழ்க்கையில் போராடிக் கொண்டே இருப்பர். இவர்கள் மனம் தூரதேசப் பயணங்கள் செய்வதாலும் கடற்கரை ஓரங்களில் ஓய்வு எடுப்பதாலும், பசுமையான மலைப்பிரதேசங்களைக் காண்பதாலும், ஆடம்பரமான பொருட்களைப் பார்ப்பதாலும் அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் உத்தியோகம் செய்து கொண்டிருப்பதாலும், தனக்கு வருமானம் போதவில்லை என்பதால் வேறு தொழில் மூலம் வருமானத்தைத் தேடிக் கொள்ள முயல்வர்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வியாபாரிகளாகவும், தொழில் அதிபர்களாகவும், டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், இன்ஜினியர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் வாழ்கின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பமானதாகவும், பொருளாதார வளர்ச்சியின்றியும் அமைந்து விடுகிறது. இதனால் பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இவர்கள் மனம் அனைத்து இன்பரகமான விஷயங்களிலும், சட்டம், ஜோதிடம், மருத்துவம், விஞ்ஞானம் போன்றவற்றிலும் நாடிச் செல்லும். இவர்கள் மனதில் திடீரென்று புதிய கருத்துக்கள் தோன்றுவதை எழுத்தாலோ, பேச்சாலோ வெளியிடுவர். சாதாரண உத்தி யோகம் பார்ப்பவர்கள்கூட பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றி அமைத்துக் கொண்டால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர்.

***தொழில்*** : ஆடம்பர சம்பந்தமான பொருட்கள் வியாபாரம், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பொருட்களை அனுப்புதல், விவசாயம், கட்டிடத் தொழில் போன்றவைகள் இவர்களுக்கு ஏற்றவை.

***நோய்*** : இவர்களுக்கு இரத்த அழுத்தம், வாயுக் கோளாறு, மூத்திரக் கோளாறு, முதுகு வலி, பைல்ஸ், பல்வலி, சர்க்கரை வியாதி போன்றவைகள் வந்து நீங்கலாம்.

***பெயர் அமைக்கும் முறை*** : இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு செவ்வாய் சுக்கிரன் ஆதிக்கமான 27, 36, 45; 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் : 9, 5, 6


யோகமான திகதிகள் : 9, 18, 27; 1, 10, 19, 28; 6, 15, 24

யோகமான மோதிரக் கல் : பவளம்

யோகமான நிறம் : வெளிர் நீலம், சிவப்பு, வெளிர் மஞ்சள்

ஆகாத திகதி : 2, 11, 20, 29; 7, 16, 25

ஆகாத நிறம் : இருண்ட பச்சை, ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.



> வேதனைப் படுமனமும் – உயர்
> வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
> வாதனை பொறுக்கவில்லை – அன்னை
> மாமக ளடியினை சரண் புகுவோம்.
>
> – சுப்பிரமணிய பாரதியார்

# நான் தான் குற்றவாளி!



**வெகு** காலத்திற்கு முன்பு ஓர் ஊரில் ஒரு தையற்காரன் இருந்தான். ஒருநாள் குள்ளன் ஒருவன், அவன் கடை முன்பு வந்து பாட்டுப்பாடி ஆடினான். அவன் ஆட்டத்தைப் பார்த்து சந்தோஷப்பட்ட தையற்காரன், அவனைத் தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தான். சாப்பாடு பிரமாதமாகச் சுவையுடன் இருந்ததால் குள்ளன் அதை ஒரு பிடி பிடித்துவிட்டான். கூட்டை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கூத்தாடியின் தொண்டையில் கறிவேப்பிலை சிக்கிவிட்டது. அவன் உடனே கீழே விழுந்து இறந்து போனான். தையற்காரனுக்கும் அவன் மனைவிக்கும் பயம் வந்துவிட்டது. அருகில் இருந்த கூத்தாடியின் பிணத்தை அவர்கள் இருவரும் மருத்துவர் வீட்டிற்குக் கொண்டு சென்றனர்.

மருத்துவர் மாடியில் வேலையாய் இருந்தார். கீழே வேலையாள் அவர்களை என்ன விஷயம் என்று வினவினான். "நாங்கள் ஒரு நோயாளியைக் கொண்டு வந்து இருக்கிறோம். மருத்துவர் அவரைப் பரிசோதிக்க வேண்டும்" என்று வேண்டினர். பணியாளர் மருத்துவரிடம் விஷயத்தைக் கூற மேலே சென்ற போது, இருவரும் மாடிப் படிக்கட்டில் பிணத்தை வைத்து விட்டு ஓடிவிட்டனர்.

மருத்துவர் வேகமாக வெளியே வந்தார். இருட்டு வேளையானதால் அந்தப் பிணத்தின் மீது தடுமாறி விழ, அது உருண்டு படிக்கட்டின் கீழே விழுந்துவிட்டது. விளக்கு கொண்டு வரப்பட்டது. மருத்துவர் நோயாளி இறந்து கிடப்பதைக் கண்டார். அவர் பயந்து போய் விட்டார். அவரும், அவரது மனைவியும் அந்த உடலைக் கயிற்றால் கட்டி, புகைக்கூண்டு வழியே பக்கத்தில் உள்ள வியாபாரியின் வீட்டில் இறக்கிவிட்டனர்.

திருடன் என நினைத்த வியாபாரி அந்த உடலை நன்றாக அடித்து விட்டான். அருகில் போய்ப் பார்த்தும் இறந்து போயிருப்பதைக் கண்டான். தன்னுடைய தற்காப்பு வேண்டி உடலை ஒரு கடையின் சுவரில் சாத்தி வைத்துவிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் காலை ஒருவர் குளிப்பதற்காகக் குளத்துக்குச் சென்ற போது லேசான இருட்டில் அந்த உடலின் மீது தடுமாறி விழ, அதுவும் கீழே விழுந்தது. திருடன் என நினைத்த அவர் அதைக் கட்டையால் அடித்தார். அந்தப் பக்கமாக வந்த பொலிஸ்காரர் இறந்த உடலைக் கண்டார். அவர் அந்த மனிதரைக் கைது செய்து வழக்கு மன்றம் அனுப்பி வைத்தார்.

நீதிபதி அந்த மனிதரின் வாக்குவாதத்தைக் கேட்ட பிறகு குற்றவாளி எனத் தீர்மானித்து தூக்குத் தண்டனை அளித்தார். தூக்கிலிடுவதற்காகக் கொண்டு வரப்பட்டார் அந்த மனிதர்.

இளைஞர், பெண்கள், முதியவர் எல்லோரும் அந்தக் காட்சியைக் காண வந்தனர். ஆனால், தூக்கிலிடப்பட இருக்கும் நேரத்தில் வியாபாரி வேகமாக

**பாப்பா முரசு சிறுகதை**


வந்து, "நிறுத்துங்கள்!" என்று கத்தினான்.

வியாபாரி நடந்ததைக் கூறினான். நீதிபதி அவன் சொன்னதைக் கேட்ட பின் தூக்கை நிறுத்தினார். அவர் அந்த மனிதரை விடுவித்தார். நீதிபதி வியாபாரியைக் குற்றவாளி எனத் தீர்மானித்துத் தூக்கிலிட உத்தரவிட்டார். அந்த நேரத்தில் மருத்துவர் ஓடிவந்து, வியாபாரி குற்றம் புரியவில்லை தூக்கிலிட வேண்டாம் என்றார். நீதிபதி அந்தக் கதையையும் கேட்டு, மருத்துவரைக் குற்றவாளி எனத் தீர்மானித்து அவரைத் தூக்கிலிட உத்தரவிட்டார். வியாபாரி விடுதலை செய்யப்பட்டான். மருத்துவர் கழுத்தில் கயிறு இறுகும்போது தையற்காரன் கத்திக் கொண்டே வந்தான். அவரைத் தூக்கிலிடாதீர்கள். அவர் குற்றவாளி இல்லை என்று கூறி நடந்ததைக் கூறினான். நீதிபதிக்கு ஒன்றும் புரியவில்லை. உடனடியாக எந்த முடிவையும் சொல்ல முடியவில்லை.

திடீரென்று ஒரு பெருத்த குறட்டை ஒலியுடன் தொடர்ந்து இருமலும் கேட்டது. குள்ளன் மேலும் தொடர்ந்து இருமினான். தொண்டையில் சிக்கியது வெளியே வந்துவிட்டது. இதோ நீண்ட தூக்கத்திலிருந்து எழுந்தவனைப் போல அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். கூத்தாடி உயிர் பிழைத்ததால் தம் தலை தப்பியது என எல்லோரும் மூச்சுவிட்டனர்.

குட்டீஸ்...அந்த காலத்தில் மனசாட்சிக்குப் பயந்த மக்கள் இருந்தனர். எனவே தான் அனைவரும் உண்மையைக் கூறினர். ஆண்டவனும் அவர்களை காப்பாற்றினார். ஆனால், இன்று?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.04.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 688**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 686

**பரிசுக்குரியவர்:**
செல்வி அன்ஸ்கா தர்சனா றோச்,
ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| S.அபிதுஷா<br>தரம் - 8C கொட்டகலை த.ம.வி. கொட்டகலை. | எஸ்.ஏ.நஸிபா அகமட்<br>ஆர்.டி.எஸ். வீதி, அக்கரைச்சேனை. மூதூர். 01 |
| ஆ.ஜெயதீபன்<br>மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் கல்குடா. | K.பிரசாந்தி<br>89, பாபாபதி இல்லம் ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| மு.புனிதமலர்<br>கண்டி கந்தகட்டிய த.ம.வி. மடுல்கலை. | சாஜிதா நஸார்<br>தரம் -4A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி கொழும்பு - 12 |
| K.ஹரினி<br>நூ/வ/ இராகலை த.ம.வி. ஆள்கரனோயா. | பாத்திமா அஸ்பா<br>புனித தோமையார் பெண்கள் பாடசாலை, மாத்தளை |

# ஆத்திசூடி

## நேர்பட ஒழுகு

**நீ வாழ்க்கையில் எத்தகைய இன்னல்கள் வந்தாலும் நேர்மையைக் கைவிடாது நீதிநெறி பின்பற்றி வாழப் பழகு.**

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## படிப்பே வலிமை



நீருக்குள்ளே முதலைக்கு
நிகரில்லாத வலுவுண்டு!
நீரைவிட்டே நீங்கித்தான்
நிலத்தின் மீது வந்துவிட்டால்
சாரமற்ற சக்கைப்போல்
தனது வலிமை இழந்து விடும்!
படிப்பால் பெருகும் அறிவொன்றே
பாரில் வலுவாம் மானிடர்க்கு!
படிப்பறி வில்லா மானிடர்கள்
நிலத்தில் வாழும் முதலைகளே!


# உலக அதிசயம்

## ஆதி மனிதன்



**ஆதிகால** மனிதர்கள் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னதாக கிழக்கு ஆபிரிக்காவில் தோன்றி இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆதி மனிதனின் முகம் துவக்க காலத்தில் குரங்கு போன்று இருந்தது. அவர்களுக்கு உடல் முழுவதும் ரோமங்கள் அடர்த்தியாக இருந்தன. அவர்கள் நேராக நடக்கும் தன்மை கொண்டவர்களாக இருந்தனர். கற்களையும் மிருகங்களின் எலும்புகளையும் ஆதி மனிதர்கள் தங்களின் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார்கள்.

## முதல் பூச்சி



**மற்ற** எல்லா உயிரினங்களையும் விட பூச்சிகள்தான் விரைவாகவும் வெகுதூரமும் பறக்கும் சக்தி படைத்தவை. பெரும்பாலான பூச்சிகள் கடல் புழுக்களைப் போல் உருமாறும் தன்மை கொண்டவை. 30 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இராட்சத மெக்கனிருவா தட்டான் என்னும் ஒரு வகைப் பூச்சியினம் வாழ்ந்துள்ளது. இதன் சிறகுகள் இரண்டடி நீளம் இருந்தன. பூச்சியினத்தில் மட்டும் பல இலட்ச இனங்கள் உண்டு எனக் கண்டறியப்பட்டுள்ளது.

## தண்ணீர் பிராணிகள்




**பூமி** தோன்றிய ஆரம்ப காலத்தில் பிராணிகள் எல்லாம் தண்ணீரில்தான் வாழ்ந்து வந்தன. சில மிருகங்கள் தண்ணீரை விட்டு வெளியேற ஆரம்பித்தன. தங்கள் சுவாசம் மூலம் உறுப்புகளை விரிவடையச் செய்தன. இப்படி முதன் முதலில் நிலத்திற்கு வந்தவற்றை அமீபியன்கள் என்றனர். இதற்கு அர்த்தம் நீர் - நில வாழ் விலங்குகள். இவற்றுக்கு மீன்களைப் போன்று தலையும் வாலும் இருக்கும். வலுவான வலிமையான கால்களும் இவைகளுக்கு உண்டு.

## முதல் பரீட்சை




**உயர்** பதவிகளுக்குப் பரீட்சை வைத்து, தேர்வு எழுதியவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, முதன் முதலில் சீனாவில் தான் துவங்கியது. இதை அறிமுகப் படுத்தியவர் யார் தெரியுமா?...சீன அறிஞர் கன்பியூ ஷியஸ்.

## சங்கேத மொழி!



**இரண்டாம்** உலகப்போரின்போது எதிரிகளிடம் இராணுவ இரகசியம் சிக்கி விடக்கூடாது என்பதற்காக பலநாடுகள் சங்கேத மொழியை உருவாக்கிக் கொண்டன. சுமார், 300க்கும் மேலான இரகசிய மொழிகள் அப்போது புழக்கத்தில் இருந்தன. ஆனால் நமது நாட்டில் 300 ஆண்டுகளுக்கு முன்பே மோடி என்றொரு இரகசிய மொழி மராட்டிய மாநிலத்தில் உபயோகத்தில் இருந்திருக்கிறது.

## தண்டனை கிடையாது



**ஒவ்வொரு** நாட்டு குடிமகனும் அந்தந்த நாட்டின் தண்டனைச் சட்டத்திற்கு உட்பட்டவர் ஆவார். அதாவது, அவர்கள் குற்றம் செய்தால் சட்டத்தால் தண்டிக்க முடியும். ஆனால் இங்கிலாந்து மன்னர், ராணி இருவர் மட்டும் இதற்கு விதிவிலக்கு. இவர்கள் கடுமையான குற்றம் செய்தாலும் கூட எந்த நீதி மன்றமும் இவர்களைத் தண்டிக்காது.


# சில விடுகதைகள்

1. காடுமேடெல்லாம் சுற்றி வந்தாலும் இருட்டும் நேரத்தில் மட்டும் காணாமல் போய் விடுவான் அவன் யார்?
2. இங்கும் அங்குமாய் ஆடிக் கொண்டே காலம் காட்டுவான் அவன் யார்?
3. துள்ளிக்குதித்து மரம் ஏறும் முத்தழகுக்கு முதுகிலே மூன்று கோடு அது என்ன?
4. நெருப்பைத் தொட்டவன் துள்ளிக்குதித்து ஓலமிட்டான் அவன் யார்?
5. அரைச்சாண் வெள்ளையனுக்கு கால் சாண் தொப்பி அவன் யார்?
6. சட்டைபோதாத ஜாலக்காரன் போடாத சட்டையைக் கழற்றும் மாயக்காரன் அவன் யார்?
7. மரக்கிளையை தலையில் சுமந்தபடி மரணபயத்துடன் ஓடிக் கொண்டிருப்பான் அவன் யார்?
8. சொல்லின்றி செயலின்றி அழ வைப்பாள் அவள் யார்?
9. தண்ணீரில் குதித்தாடியவன் வீட்டுச் சமையலில் கொதிக்கிறான் அவன் யார்?
10. ஆழக்கடலில் தேடிக் கிடைத்த அழகுப் புதையல் அது என்ன?

**விடைகள்**
1. நிழல்
2. கடிகார பெண்டுலம்
3. அணில்
4. பட்டாசு
5. தீக்குச்சி
6. பாம்பு
7. மான்
8. வெங்காயம்
9. மீன்
10. முத்து




## உயரம்



**ஒட்டகச்** சிவிங்கிகளுக்கு பருவகாலம் என்று ஒன்றில்லை. வருடத்தில் எந்த மாதத்திலும் அவை இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதுண்டு. கர்ப்பம் தரித்து 16 மாதங்களின் பின்னரே குட்டிகள் பிறக்கும். குட்டிகள் நாளாந்தம் ஓர் அங்குலம் என்ற ரீதியில் அதிவேகமாக வளர்ச்சியடையும். குட்டிகள் இரண்டு மாதங்கள் ஆகியதும் இலைகளை உண்ணத் தொடங்கி விடும். ஆறாவது மாதத்தில் அவை தாயை விட்டுப் பிரிந்து சுதந்திரமாக வாழத் தொடங்கி விடும். முழுதாக வளர்ச்சியடைந்த ஒட்டகச் சிவிங்கிகள் நான்கு மீற்றரிலிருந்து 6 மீற்றர்கள் வரை உயரம் கொண்டவையாக இருக்கும். ஒட்டகச் சிவிங்கிகள் தமக்கு ஆபத்து வரும் போது முன்னங்கால்களைப் பயன்படுத்தித் தாக்கும். மற்றுமொரு ஒட்டகச் சிவிங்கியோடு சண்டை பிடிக்கும்போது கழுத்தையும் தலையையும் பயன்படுத்தி முட்டி மோதும். ஆண் ஒட்டகச் சிவிங்கின் கொம்புவரை 18 அடி உயரமானவையாக இருக்கும். தோள் பட்டைவரை 9 இலிருந்து 11 அடிவரை உயரமானவையாக இருக்கும். பெண் ஒட்டகச் சிவிங்கிகளின் உயரம் 2 அடி குறைவாகவே இருக்கும். ஆண் சிவிங்கிகள் 2420 இலிருந்து 4250 இறாத்தல்கள்வரை எடை கொண்டவையாக இருக்கும். பெண் சிவிங்கிகளின் எடை 1540 இறாத்தலிலிருந்து 2600 இறாத்தல்கள்வரை இருக்கும். இவற்றின் நாக்கு 18 அங்குலம் நீளமானவை. ஒட்டகச் சிவிங்கிகள் சாப்பாட்டு இராமன்கள். நாளொன்றுக்கு 75 இறாத்தல்கள் இலை குழைகளைத் தின்று தீர்த்துவிடும்.

## சவாரி



**போதகர்** என்றால் உலக சாதனை செய்யக் கூடாதென்று எந்தக் கட்டுப்பாடுமில்லை என்று நினைப்பவர் டெரி. கோர்ற்சென் கனடாவின் வின்னிப்பொக் என்ற இடத்திலுள்ள மென்னோமைற்ட் என்ற தேவாலயத்தில் போதகராகப் பணிபுரிந்து வரும் டெரி, உலகிலேயே மிக உயரமான துவிச்சக்கர வண்டியில் ஓடிச் சாதனை புரிந்தவரென்று இவரது பெயர் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 5.5 உயரமான துவிச்சக்கர வண்டியில் 300 மீற்றர்களுக்கு ஓடி இவர் சாதனை படைத்துள்ளார். ஓர் ஏணியைப் போன்று இவரது துவிக்சக்கர வண்டி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்தத் துவிச்சக்கர வண்டிக்கு 11 மீற்றர் செயின் பொருத்தப்பட்டிருந்தது. இவரது மனைவியான சுஆன் நத்தார் பரிசாக வெல்டிங் இயந்திரமொன்றைக் கையளித்ததும், உலகில் உயரமான துவிச்சக்கர வண்டி ஒன்றினை நிர்மாணித்து, ஓடிச் சாதனை புரிந்தால் என்னவென்று ஞானோதயம் பிறந்ததாம் இந்தப் போதகருக்கு. உயரமான துவிச்சக்கர வண்டியில் ஓடுவதைப் பார்ப்பதற்கு 200 பேர் குழுமியிருந்தனராம். உள்ளூர் பத்திரிகையொன்று இச்சாதனை நிகழ்ச்சிக்குக் 'கடவுளை நெருங்குதல்' என்று தலைப்பிட்டிருந்தது.

## பிஸ்தா



**மெக்சிக்கோ** என்ற லத்தீன் அமெரிக்க நாட்டில் றிபியெர்ரா மாயா என்றொரு பிராந்தியம் இருக்கிறது. எமது நாட்டில் கொண்டாடப்படும் உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தைப் போன்று அறுவடை தினம் கொண்டாடப்படுவது வழக்கம். இதனை பெறாகொஸ்ரோ விடுமுறை தினம் என்று அழைக்கிறார்கள். 'பிஸ்ஷா' என்றழைக்கப்படும் ஒரு வகை உணவுப் பதார்த்தத்தை உருவாக்கி சாதனை படைத்திருக்கிறார்கள். 152 அடி நீளமான இந்த சிசிலியன் பிஸ்ஷா 8 அடுக்குகளைக் கொண்டது. இக் கொண்டாட்டத்திற்கு வந்தவர்களில் எவ்வளவு துண்டுப் பிஸ்ஷாவை வேண்டுமென்றாலும் உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். உண்மையிலேயே இந்தப் பெரா கொஸ்ரோ விழாவின் பிறப்பிடம் இத்தாலியாகும். வருடாந்தம் நடைபெறுகின்ற கொண்டாட்டங்கள் கன்னி மரியாளின் ஞாபகார்த்தமாக நடத்தப்படுகின்றன. ஆடல், பாடல், உணவு, வாணவேடிக்கை என்றெல்லாம் இந்தக் கொண்டாட்டம் ஒரே அமர்க்களமாக இருக்கும்.

## போட்டியாக...




**இந்தியாவில்** மும்பையைப் போன்று, சீனாவில் ஷங்காய் பாரிய வர்த்தக மையமாகத் திகழ்கிறது. சீனாவில் இந்த வர்த்தக மையத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் உலகநிதி கட்டிடத்தையே படத்தில் காண்கிறீர்கள். இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதும் உலகிலேயே மிக உயரமான கட்டிடம் என்ற பெயரைத் தட்டிச் சென்று விடும். ஷங்காயின் புடோங் என்ற இடத்தில் இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தற்போது சீனாவின் மிக உயரமான கட்டிடம் என்று கருதப்படும் ஜின் மௌவ்வும் ஷங்காயிலேயே உள்ளது. இதற்கு அருகாமையிலேயே உலகின் அதிஉயர் கட்டிடமென்ற பெயரைத் தட்டிச் செல்லப் போகும், 'ஷங்காய் உலக நிதி மையம்' நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## துல்லியம்



**இலாபத்தை** எதிர்பார்க்காத வைத்திசாலைகளை சமய ஸ்தாபனங்கள் நடத்துவதுண்டு. சென். ஜோசப் சகோதரிகள் என்ற கன்னியாஸ்திரிகள் 15 வைத்தியசாலைகளை நடத்துகின்றனர். இவற்றிலெல்லாம் கணனி மயப்படுத்தப்பட்ட நுண்ணிய தொழில் நுட்பத்தைக் கொண்டு நோயாளிகளின் நோய்களைக் கண்டு பிடிக்கக்கூடிய அதிநுட்பமான கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். உடலின் பல்வேறு பகுதிகளில் ஒரு மில்லிமீற்றருக்கும் குறைவான பகுதிகளை 10 செக்கன்களில் படம் பிடித்துக் காட்டக்கூடிய அளவுக்கு துல்லியமானவை இக்கருவிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



சேரன் - நவ்யாநாயர்
மாயக்கண்ணாடி

# 20 வில்லன்களுடன் அஜித் மோதல்

**சுஜாதாசினி** ஆர்ட்ஸ் ஆட்லாப்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் படம் 'கிரீடம்'. இப்படத்துக்கான 2ஆம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடர்ந்து நடைபெற்றது.

பி அண்ட் சி மில்லில் ஆர்ட் டைரக்டர் செல்வகுமார் பெரிய செட்டை அமைத்தார். அந்த செட்டில் 7 நாட்கள் அஜித், வில்லன் அஜய்குமார் அவரது கும்பலைச் சேர்ந்த 20 பேருடன் மோதும் காட்சிகள் படமாக்கப் பட்டது. அதன் பிறகு விசாகப்பட்டினத்தில் கூத்துப்பட்டறையைச் சேர்ந்த 20 பேருடன் அஜித் மோதும் ஒரு சண்டைக் காட்சி படமாக் கப்பட்டது.

விசாகப்பட்டினத்தில் ஜன நெருக்கடியான பல இடங்களில் அஜித், வில்லனின் ஆட் களை விரட்டி சண்டை போடும் காட்சிகள் படமாக்கப்பட்டது. இந்த 3 சண்டை காட்சி களையும் ஜிம்மி ஜிப் - அகிலா கிரேனின் உதவியோடு ஸ்டெடிகாம் -435 ஹை ஸ்பீட் கேமிராக்களின் உதவியோடு திரு ஒளிப்பதிவு செய்தார். இக்காட்சியில் டூப் இல்லாமல் ரோப் இல்லாமல் அஜித் நடித்தார்.



# கணவர் கொடுமை — நடிகை விவாகரத்து மனு!

**மேலுமொரு** நட்சத்திர ஜோடி சட்டபூர்வமாக பிரிகிறது. தனது எழுபது எம்.எம்.கண்களால் கலைத்துறையைக் களைகட்ட வைத்த சரிதா தனது கணவரிடமிருந்து விவகாரத்துக் கோரி கோர்ட்டில் மனுதாக்கல் செய்துள்ளார்.

சரிதா மலையாளப் படவுலகைச் சேர்ந்த நடிகர் முகேஷை காதலித்து திருமணம் செய்து கொண்டார். முகேஷ் தமிழில் பாலசந்தரின் ஜாதிமல்லி படத்தில் நடித்தவர். இவர்களுக்கு 17 வயதிலும் 15 வயதிலும் மகன்கள் உள்ளனர்.

பல வருடங்களாக முகேஷும் சரிதாவும் பிரிந்து வாழ்கின்றனர். முகேஷ் இருப்பது கேர ளாவில். இருமகன்களுடன் சரிதா வசிப்பது சென்னையில். தனது மகன்களைப் பார்க்க அனுமதிக்க வேண்டும் என முகேஷ் வழக்குத் தொடர்ந்ததை அடுத்து, மாதம் ஒரு முறை சென்னை வந்து மகன்களைப் பார்க்க அனு மதிக்கப்பட்டார்.

இந்நிலையில் தனது கணவர் கொடுமைப் படுத்துகிறார் அதனால் விவகாரத்து வேண்டும் என கோர்ட்டில் மனு செய்தார் சரிதா. இருமுறை நடந்த விசாரணையில் முகேஷ் ஆஜராகவில்லை. இதனால் வரும் 26ஆம் திகதிக்கு வழக்கு விசார ணையை தள்ளி வைத்த நீதிபதி, அன்றைய தினம் முகேஷ் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

சரிதாவும் முகேஷும் கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழத் தொடங்கி பல வருடங்கள் ஆகிறது. இந்நிலை யில் கணவர் கொடுமைப்படுத்துவதாகச் சரிதா குற்றம் சாட்டியிருப்பது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.




தனுஷ் - நயன்தாரா
யாரடி நீ மோகினி



**இன்னும்** எண்பது சொச்சம் நாள்களே பாக்கி. அதையும் கடந்தால் தமிழ் சினிமா சரித்திரத்தில் சாதனை படமாகிவிடும் ரஜினியின் சந்திரமுகி.

**ரஜினி** மாதிரி வரவேண்டியவர் கஜினி மாதிரி பழைய விஷயங்களை மறப்பதா என தனுஷைக் கடுமையாக தாக்கியிருக்கிறார் தயாரிப்பாளர் ஒருவர்.



நாகர்ஜீன் - நயன்தாரா
சொல்லத்தான் நினைக்கிறேன்

# இளைஞர்களைக் கெடுக்க விரும்பவில்லை; இனி கவர்ச்சியாக நடிக்க மாட்டேன்!

## - நடிகை ஷகிலா

**சொர்க்கம்,** காம அக்னி, சிந்தாமணி போன்ற படங்களில் ஆபாசமாக நடித்து பிரபலமானவர் நடிகை ஷகீலா. ஆந்திராவைச் சேர்ந்த இவர் மலையாளத்தில் ஏராளமான ஆபாசப் படங்களில் நடித்துள்ளார். இப்படங்கள் அனைத்தும் தமிழ், தெலுங்கு மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டு வசூலை வாரிக் குவித்துள்ளது.

இந்த நிலையில் நடிகை ஷகீலா பெங்களூரில் நிருபர்களிடம் கூறியதாவது :

நான் 4 ஆண்டுகளுக்கு முன்பு படத் தயாரிப்பாளர் போஸ் என்பவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டேன். எனது திருமணத்திற்குப் பிறகு படிப்படியாக நடிப்பதை குறைத்துக் கொண்டேன்.

தற்போது தமிழ், தெலுங்கு மலையாள சினிமா தயாரிப்பாளர்கள் சிலர் என்னை கவர்ச்சியாக நடிக்குமாறு அழைப்பு விடுத்தனர். அதை நான் ஏற்க மறுத்து விட்டேன். ரசிகர்கள் பலரும் என்னை கவர்ச்சியாக நடிக்கும்படி வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர்.

நான் இனிமேல் கவர்ச்சியாக நடிக்கமாட்டேன். என் உடலைக்காட்டி இளைஞர்களின் மனதைக் கெடுக்க விரும்பவில்லை. குடும்பப் பாங்கான வேடங்களில் மட்டும்தான் நடிப்பேன். நான் சினிமாவில் ஆபாசமாக நடித்ததை தற்போது மிகவும் கேவலமான ஒன்றாகவே கருதுகிறேன். அப்படி நடித்ததற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அப்போது எனக்கு பணக்கஷ்டம் இருந்ததால் தான் ஆபாசமாக நடித்தேன்.

நான் நடித்த 25 படங்கள் சென்சாரில் சிக்கி ரிலீஸ் செய்யப் படாமல் உள்ளது. அந்த தயாரிப்பளர்கள் தற்போது கடனில் சிக்கித் தவிக்கிறார்கள்.

நான் கவர்ச்சிக்கு குட் - பை சொல்ல காரணமானவர்கள் நடிகர்கள் மம்முட்டியும், மோகன்லாலும்தான். அவர்கள் தான் எனக்கு ஆபாசமாக நடிக்க வேண்டாம் என்று அட்வைஸ் சொன்னார்கள். இதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.


# மனிதாபிமானம் மறந்தவர்கள்

**தலைநகரை** பெயரில் கொண்ட பழைய நடிகர் பைபாஸ் ஆபரேசன் செய்தார். அவருக்கு நிறைய இரத்தம் தேவைப்பட, சினிமாக்காரர்கள் சிலரை தொடர்பு கொண்டனர். யாருக்கும் இரத்தம் தர மனம் வரவில்லையாம். அப்புறம் சின்னித்திரையினரிடம் கேட்க அவர்கள் நான், நீ என்று போட்டி போட்டு ஆஸ்பத்திரியில் குவிந்து விட்டனர். திரையுலகம் மனிதாபிமானத்தை மறந்து போகுதே என்று மூத்த நடிகர் ஒருவர் புலம்பினார்.

**காதல்** நடிகரை கடிவாளம் அறுந்த குதிரையாக துரத்திக் கொண்டிருக்கிறார் ஒரு இளம் நடிகை.



ஜீவன் - காம்னா
மச்சக்காரன்



பரத் - சந்தியா
கூடல் நகர்

# ரமணா நடிக்கும் 'நாயகன்'

**ரமணா** நடிக்கும் புதிய படம் நாயகன். தவறான தொலைபேசி அழைப்பினால் ஏற்படும் விளைவுகளை 24 மணி நேரத்திற்குள் கூறும் கதை இது. கமலஹாசன் நடிப்பில், மணிரத்னத்தின் இயக்கத்தில் வெளிவந்த நாயகன் படத்தின் தலைப்பே இப்படத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ஷாகியா செல்லு லாயிட்ஸ் எனும் பட நிறுவனம் சார்பில் விஜயகுமார் ரெட்டி தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி சரவண ஷக்தி இயக்குகிறார். தயாரிப்பு மேற்பார்வை - கே.சந்தானபாண்டியன், லோகநாதன்.

இளம் முன்னணி நடிகை கதாநாயகியாகவும், பல முன்னணி நட்சத்திரங்களும் நாயகன் படத்தில் நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு சென்னை, ஐதராபாத், ஊட்டி போன்ற இடங்களில் நடக்கிறது.



பாளி

# 'மொழி'யால் இணைந்தவர்கள்

**பிரகாஷ்ராஜ்,** பிருதிவிராஜ சேர்ந்து நடித்த 'மொழி' படம் ஹிட் ஆனதைத் தொடர்ந்து மீண்டும் இருவரும் சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கின்றனர். நாயகியாக திரிஷா நடிக்கிறார்.

மொழியில் வசனம் எழுதிய விஜி இப்படத்தை இயக்கவுள்ளார். படத்தின் பெயர் வெள்ளித்திரை இவர் ஏற்கனவே மஜா, மாயாவி, பொன்னியின் செல்வன், அழகிய தீயே, படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். அள்ளித்தந்த வானம் என்ற படத்தை இயக்கியவர்.

# விஷால் - திரிஷா ஜோடி

**தெலுங்கில்** வெற்றி பெற்ற 'பொம்மரிலு' படத்தை தமிழில் எடுக்கிறார் பிரகாஷ்ராஜ். இதில் விஷால், திரிஷா ஜோடியாக நடிக்கிறார்கள்.

# மற்ற நடிகைகளைக் காப்பி அடிக்க மாட்டேன் : ஆண்ட்ரியா ஜெர்மியா!

**பச்சைக்கிளி** முத்துச்சரம் படம் மூலம் தமிழ் சினிமா உலகிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் ஆண்ட்ரியா ஜெர்மியா, அந்தப் படத்திற்குப் பிறகு புதுப்படங்கள் எதையும் ஒத்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று இந்தப் பேட்டியில் அவரே கூறுகிறார்:-

'பச்சைக்கிளி முத்துச்சரம்' வெளிவருவதற்கு முன்பு இசைத்துறையில் ஒரு பாடகியாக பிரபலமாகியிருந்தேன். ஆனால் அந்தப் படம் வெளிவந்த பிறகு எல்லோரும் பாடகி என்பதை மறந்து நடிகையாகவே என்னைப் பார்க்கிறார்கள். இப்போது பாடல்கள் பாடுவதற்கு ரொம்ப ஆர்வமாக இருக்கிறேன்.

நான் டஜன் கணக்கில் படங்களை ஒப்புக்கொண்டு பிசியாக இருப்பேன் என்று ஒவ்வொரும் நினைக்கிறார்கள். எனவே என்னைப் பார்ப்பவர்கள் எல்லாம் சூட்டிங்கிறகாக வெளிநாடு சுத்தி கிட்டிருப்பார்னு பார்த்தா சென்னையில் சுத்திட்ருக்காளேன்னு மனதிற்கு நினைத்தபடி ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள்.

உண்மையைச் சொல்வதென்றால் புதிதாக ஒரு படத்தைக் கூட இன்னும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. சினிமாவில் விருப்பம் இல்லை என்பதற்காக புதுப்படங்களை ஒதுக்கவில்லை. நான் எந்த வேலையையும் மிகவும் தேர்ந்தெடுத்துச் செய்வேன். பாட்டு, நடிப்பு, மாடலிங்குன்னு எதுவாக இருந்தாலும் சரி இந்த கொள்கையை விடாமல் கடைபிடிப்பேன்.

எனவே தற்போது நல்ல கதைக்காகவும், நல்ல வேடத்திற்காகவும், சிறந்த டைரக்டருக்காகவும் காத்திருக்கிறேன். பிற நடிகைகளைப் பின்பற்றி அவர்களின் கார் பன் காப்பி போல் செயல் படவிரும்பவில்லை. படங்களைத் தேர்வு செய்வது, நடிப்பது என எல்லாவற்றிலும் தனித்துவத்தோடு விளங்கவே விரும்புகிறேன் என்கிறார் ஆண்ட்ரியா.



ஜீவன் - ஜோதிர்மயி
நான் அவன் இல்லை

**சிவாஜி** படத்தில் பின்னணி குரல் கொடுக்க நடிகை சந்தியாவுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு கை நழுவி கனிகாவுக்குச் சென்றுள்ளது.





# பலத்த பாதுகாப்புடன் நடக்கும் நயன்தாரா படப்பிடிப்பு!

**கறுப்பு** பூனைப்படையும் கையில் ஏ.கே.47லும் தான் இல்லை. மற்றபடி முதல் குடிமகனுக்குக் கொடுக்கும் பாதுகாப்புதான் நயன்தாராவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

சிம்புவுடனான காதல் தோல்வியில் முடிந்த பிறகு 'யாரடி நீ மோகினி' போட்டோசெஷனுக்காக சென்னை வந்தார் நயன்தாரா. பெரிய புரட்சியாளர்களுக்குக் கொடுக்கும் பாதுகாப்பை நயன்தாராவுக்கு கொடுத்து புருவத்தை உயர்த்த வைத்தது யாரடி நீ மோகினி யூனிட்.

இப்படம் செல்வராகவன் தெலுங்கில் இயக்கிவரும் படத்தின் ரீமேக். கதை, திரைக்கதை, வசனத்தை செல்வராகவன் எழுத, அவரது உதவியாளர் ஆர்.ஜவஹர் படத்தை இயக்குகிறார். வழக்கம் போல யுவன்ஷங்கா ராஜா இசை, நா.முத்துக்குமார் பாடல்கள்.

சென்னை வந்த நயன்தாராவுக்கு சிம்பு மற்றும் அவா நலம் விரும்பிகளால் தொந்தரவு வரலாம் என்ற முன்னெச்சரிக்கையில் பலத்த பாதுகாப்பு நயன்தாராவுக்குக் கொடுக்கப்பட்டது. பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர்.

பிரசாத் ஸ்டுடியோவில் யாரடி நீ மோகினிக்காக பிரமாண்ட அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இதில் நடிக்கவிருக்கும் நயன்தாராவுக்கு தமிழ் திரையுலகம் காணாத அளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளார்களாம். அவர் தங்கியிருக்கும் ஹோட்டலிலிருந்து படப்பிடிப்பு தளம் வரை சென்று வருவதற்கும் பாதுகாப்பு போட்டுள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படத்தில் தனுஷ், நயன்தாராவுடன் கருணாஸ், ராஜன் பி.தேவ், மனோபாலா ஆகியோரும் நடிக்கிறார்கள். செனனையில் தொடங்கி ஹைதராபாத் மற்றும் கேரளாவிலும் படப்பிடிப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளனர். எனினும் நயன்தாராவுக்கு இஸட் பிரிவு பாதுகாப்பு சென்னையில் மட்டும்தான்!

அந்தளவுக்குச் சிம்பு டெரரிஸ்டா என்ன?

# சதாவின் அசாதாரண வளர்ச்சி

**அந்நியன்** படத்துக்குப் பிறகு தமிழ் சினிமாவிலிருந்தே அந்நியமாகிப்போன சதாவின் இரண்டாவது இன்னிங்ஸ் நம்ப முடியாதது. அந்தளவுக்குப் பட வாய்ப்புகளைத் தனது பாக்கெட்டில் வைத்திருக்கிறார் இந்த அண்டங்காக்கா கொண்டைக்காரி.

ஜீவா இயக்கத்தில் இவர் நடித்த 'உன்னாலே உன்னாலே' இன்னும் சில வாரங்களில் ரிலீஸாகயிருக்கிறது. இது தனது இரண்டாவது இன்னிங்ஸுக்குச் சிறப்பான தொடக்கமாக இருக்கும் என நம்புகிறார் சதா.

இதனைத் தொடர்ந்து மாதவன் ஜோடியாக 'லீலை' படம் வர இருக்கிறது. எதிரி, ப்ரியசகி படங்களுக்குப் பிறகு மாதவன் - சதா இணையும் மூன்றாவது படம் இது.

தெலுங்கில் சிரஞ்சீவியுடன் சங்கர்தாதா ஜிந்தாபாத் படத்தில் நடிக்கிறார். தவிர, கிளாஸ் மேட்ஸ் படமும் கைவசம் இருக்கிறது. இவை தென்னிந்தியாவில். இந்தியில் 'லவ் வை சான்ஸ்' படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார் சதா.

இவையனைத்தையும் விட முக்கியமான விஷயம் அஜித் நடிக்கும் 'பில்லா 2007' படம். இதில் நடிக்க சதாவிடம் பேசி வருகிறார்களாம். ஏற்கனவே அஜித்துடன் திருப்பதி படத்தில் இவர் நடித்திருப்பது முக்கியமானது.

ராசியில்லாத நடிகை என ஒதுக்கிய சதாவின் அசாதாரண திரும்பி வரவு சக நடிகைகள் வயிற்றில் பட்டாம் பூச்சிகளை பறக்க விட்டிருக்கிறது.

# ஸ்ரீப்ரியா அக்காள் மகன் நாயகனாகிறார்

**பழைய** கதாநாயகி ஸ்ரீப்ரியாவின் அக்காள் மீனாவின் மகன் சிவாஜி, கதாநாயகனாக அறிமுகமாகிறார். இப்படத்தை ஏ.வெங்கடேஷ் இயக்குகிறார். பரத், நிலாவை வைத்து தற்போது எடுத்து வரும் கில்லாடி முடிந்ததும் படப்பிடிப்பை தொடங்குகிறார். மே மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. முழுக்க முழுக்க புதுமுகங்களை வைத்து இப்படத்தை எடுக்கிறார்.




## சுகம் வருமோ இனியாவது...

தைப்பொங்கல்
பெருநாளை
தைரியமாய்
வரவேற்றிட
'மெய்'யில்
மட்டுமல்ல,
கையிலும் தெம்பில்லை!

பொய்யாய்
பழங்கதையாய்
போய்விட்ட
தமிழர் வாழ்வில்,
நெய்மணக்க
கைமணக்க
நிச்சயம் ஒரு
பொங்கல் வரும்!

மொட்டுகளை
தொலைத்த
முற்றம்!
முகவரிகளை
தொலைத்த
சுற்றம்!
கட்டுக்கடங்கா
சோகம்,
கனவுகளையும்
கலைக்கையிலே,
பட்டாசு
பலகாரம்
எட்டாமல்
போயச்சு!
எம்மவர்
பொங்கலிலே!

மாவிலை
தோரணங்கள்
மனங்களில்
களிப்பூட்ட,
மஞ்சளும்
செங்கரும்பும்
மனைகளிலே
பந்தலிட
கோலப்பானை
கொட்டி தந்த
காலப் பொங்கல்
மாறிப்போச்சு!
நாளும் வந்த
போரினாலே,
நமது
வாழ்வும்
நாறிப்போச்சு!

போதும்
என்ற, மனம்
இன்னும்
வரவில்லை!
பலருக்கு!
ஏது(ம்)மறியா
பிஞ்சுகளும்
இறக்கின்றன
சூதினாலே!
ஆதியிலே
எழுந்த இனம்
அழியலாமோ
மடைமையினால்
சோதனை
போதுமிங்கே
சுகம் தருவர்
இனியாவது...!

*-நா.ஜெயபாலன்,*
*பிபிலை.*

## இரத்தம் சிந்துகிறோம்!

குடிசைகள் மீதும்
எங்கள் உடல்கள் மீதும்
அடிக்கடி வீழ்ந்து
எங்களுயிர் எடுக்கிறது, மண்சரிவு!

வாழ்க்கை சுமையுணர்ந்து,
கல்விப்பாதை மறந்து,
முதுகுதனில் கூடைச் சுமையுடன்
மலையேறியே... பாடுபடும்
எங்கள் இளமொட்டுச் சிறுமிகள்!

நான்கைந்து உணவு சமைத்துண்டு,
பஞ்சணை மெத்தைதனில்
சொகுசாய்த் துயில்கின்ற,
இதயங்கள் பலயிருக்கும் இந்நாட்டிலே...
கால்வயிறு கஞ்சிகுடித்து, மீதி வயிற்றில்
சுவாசிக்கிறோம் நாங்கள்!
வானம் தெரியும் குடிசையுள்ளே...

சிறுகூலி போதாதென்ற நாங்கள்
உயர் கூலி வேலைதேடி,
மறுபக்கமங்கே செல்லவும் முடியவில்லை.
எறிகுண்டுகளும்,
மோட்டார்க்கணைத் தாக்குதல்களும்,
மனதிற்கு வந்து அச்சம் எழுப்புகின்றன!

என்னது
செய்வதறியாமல் - சிறு தொகைப் பணத்திற்கு
ஒரு சாண் வயிற்றுக்கு, எரியும் வெயிலில்
வியர்வை சிந்துகிறோம்!

சிந்துவதெல்லாம் வியர்வையல்ல;
வியர்வை வடிவிலான எங்கள் இரத்தங்களே!

அன்று முதல் இன்றுவரையும்
ஆர்ப்பாட்டமெடுத்தே
ஊதிய உயர்வுக்காய்த் துயர்க் குரலும்
கொடுக்கிறோம் பலருக்கு...
இறுதியில் பூஜ்ஜியந்தான்
எங்களுக்கு!

இதயமற்றவர்கள் உணரவில்லையோ?
நாட்டின் உயர்ச்சிக்கு,
நாட்டின் விருத்திக்கு,
எங்கள் வியர்வையுரம்தான்
காரணக் கருவென்று!

எங்கள் வாழ்க்கையில்
ஒளியேற்ற வாக்குப் பெற்றவர்கள்
எங்கள் வாக்கு மறந்தார்களோ?

அரசு மாறிமாறியே
புதிது புதிதாக வந்திடினும்
இன்னும் பழையது பழையதாகவே
எங்கள் மலையகம் - இது
மாறவே மாறாதோ!?

*-எச்.எம்.எம்.பாஹிம்,*
*இறக்காமம் - 01.*

## யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்

வாழ்க்கையைப் போலவே - இன்று
தேசமும் தெருவில் நிற்கிறது
மானிட யாதகத்தில் மதிப்பிற்குரிய சொற்கள்
மறைந்து போகின்றது
சுதந்திரம் என்ற சொற்பதம்
சொற்களாக மட்டுமே சுடர்விட்டெரிகிறது.

கலியுக காலத்தில் புதுயுகம் படைத்தாலும்
சுதந்திரம் மட்டும் காணாமல் போகிறது
அடிமை விலங்கை தகத்தெறிய
ஆர்ப்பாட்டம் செய்த மனித குலம்
சுதந்திர தாகம் தணியாமல்
உயிரை மாய்த்தது அக்கிரமம்.

மொழியின் மதத்திற்கு சுதந்திரம் இல்லை
உயிருக்கும் உணர்வுக்கும் சுதந்திரம் இல்லை
கன்னிப் பெண்ணுக்கோ காலங்கள் எல்லை
தனித்து வாழ்ந்தாலே உடைமைகள் கொள்ளை
சுதேச நாட்டிலும் சுதந்திரம் இல்லை
சுற்றிப் பார்த்தால் கொடுமையின் எல்லை.

நீதி மன்றங்கள் நிர்வாணமானது
தர்மஸ் தூபிகள் தள்ளாடுகின்றது
அதர்மம் மட்டும் ஆட்சி அமைத்து - தன்
எண்ணப் போக்கில் அரசாள்கிறது
தட்டிக்கேட்க தலைகள் எழுந்தால்
பிணங்கள் தானே கீழே சாயுது.

*-சி.அபிராமி, திருகோணமலை.*

## பிரிகோடுகள்

முகவரிகளை தொலைத்துக்
கொண்டல்லவா உனதான
சுவாசங்களை தேடுவதாயிற்று
மூச்சுக்காற்றிலிருந்து
விடைபெறுவதனால்
இதயங்களுக்கு வலிப்பதனை
புரிந்து வைத்துள்ளேன்

ஏனென்றால்
நான் உன்னால்
அடிக்கடி ரணப்படுத்தப்படுபவன்
என்பதனால்.

எனக்கான புன்னகைகளை
சிறையிற்றிருப்பதனால்தான்
தென்றல் கூட வாழ்வியலில்
சுடுகாற்றாய் சுட்டெரிக்கின்றது.

உன் இதயங்களில்
நான் சுமையென்றான போது
பூக்களின் இதழ்களான
உன் நினைவுகளையும்
பாராங்கல்லாய் சுமந்து சுமந்து
காயமாகிப்போனது இளமைகள்.

என் வலிகளையும்
சுட்டெரிக்கும் வருடல்களையும்
சுகங்கண்டவளல்லவா - நீ.

சில கனம் என்னை
பரிகசிப்பதனையும்
பார்வைகளால் முறைப்பதனையும்
முறைப்பதனையும்
சுதாகரித்துக் கொண்டே
நடக்கின்றேன்
என்றாவது புன்னகைப்பூக்களாய்
உதிர்வாய்யென்பதால்.

நீவென்றாலே மௌனியாவதனால் .
எனை தினம் தினம் வாட்டவும்,
திட்டவும் முடிகின்றது உன்னால்

நான் கல்லறைகளுக்குச்
சொந்தமாக முன்
நீயும் நானும், நம்மோடு சில நிமிடங்களும்
எப்படியிருந்தது
வாழ்க்கை.

*- கியாஸ் எம்.மிப்றாஸ்,*
*மூதூர் - 01.*

## அடிமுடி தேடி அலையுதோர் கூட்டம்!

அடி
முடி
தேடி
இங்கே
அலையுதோர்
கூட்டம்!

தம்
குடி
இருப்பிடத்தே
கோவிலாய்
இருக்கும்

அந்தத்
தந்தைக்
கடவுளைத்
தலை
வணங்காமல்...

ஈன்ற
தாயவள்
இதயங்
குளிரத்
தாழ்
பணியாமலும்...

மண்ணுக்குப்
போகும்
மானிடர்
இவர்கள்...

கண்ணுக்குத்
தெரியாத
காலடி
தலையைத்
தேடி...

என்னத்திற்காக
அலைகிறார்
இங்கே?

*-பொன்.நவநீதன்,*
*கல்முனை.*

## சோகத்தில் ஆயிஷா டாக்கியா



**ஆயிஷா** டாக்கியா தான் சமீபத்தில் நடித்த படம் வெற்றி பெறும், பெரிய புகழ் கிடைக்கும், அதன் மூலம் புதிய படங்களில் நடிக்க சான்ஸ் வரும் என்று எதிர்பார்த்தார். படம் படுதோல்வி அடைந்தது. இதனால் மிகவும் மனம் நொந்து போனார் டாக்கியா. அந்த மன வேதனையை மறக்க தன் பாய் ஃப்ரெண்ட் பர்ஹன் ஹஸ்மியை அழைத்துக்கொண்டு ஜாலியாக கோவாவுக்கு டூர் போனால் அங்கேயும் இவருக்கு துரதிர்ஷ்டம் தொடர்ந்து வந்தது. காதலன் பர்ஹன் ஹஸ்மிக்கு வழக்கமாக வரும் வயிற்றுவலி வந்துபடுத்துவிட, அவரை மும்பை வீட்டுக்கு கொண்டு வந்து பகல் முழுவதும் நர்ஸாக இருந்து பணிவிடை செய்தாராம் டாக்கியா.

வழக்கமாக இவர் நடிக்கும் ராஜஸ்ரீ ஃபிலிம்ஸின் அடுத்த படத்திலாவது சான்ஸ் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாராம் ஆயிஷா.

## கொய்னாவின் குறும்பு



**பாலிவுட்** நடிகை கொய்னா மித்ரா. இவர் தனது ரசிகர்கள் - நண்பர்களுக்கு அதிர்ச்சி தரக்கூடிய குறும்புத்தனமான ஏமாற்று வேலை ஒன்றை செய்தார். அதாவது பெப்ரவரி-29 அன்று மாரியட் ஹோட்டலில் எனது என்கேஜ்மெண்ட் நடக்க இருக்கிறது. அதைத் தங்களுக்கு தெரிவிக்க உங்கள் முகவரியை தெரிவிக்கவும் என்று எஸ்.எம்.எஸ்.மூலம் தெரிவித்திருந்தார். ஆனால் விபரம் தெரிந்த நண்பர்கள், ரசிகர்கள் இதற்கு பதில் அனுப்ப வில்லை. இந்த ஆண்டு பெப்ரவரியில் 28 நாள்தான் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தது. இது தெரியாத பல நண்பர்கள் அவருக்கு எஸ்.எம்.எஸ்.மூலம் பதில் அனுப்பியிருந்தனராம்.

## சித்தார் புதல்வி




**தாமதமின்றி** மீண்டும் முதலாவது இடத்தைப் பிடித்துக் கொள்வதற்கு பிரபலப் பாடகி நோரா ஜோன்ஸ் முயற்சித்து, அதில் வெற்றியும் கண்டுள்ளார். 'Not too Late' எனும் இவரது புதிய பாடல் வரிசையில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

இப்பாடல் அடங்கிய அல்பத்தின் பிரதிகள் 4 இலட்சத்தைத் தாண்டி விற்பனையாகியுள்ளது.

நோரா - பிரபல சித்தார் வாத்தியக் கலைஞர் ரவிசங்கரின் புதல்வியாவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முதல் பாடகி



**சர்வதேச** Sports Illustrated சஞ்சிகையின் அட்டைப் படத்தை அலங்கரித்துள்ள முதலாவது பாடகி என்ற பெயரை பியொன்சே பெற்றுக் கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் இவர் தற்போது மொடலிங் தொழிலிலும் காலடி எடுத்து வைத்துள்ளார்.

அதேநேரம் பியொன்சே ஒரு நடிகையாகவும் தனது திறமைகளை வெளிப்படுத்தி உள்ளார்.

Dream Girl திரைப்படத்தில் இவர் நடித்ததற்காக தனது வாழ்க்கையில் பத்தாவது முறை கிரபி விருதை இவர் அண்மையில் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# லேடிஸ் ஸ்பெஷல்

## மரியாதைக்குரிய முதல் நபர்

**உலகத்திலேயே** மரியாதை தரும் முதல் நபர் யார்?...என்று கேட்டால்...

பொதுவாகவே அலுவலகத்தில் உள்ள நபர்கள், தோழிகள், தோழர்கள், வி.ஐ.பி.க்கள், நிபுணர்கள்னு ஏதாவது ஒரு சராசரியாய் பதில் வரும் அனைவரிடம் இருந்தும்.

பசங்க! என்று சொன்னால் அது நிச்சயமாய் வித்தியாசமான பதில் தான்.

பசங்களா? நான் அவங்களைப் பத்திக் கேட்கலே. மரியாதை தரும் நபர்களைக் (வி.ஐ.பி.க்களை) கேட்டேன்! என்று கேள்வியை மறுபடியும் விளக்கமாகக் கேட்டாலும் அதே வித்தியாசமான பதில் வந்தால்...

இந்த அத்தனை வரிசையிலும் கூட எங்கள் குழந்தைகளை முதலில் மதிக்கிறோம். என்ற பதில் மறுபடியும் வந்தால்...

என்ன? பசங்க மேல நாம பாசம் வைக்கலாம். ஆனா மரியாதைங்கிறது வேற...! சரி. எதனால பசங்க மேல மரியாதை வச்சிருக்கனும்.

நம் பசங்களிடம் பாசம் வைப்பதற்கு நாம் புதிதாக ஏதும் செய்ய வேண்டியதில்லை. அது இயல்பாகவே நமக்குள் இருக்கும் விஷயம். மரியாதை என்பது அவர்களிடம் நாம் உண்மையாக நடந்து கொள்ள முயற்சி செய்வது என்பதாகும். எடுத்துக்காட்டாக...

ஒரு வீட்டின் குடும்பத் தலைவர் பி.டபிள்யூ.டி.யில் வேலை செய்தார். அவர் அரசு அலுவலகத்தில் வேலை செய்தபடியே சைடில் ரியல் எஸ்டேட் பிஸினஸும் செய்து வந்தார்.

பெரும்பாலான நாட்கள் அலுவலகம் போய் கையெழுத்துப் போட்டுவிட்டு அப்படியே கிளம்பி வெளியே தன் சொந்த வேலையாகப் போய் விடுவார். அலுவலகத்திலிருந்து போன் வந்தால் என்ன சொல்லவேண்டும் என்று மனைவியிடம் சொல்லி வைப்பார். பணம் கடன் தந்த குறிப்பிட்ட சில நண்பர்கள் வந்தால், வீட்டுக்குள் இருந்தபடியே இல்லை என்று பசங்களை விட்டு சொல்லச் சொல்வார்.

இந்தச் சமயத்தில் தான் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த அவர்கள் மகன் கிட்டத்தட்ட ஒரு மாதமாக ஸ்கூலுக்கே வராமல் போனதாக கடும் ரிப்போர்ட் வந்தது ஸ்கூலிலிருந்து!

வீட்டுக்கு வந்த குடும்பத் தலைவர் செய்தி கேட்டு மகனை வீசி விளாறி விட்டார்.

நண்பர்களோடு சுற்றிக் கொண்டு மார்க்ஷீட்டையும் வீட்டில் காட்டாமல், தானே அப்பா போல் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறான் அந்தப் பையன்.

அன்று அப்பாவிடம் அடி வாங்கிய அந்தப் பையன். மறுபடி மறுபடி அதே விஷயத்துக்கு அடிவாங்கினான். அவன் பள்ளிப் படிப்பும் நின்று போனது.

தன் குழந்தையின் இத்தனை தவறுகளுக்கும் தானே தான் காரணம் என்று அந்த அப்பாவுக்கு இன்னும் கூட புரியவே இல்லை.

குழந்தைகள் எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யக்கூடாது என்று கற்றுக் கொள்வதற்கு பெரும்பாலும் பெற்றோர்களே தான் ரோல் மாடல்களாக இருக்கிறார்கள். குழந்தைகளோடு அதிகமான நேரம் பக்கத்திலேயே இருப்பது அவர்கள் தான்.

சின்னச் சின்னதாகவோ, பெரிதாகவோ பொய் சொல்லும் பெற்றோரைத் தன் தினசரி வாழ்வில் பார்த்துப் பார்த்து வளரும் குழந்தைகளுக்குப் பொய் ஒரு பெரிய தவறில்லை...! என்ற எண்ணத்துடனேயே தான் வளர ஆரம்பிக்கிறது.

ஒருவேளை அப்படிப் பொய் பேசுவது தவறு என்று அந்தக் குழந்தை தன் ஆசிரியர் மூலமோ, நண்பர்கள் மூலமோ உணர்ந்து கொண்டாலும், அதை உணர்ந்த பின், பொய் சொல்லும் அல்லது விஷயங்களை ஓவராக பெரிதுபடுத்திச் சொல்லும் தன் தந்தை, தாய் பேரில் இருக்கும் மரியாதை போய் விடுகிறது.

பெற்றோரின் மீதிருக்கும் மரியாதை போய்விட்டால் குழந்தை, பெற்றோரின் வார்த்தைகளையும் கேட்பதில்லை.

என்ன பேச்சுப் பேசறான் பார்...பெத்தவன்னு ஒரு மரியாதை இருக்கா...என்று வெறுமனே கத்தி பிரயோசனமில்லை.

ஆனால் எனக்கு நீ மரியாதை குடு...நான் இந்தக் குடும்பத் தலைவன் என்று குழந்தைகளிடம் மரியாதையை கேட்டுத்தான் இன்று பல பெற்றோர்கள் பெறும் நிலையில் இருக்கிறார்கள்.

அந்தக் குழந்தையின் மனதில் ஏதோ ஒரு விதத்தில் தங்களது மரியாதை குறைந்து போயிருக்கிறது என்று தான் இதற்கு அர்த்தமாக எடுத்துக் கொண்டு அதை அவர்கள் சரிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஏற்கனவே சொன்னது போல நாம் நமது பிள்ளைகளுக்குக் காட்டும் மரியாதை என்பது அவர்களுக்கு உண்மையாக இருப்பதுதான். அதுவே அவர்கள் நல்லவர்களாக உருவாவதற்கும், நல்லவர்களாக இருப்பதற்கும் நாம் எடுக்கும் முதல் ஸ்டெப்!

## தோல் பளபளக்க...

**மனிதர்களுக்கு** தோல் பளபளப்பு உபயத்தை அளிப்பது செல்கள்தான். வறட்சியான செல்கள்தான் தோலின் சொரசொரப்புக்கும், பளபளப்பின்மைக்கும் காரணமாக இருக்கின்றது.

வெண்மையாக்கும் சிகிச்சைக்கு அடுத்தபடியாக, இளம் பெண்களின் மனங்கவர்ந்த சிகிச்சை என்னும் அந்தஸ்தைப் பெற்றிருப்பது ஸ்கின் - பாலிஷ் சிகிச்சை தான். இரண்டு வருடங்களுக்கு முன்பே இந்தச் சிகிச்சை அறிமுகமாயிருந்தாலும், இப்போதுதான் இளம் பெண்களிடையே உச்சக் கட்ட கவனத்தைப் பெற்றிருக்கிறது.

இந்தச் சிகிச்சை புகழ்பெற்ற மருத்துவமனைகளிலும் சில குறிப்பிட்ட அழகு நிலையங்களிலும் செய்யப்படுகிறது. வயது அதிகமாக அதிகமாக சருமத்தில் சுருக்கம், பொலிவிழப்பு ஏற்படுகிறது. ஸ்கின் - பாலிஷ் செய்வதன் மூலம் சருமத்



திற்குப் பொலிவும், புத்துணர்வும் கிடைக்கும். பருவினால் ஏற்படும் தழும்புகள் மறையவும் இந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது. மேலும் தீ விபத்தினால் சருமம் பாதிக்கப்பட்டவர்கள், விபத்துகளில் சிக்கி மேல் தோல் பாதிப்படைந்திருப்பவர்கள் சிகிச்சை செய்வதற்கும் இந்த முறை பயன்படுகிறது.

பொதுவாக இறந்த செல்களை நீக்கிப் புதிய செல்களின் வழியாக புத்துணர்ச்சியான சருமம் உண்டாவதற்கு வழி வகுப்பதுதான் இந்த சிகிச்சையின் அடிப்படை. இதற்காக மருத்துவமனைகளில் டெர்மடிரேஷன் செய்கிறார்கள். அங்கு 70 சதம் க்ளைகாலிக் அமிலம் (கரும்பிலிருந்து எடுக்கப்படுகிறது) உபயோகப்படுத்துகிறார்கள். சிகிச்சையை மூன்று நிமிடங்களில் முடித்து அனுப்பி விடுகிறார்கள். ஆனால் சில அழகு நிலையத்தில் 10 முதல் 40 சதவீதம் வரை மட்டுமே க்ளைகாலிக் அமிலம் உபயோகப்படுத்துகிறார்கள். சிகிச்சையின் பின்னும், அவரவர் சருமத்திற்கேற்பப் பிரத்தியேகக் கவனம் எடுக்க வேண்டும்.

ஸ்கின் பாலிஸ் முறை அறிமுகமாவதற்கு முன் பொடி செய்யப்பட்ட சர்க்கரையைச் சருமத்தில் தேய்த்து, இறந்த செல்களை நீக்குவோம். அல்லது சோப், க்ரீம் இவற்றில் ஏதாவது ஒன்றை உபயோகப்படுத்தி அதன் மேல் உப்புத் தூளைத் தேய்ப்போம். ஏனென்றால் உப்பை நேரிடையாக சருமத்தில் தடவக்கூடாது. இந்த முறைகளால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படுவதில்லை.

ஸ்கின் பாலிஷ் முறை சமீபத்தில் நவீனமாக்கப்பட்டிருப்பதால் சிகிச்சை எடுத்துக் கொள்வதும் சுலபம். பலனும் அதிகம். இந்தச் சிகிச்சையை வளர் இளம் பருவத்தில் இருக்கும் பெண்கள் செய்யக் கூடாது. பருவ வயதான பெண்கள் மட்டுமே செய்துகொள்ள வேண்டும். அவர்களும் தகுதியான அழகுக் கலைஞரின் ஆலோசனைப்படி மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ செய்யலாம்.

இந்தச் சிகிச்சையைப் ப்ரஷிங் முறையிலும் சிலிகான் கற்கள் கொண்ட உபகரணங்களை வைத்தும் செய்யப்படுகிறது. சருமத்தின் தன்மைக்கு ஏற்ப உபகரணங்களைப் பயன்படுத்துவார்கள். க்ளைகாலிக் அமிலத்தைக் கொண்டு மூன்று நிமிடம் மட்டுமே சிகிச்சை அளிப்பார்கள். நேரம் அதிகமானால் சருமத்தில் எரிச்சல் தோன்றும். இந்தச் சிகிச்சைக்குப் பின் ஒரு வாரம் வரை சருமத்தில் சூரிய வெளிச்சம் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடனடியாக தண்ணீரில் நீந்தக் கூடாது. .·.பேசியலும் செய்து கொள்ளக்கூடாது. கடினமான சோப், படவுடர்களை உபயோகிக்கக் கூடாது. பரு இருப்பவர்கள் இந்தச் சிகிச்சையைத் தவிர்ப்பது நல்லது. மணப்பெண்கள் தகுந்த ஆலோசனையின் பேரில் இருமுறை சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

இறந்த செல்கள் அதிகமாக சருமத்தில் உருவாவதற்குக் காரணம் அதிகப்படியான தூசியே. படுக்கை, தலையணை, உறைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதிலுள்ள பாக்டீரியாவினாலேயே தொற்று உருவாகி பொடுகு, பரு இவை உருவாகின்றன.

தரமான பொருட்களைச் சருமத்திற்கு உபயோகிப்பதன் மூலம் அவ்வப்போது உருவாகும் இறந்த செல்களைப் போக்கலாம். பப்பாளியில் என்சைம் இருப்பதால் அந்தப் பழத்தின் கூழைச் சருமத்தில் தடவினால், பளபளப்பும், நிறமும் அதிகரிக்கும். ஆனால் அலர்ஜி உள்ளவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது.

அகத்தின் அழகு முகத்தில் மட்டுமல்ல மேனியிலும் தெரிவதற்கு உதவும் ஸ்கின் பாலிஷ் இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த வரப்பிரசாதம்தான்.

## தக்காளியின் மகிமை!

**தக்காளிப்** பழத்தால் எப்பேர்ப்பட்ட பெண்ணின் முகத்தையும் தக...தகக்க வைத்து விடலாம். தக்காளியானது முகச்சுருக்கத்தை விரட்டி இளமையானவராக மாற்றி விடும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் டீஸ்பூன் ரவையைக் கலந்து கொள்ளுங்கள்.

இதை நன்றாக முகத்தில் தேய்த்து கழுவுங்கள். தொடர்ந்து இதைச் செய்து வந்தால் முகம் சூரியனாகப் பிரகாசிக்கும். சில பெண்களுக்கு முகத்தில் மென்மைத்தன்மை குறைந்து முரட்டுத்தனமாகத் தெரியும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியை எடுத்து கூழாக்கிக் கொள்ளுங்கள். இதனுடன் அரை டீஸ்பூன் தயிரைக் கலந்து கொள்ளுங்கள்.

இதை முகத்துக்குப்பூசி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். முகம் மிருதுவாகி தங்கம் போல தக தகவென ஜொலிக்கும்.

சிலப் பெண்கள் கண்ணுக்கு கீழ் கருவளையம் தோன்றி எதையோ பறிகொடுத்தது போல் வலம் வருவார்கள். இவர்களை அழகு தேவதைகளாக மாற்றுவதில் தக்காளிக்கு நிகர் தக்காளிதான்.

ஒரு வெள்ளரித்துண்டு, அரை தக்காளி இரண்டையும் அரைத்துக் கொள்ளுங்கள்.


இமைகளில் மேல் இந்த கலவையைப் பூசி, 2 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஓரிரு வாரங்கள் இதைச் செய்து வந்தாலே கருவளையம் காணாமல் போவதுடன் கண்களும் பளிச்சென்று இருக்கும்.

பெரும்பாலான பெண்கள் முகத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்புக்கயிறு கட்டியது போல் கருவளையம் தோன்றி விடும்.

இதனைத் தக்காளி பேஸ்ட்டால் விரட்டித் விடலாம்.

தக்காளி சாறு - அரை டீஸ்பூன், தேன் அரை டீஸ்பூன், சமையல் சோடா - ஒரு சிட்டிகை. இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள்.

இந்த பேஸ்ட்டைக் கருவளையத்தின் மேல் பூசி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். வாரம் 3 முறை இப்படிச் செய்து வந்தால் கருவளையமா அது எங்கே என்பார்கள்.



கண்ணாடியைப் பார்க்கவே பிடிக்காமல், கரும்புள்ளியும் கருந்திட்டுகளும் உங்கள் முகத்தை ஆக்கிரமித்துக் கொண்டனவா? ரிலாக்ஸ் பிளீஸ்...உங்கள் முகத்தைக் கண்ணாடி போல் மாற்றிக் காட்டுகிறது இந்த தக்காளி பேஸ்ட்!

உருளைக்கிழங்கு துருவல் சாறு - ஒரு டீஸ்பூன், தக்காளி விழுது - அரை டீஸ்பூன், இரண்டையும் கலந்து கொள்ளுங்கள்.

இந்தப் பேஸ்ட்டை கழுத்திலும் முகத்திலும் தடவி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். தொடர்ந்து அதைச்செய்து வந்தால், சில வாரங்களிலேயே வித்தியாசத்தை உணர முடியும்.

கன்னங்கள் ஒட்டிப்போய் அழகற்றதாகக் காணப்படுகிறதா? முகத்தை புஸ் புஸ் என மாற்றிட இந்த தக்காளி கூழை பயன்படுத்துங்கள்.

தோல் மற்றும் விதை நீக்கிய ஒரு தக்காளியை கூழாக்குங்கள். ஒரு டீஸ்பூன் ஆலிவ் எண்ணெயை எடுங்கள்.

முதலில் முகத்தில் ஆலிவ் எண்ணெயை தடவுங்கள். அதன் மேல் இந்தத் தக்காளி கூழைப் பூசி, 10 நிமிடம் கழித்து கழுவுங்கள்.

வாரம் ஒருமுறை இப்படிச் செய்து வர தக்காளி போன்ற கன்னங்கள் கிடைக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

### புதினா சிக்கன்

**தேவையான பொருட்கள் :-**

சிக்கன் - அரை கிலோ
புதினா - ஒரு கட்டு
பச்சை மிளகாய் - 4
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - அரை தேக்கரண்டி
கரம் மசாலா - ஒரு தேக்கரண்டி
சீரகம் - ஒரு தேக்கரண்டி
தயிர் - அரை கப்
எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை :-**

ஒரு தேக்கரண்டி எண்ணெயில் புதினா, பச்சை மிளகாயை வதக்கி அரைத்துக் கொள்ளுங்கள். அரைத்த விழுதை தயிரில் போட்டு அரை மணி நேரம் ஊற வையுங்கள்.

குக்கரில் எண்ணெய்விட்டு காய்ந்ததும், சீரகம் போட்டு தாளித்து சிக்கனைப் போடுங்கள். அடுத்து இதில் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், கரம் மசாலா, உப்பு சேர்த்து கிளறுங்கள். ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கும் புதினா கலவையை சேர்த்து தயிரை இதில் கொட்டி கலந்து குக்கரை மூடி விசில் போடுங்கள். இரண்டு விசில் வரும் வரை வேக வைத்து பரிமாறுங்கள்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

66

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே-அ- அட்டை இல : ..............................
கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -66**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

03.04.2007

**பரிசுப் போட்டி இல - 64**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

M.H.றிஷ்கா
இல.02, டிவுலான, கலிங்க எல, பொலநறுவ.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.





**அகராதியின்** உதவி கொண்டு ஒரு காகிதத்தில், ஊசி, கறுப்பு, சிவப்பு இந்தியன் இங்க், தையல் பஞ்சு முதலியவை வாங்கி வரும்படி குறித்துக் கொடுத்தேன். தனக்குப் பச்சை குத்தும்படி தலைவன் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்ததால், இவற்றை வாங்கி வரச் சொன்னேன்.

இந்தச் சிவப்பிந்தியப் பிரயாணி சின்ன ஆள்; கெட்டிக்காரன். அவன் உடம்பில் பயங்கரமாய் ஒரு காயம். இரு விலாவில் ஆரம்பித்து, மார்பின் குறுக்காகச் சென்று வலது தோளில் முடிவடைந்திருந்தது. அந்தக் காயத்துக்கு மருந்து போடும்போது சுருண்டதாகத் தழும்பு ஏற்பட்டு விட்டது. விரல் அளவுக்குத் தடித்த தழும்பு.

சுருட்டுப் பெட்டியில் முத்துக்களை வைத்துக் கொள்வான் அவன். பெட்டிக்குள் பல அறைகள் உண்டு. முத்தின் அளவுக்குத் தக்கபடி அந்தந்த அறைகளில் வைப்பான்.

அன்று அவன் புறப்பட்டபோது, நானும் சிறிது தூரம் செல்லலாம் என்று தலைவன் அனுமதி கொடுத்தான். நான் அப்படியே போய்விடாமல் திரும்பி வர வேண்டுமென்பதற்காக, அவனுக்கே உரிய அப்பாவித்தனத்துடன் ஒரு தந்திரமும் செய்தான். ஆறு தோட்டாக்களும் என்னிடம் தந்து அனுப்பினான். எனக்குச் சொந்தமில்லாத பொருளை எடுத்துக்கொண்டு போகமாட்டேன் என்று அவனுக்கு



நிச்சயமாய்த் தெரியுமாதலால், கட்டாயம் திரும்பித்தான் வருவேன் என்பது அவன் எண்ணம்!

கழுதைகளின் மீது பாரம் எதுவும் இல்லையாகையால் ஒன்றில் நானும், மற்றொன்றில் அவனும் ஏறிக் கொண்டோம். நான் வரும்போது வந்த அதே பாதையில் அன்று முழுதும் பயணம் செய்தோம். எல்லைக் காவல் நிலையத்துக்கு இரண்டொரு மைல் இருந்தபோது, உடலுக்கு நேர் எதிராகத் திரும்பி உள் நாட்டுக்குள் அவன் செல்லலானான்.

ஐந்து மணி இருக்கும். ஓர் ஓடைக் கரையை அடைந்தோம். ஐந்து சிவப்பிந்தியர்களின் வீடுகள் அங்கே இருந்தன. அவர்கள் அத்தனை பேரும் என்னைப் பார்ப்பதற்காக வெளியே வந்தார்கள். அவர்கள் பேசினார்களோ பேசினார்களோ அப்படிப் பேசினார்கள். ஓய்வு ஒழிவில்லாமல், கடைசியில் ஓர் ஆள் வந்தான். கண்கள், தலைமயிர், உடம்பு அமைப்பு எல்லாவற்றிலும் சிவப்பிந்தியனாகத்தான் இருந்தான் அவன். ஆனால் நிறம்தான் வேறு வெளுப்பு நிறம். கண்கள் சிவப்பாயிருந்தன. காக்கி டிரௌசர் அணிந்திருந்தான். இந்த இடத்தைத் தாண்டிச் சிவப்பிந்தியன் போனது கிடையாது என்று புரிந்து கொண்டேன். அந்த வெள்ளை ஆள் என்னைப் பார்த்து, "வணக்கம். அண்டோனியோவுடன் சிறையிலிருந்து தப்பியோடிய ஆள் நீதானா? அண்டோனியோ என் இரத்தச் சகோதரன்" என்றான். (இரத்தச் சகோதரர்கள் என்பது என்னவெனில்: இருவர், தங்கள் கைகளை ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டிக் கொள்வார்கள். கத்தியெடுத்து கையைக் கிழிப்பார்கள். பெருகி வரும் இரத்தத்தை மற்றவன் கையில் பூசுவார்கள். மற்றவனின் இரத்தக்கறை படிந்த கையை நக்குவார்கள்.) "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"ஊசிகள், கறுப்பு - சிவப்பு இந்தியன் இங்க். வேறெதுவும் வேண்டாம்."

"இன்னும் பதினைந்து தினங்களில் அவை உனக்குக் கிடைக்கும்" என்றான்.

என்னைக் காட்டிலும் அவன் நன்றாக ஸ்பானிஷ் மொழி பேசினான். நாகரிகமடைந்த மக்களுடன் தொடர்பு கொள்வது எப்படி - பண்டமாற்று வர்த்தகம் நடத்துவது எப்படி - அதே சமயம் தன் மக்களின் நலன்களை மிக எச்சரிக்கையுடன் பாதுகாப்பது எப்படி - என்றெல்லாம் அவன் நன்கு தெரிந்து வைத்திருக்கிறானென்று எனக்குத் தோன்றியது.

நான் புறப்பட்ட சமயத்தில் கொலம்பியா நாட்டு வெள்ளி நாணயங்களைக் கொண்டு செய்த ஒரு காசு மாலையை என்னிடம் கொடுத்தான். அதை லாலியிடம் தரும்படி சொன்னான்.

"மறுபடி வந்து என்னைப் பார்" என்றவன், நான் வருவேனென்று உறுதிப்படுத்துவதற்காக ஒரு வில் கொடுத்தான் எனக்கு.

கிராமத்தை நோக்கித் திரும்பினேன் - தனியாகத்தான். பாதி வழி வந்திருக்க மாட்டேன், எதிரே லாலி வந்து கொண்டிருப்பதைக் கண்டேன் - தன் தங்கை ஒருத்தியுடன். லாலிக்கு 16 அல்லது 18 வயதிருக்கும். அவள் தங்கைக்கு 14, 15 வயதிருக்கும்.

லாலி சீற்றத்தோடு என் மீது பாய்ந்தாள். வெறி பிடித்த மாதிரி பிராண்டினாள். ஆனால் நான் முகத்தை மூடிக் கொண்டதால் மார்பில் மட்டும்தான் பிராண்ட முடிந்தது. என் கழுத்தில் காட்டுத்தனமாகக் கடித்தாள். என் பலம் முழுவதையும் உபயோகித்தும்கூட அவளை விலக்கித்தள்ள முடியவில்லை. திடீரென்று அவள் அமைதியடைந்தாள். அவள் தங்கையைக் கழுதை மீது உட்கார்த்தி வைத்தேன். லாலியை இடையைச் சுற்றி அணைத்தபடி பின்னால் நடந்தேன். லாலிக்கு என்ன கோபம்? புரியவில்லை.

வழியில் ஓர் ஆந்தையைச் சுட்டேன். இருட்டில் அதன் விழிகள் பளபளப்பதை வைத்துச் சுட்டேனே தவிர, அது இன்னதென்று கூடத் தெரியாது. அதை எடுத்துச் செல்ல வேண்டுமென்று லாலி வற்புறுத்தி, கழுதையின் சேணத்தோடு கட்டினாள். விடிகாலை நேரத்துக்கு வீட்டை அடைந்தோம். எனக்கு ஒரே களைப்பு. குளிக்க வேண்டும் போலிருந்தது. லாலி என்னைக் குளிப்பாட்டினாள். பிறகு என் கண்ணெதிரிலேயே - தன் தங்கை கட்டியிருந்த கையகலத் துணியையும் பறித்து எறிந்துவிட்டு அவளையும் குளிப்பாட்டினாள். தானும் குளித்தாள்.

அவர்கள் உள்ளே வந்தபோது, நான் எலுமிச்ச பழ ரசமும், சர்க்கரையும் கலந்த பானம் தயாரித்துக் கொள்வதற்காக வெந்நீர் வைத்துவிட்டுக் காத்திருந்தேன். அப்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. வெகுநாள் கழித்துதான் அதன் அர்த்தம் புரிந்தது எனக்கு. லாலி தன் தங்கையை என் கால் மீது தள்ளி, அவள் இடையைச் சுற்றி என் கையை எடுத்து வைத்தாள். அவள் தங்கையின் இடுப்பில் சிறு துணிகூட இல்லை. நான் லாலிக்குக் கொடுத்த காசுமாலையை அவள் அணிந்திருந்தாள்.

அந்தத் தர்மசங்கடமான நிலையிலிருந்து எப்படித் தப்புவது என்று எனக்குத் தெரியவில்லை.

மெல்ல அவள் தங்கையை என் காலிலிருந்து எழுப்பி தூளியிலே கொண்டு போய்ப் படுக்கவைத்தேன். காசு மாலையை அவளிடமிருந்து கழற்றி லாலியின் கழுத்தில் போட்டேன். லாலி தன் தங்கையின் அருகில் படுத்தாள். நான் லாலியின் பக்கத்தில் படுத்தேன்.

வெகு நாள் கழித்துத்தான் எனக்கு விஷயம் புரிந்தது. தன்னிடம் நான் மகிழ்ச்சியாக இல்லை என்று லாலி எண்ணியிருந்தாள். எப்படித் தப்பிச் செல்லலாம் என்று நான் வழிபார்த்துக் கொண்டிருப்பதாக நினைத்து விட்டாள். ஒருவேளை தன் தங்கையாவது என்னைப் பிடித்து வைத்துக் கொள்ளட்டும் என்பது அவள் திட்டம்.

நான் விழித்துக் கொண்டபோது லாலியின் கைகள் என் கண்களின் மீது இருந்தன. அவள் தங்கையை அருகிலே காணோம். வெகுநேரம் தூங்கி விட்டேன். பதினொரு மணி, லாலி தனது பெரிய பழுப்பு நிறக் கண்களால் என்னை ஆசையுடன் பார்த்தாள். என் வாயின் ஓரங்களை மெல்லக் கடித்தாள்.

அவள் சொல்ல நினைப்பது எனக்குப் புரிந்தது. 'நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள். என்னால் உங்களைப் பிடித்து வைத்துக் கொள்ள முடியவில்லை என்பதற்காக நீங்கள் எங்கேயும் ஓடப் போவதில்லை. அது எனக்குத் தெரிகிறது. நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன்.'

லாலியின் சிறிய படகை வழக்கமாகச் செலுத்துகின்ற சிவப்பிந்தியன் வீட்டுக்கு எதிரே உட்கார்ந்திருந்தான். அவளுக்காக அவன் காத்திருக்கிறான் என்று தெரிந்தது. என்னைப் பார்த்துப் புன்னகை செய்து, கண்களை மூடிச் சாடை காட்டினான். லாலி தூங்குகிறாள்

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

என்பது அவனுக்குத் தெரியும் என்று அர்த்தம்.

அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். அவன் பல விஷயங்களைப் பேசினான். எனக்கு அதெல்லாம் புரியவில்லை. அவன் வாலிபன். விளையாட்டு வீரனைப் போலக் கட்டுமஸ்தான உடம்பு. நான் குத்திக் கொண்டிருந்த பச்சைகளை வெகுநேரம் பார்த்தான் ஆராய்ந்தான்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இப்படியாக** பெண்கள் இரண்டாம் தரமான வர்க்கமென கணிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

ஞான இலக்கியம் -:

கி.மு 5-1 நூற்றாண்டு வரையுள்ள அமைதிக்காலங்களில் ஞான இலக்கியங்கள் தோன்றின. அவற்றில் பெண்களைப் பற்றி பழமொழி ஆகமத்தில் உள்ளது. ப.ஆ.7:6-27 இல் வேசி ஆண்களை அழைத்து அவளின் இச்சையை தீர்த்துக் கொள்வதையும் தனது கணவனுக்கு எவ்விதம் துரோகம் செய்கிறாளெனவும் காணலாம். ப.ஆ 31:10:31 இல் குடும்ப வாழ்க்கையை திறன்பட ஒரு மனைவி நடத்தும் முறையை குறிப்பிடும் அதேவேளையில் ஒரு கணவன் தனது குடும்பத்திற்கு எவ்விதம் நடக்கவேண்டுமென கூறவில்லை. இதிலிருந்து பெண் மட்டுமே நல்லவளாக இருந்தால் போதும் என்ற தோரணையைக் காணலாம்.



சீராக் ஆகமத்தில் 9:1-13 ஆம் வசனங்களில் பெண்களின் கேடான சுபாவங்கள் காட்டப்படுகின்றது.25:17-36 வரையுள்ள வசனங்களில் பெண்ணின் தீயகுணம் பற்றி விபரிக்கப்படுகின்றது. அதில் குடும்பத்திற்கும் கணவனுக்கும் உண்டாகும் கெடுதிகளென பெண்களின் தீயகுணத்தைக் குறிப்பிடும் அதேவேளையில் ஆண்களின் தீயகுணத்தினால் குடும்பத்தில் வரும் விபரீதங்கள் பற்றி கூறவில்லை. பெண்களை எவ்விதம் பாதிக்கிறது என்பதனை கூற மறுத்துவிட்டது.

மேற்குறிப்பிட்ட சந்தர்பங்கள் ஒவ்வொன்றிலுமே முந்திய ஏற்பாடானது, ஆண் வர்க்கத்தை சார்ந்துள்ளதாயும், பெண்களுக்கு பாதகமாகவே ஒரு பக்க சார்புள்ளதாயும் எழுதப்பட்டதைக் காணக்கூடியதாயிருந்தது. அத்துடன் திருமுறை எழுந்த சமுதாயமானது பெண்களின் அடக்கு ஒடுக்கு முறை நிறைந்துள்ளதையும், பெண்களை இரண்டாம் தரமாக மதிப்பதையும் படம் பிடித்து காட்டுகிறது.மேலும், "கடவுளே நீர் என்னை நாயாகவோ அல்லது பெண்ணாகவோ படைக்காத்ததினால் உமக்கு நன்றி" என்று கூறும் யூதஜெபம் உள்ளது. இதன் மூலமாக பெண்களை எவ்வளவாக இழிவாக, யூதசமுதாயம் மதித்துள்ளதென நிருபணமாகிறது.

பிந்திய ஏற்பாடு :-

திருமுறையின் இரண்டாம் பாகம் பிந்திய ஏற்பாடு அல்லது புதிய ஏற்பாடு என அழைக்கப்படுகிறது. இதில் 4 பெரும் பிரிவுகள் உண்டு. அவையாவன-:

(அ) நற்செய்தி நூல்
(ஆ) திருத்தூதுவர் ஆகமம்
(இ) கடிதங்கள்
(ஈ) யோவானின் தரிசன நூல் (அருளப்பரின் தரிசன நூல் )

இவையனைத்தும் முந்திய ஏற்பாட்டில் கூறப்பட்ட பெண் ஒடுக்குதல் சமுதாயத்தில் கி.பி 1ம் 2ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டவை களாகும். காலக்கிரமப்படி இந்நூல்களை ஆராய்ந்தால் மேற்குறிபிட்ட ஒழுங்கில் காணப்படாது.

(அ) கடிதங்கள் -: ( கி.பி.47-63 )

தூய பவுல் அடிகளாரின் பதின்மூன்று கடிதங்களும், மற்றும் ஏழு கடிதங்களும் வேறுபட்ட அப்போஸ்தலர்களினால் எழுதப்பட்டுள்ளன. வேறுபட்ட சூழல்களிருந்து வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய எழுதப்பட்டவைகளாகும்.

தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதின கடிதத்தில் ( கொரி 11:1-16 ) பெண்ணுக்கு ஆண் தலைவன் என கூறுகிறார். இதற்கு காரணம் என்னவென இப்படி விவரிக்கிறார். வசனம் 7ல் கடவுளின் சாலையும், கடவுளின் மாட்சிமையையும் பிரதிபலிப்பவனாக ஆண் இருப்பதாலும், வ-8 இல் ஆணிலிருதே பெண் உருவானவ ளென்றபடியாலும், வ - 9 இல் ஆணுக்கு துணையாகவே பெண் உருவாக்கப் பட்டுள்ளபடியாலும், ஆண்கள் விதிக்கிற, பெண் ஒடுக்க ஒழுங்க நெறிகளைக் கைக்கொண்டு, பெண்கள் ஆண்களை தலைவனாகக் கொள்ளவேண்டும் என்கிறார். இதற்கேற்ப மீண்டும் I தீமோத்தேயு 2: 9 – 15 இல் ,ஆதாம் முதலில் உருவாக்கப்பட்டதுடன் வஞ்சிக்கப்படாத படியாலும், பெண்களே அடங்கி அடங்கி நடக்கவேண்டுமெனவும், கணவன் மீது அதிகாரம் செலுத்த வேண்டாமெனவும் கூறுகிறார்.

தூய பேதுரு எழுதிய முதலாம் கடிதத்தில் 3:1-7 இல் சாராளின் பிள்ளைகளாக பெண்கள் மாற வேண்டுமென்றால் கணவனை ஆண்டவன் (ஆள்பவன்-பெண்களை ஆள்பவன் ) என்று அழைத்து கணவனுக்கு கீழ்படியவேண்டும்) என குறிப்பிடுகிறார். இங்கு பெண்ணுக்கு அதே சம உரிமையோ ஆள்பவளாகவோ கூறவில்லை. மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளை அவதானிக்கும் போது, இயேசுவின் மூலம் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை கற்றறிந்தவர்களும் ஆண் ஆதிக்க சமுதாயப் போக்கிலே விடுதலை பெறவில்லை போன்றே எழுதியுள்ளதைக் காணலாம் .

(ஆ) திருத்தூதுவர் ஆகமம் -: ( கி.பி.65-80 )

தூய லூக்கா தனது இரண்டாம் நூலான திருத்தூதுவர் ஆகமத்தில், பல பெண்களை குறிப்பிடுகிறார். கிறிஸ்து விட்டு சென்ற திருப்பணியைப் பற்றியதாகவே இவரது கண்ணோட்டம் இருந்தபடியால் அதை மட்டும் தூய லூக்கா குறிப்பிடுகிறார்.

(இ) நற்செய்தி நூல்கள் :- ( கி.பி.60 - 100 )

நற்செய்தி நூல்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

**ஸ்ரீ முகன்**

அவையாவன:

1. சமநோக்கு நற்செய்தி நூல்கள்
2. தூய யோவானின் நற்செய்தி நூல்கள்

( I) சமநோக்கு நற்செய்தி நூல்கள்

இவை கிறிஸ்துவின் திருப்பணியை மையமாகக் கொண்டதாகவே எழுதப்பட்டுள்ளது. இதில் மத்தேயு மாற்கு லுக்கா எழுதின நற்செய்தி நூல் அடங்கும். இவற்றில் பெண் ஒடுக்கு முறை சமுதாயமும் அதில் கிறிஸ்துவின் பங்கையுமே பிரதி பலிக்கிறது.

(II) தூய யோவானின் நற்செய்தி நூல்

மோசேயின் சட்டநூல் படி ( உபா 22:23- 24) விபசாரகாரர் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும். இப்படியான ஒரு சம்பவம் யோவான் ந.செ.நூ 8: 1 - 11 இல் காணலாம்.

*(துளிர்க்கும்)*

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**அங்கு** அவர்கள் வைத்ததுதான் சட்டம். ஆகையால் அவர்களை "மூவி மொகல்" (Movie Magul) என்று அழைத்தார்கள்! (அதாவது நம் நாட்டு மொகலாய சக்கரவர்த்திகளைப் போல).

சாப்ளின் பாலினுடன் சுற்றத் தொடங்கினார். அவளுடைய அழகிற்கு அழகு சேர்க்க பல வழிகளைச் சொல்லிக் கொடுத்தார். முக்கியமாக அவளுடைய பெயரையும் மாற்றினார். அவளுடைய புதுப்பெயர் 'பாலெட் காடெர்ட்' (Palette Goddard). அவருடன் காதல் நாளொரு மேனியும், பொழுது ஒரு வண்ணமுமாக மலரத் தொடங்கியது. தன் மனதில் உதித்துக் கொண்டிருந்த அடுத்த படத்தில் அவள் தான் கதாநாயகி என்று முடிவெடுத்து விட்டார்.

சாப்ளின் ஜெர்மனியில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது விஞ்ஞான மேதை, உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவர் என்று கருதப்படும் 'ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்' (Albert Enstein) என்பவரின் நட்பு கிடைத்தது. இவர் ஒரு கணித சாஸ்திரப் புலி. இவருடைய 'ஐன்ஸ்டைன் தியரி' என்பது இயற்கையின் பல இரகசியங்களுக்கு விளக்கம் கொடுத்தது. அவருடன் நடக்கச் செல்வது, விருந்து உண்ணுவது போன்ற சமயங்களில் ஐன்ஸ்டைன் மனிதனைப் பற்றியும்,



இயந்திரங்களைப் பற்றியும் பல அருமையான விஷயங்களை சார்லிக்கு விளக்கினார்.

(1930 களின் ஆரம்ப காலத்தில் உலகம் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவித்துக் கொண்டிருந்தது. 1929இல் நியூயோர்க் நகரத்தின் பங்கு மார்க்கெட் தரைமட்டமாகச் சரிந்தது. அதன் விளைவாக பல வங்கிகள் மூடப்பட்டன.... தொழிற்சாலைகள் கதவுகளை இழுத்து மூடின... பல பணக்காரர்கள் அடுக்கு மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்கள். பலர் அமெரிக்க நகரங்களில், நியூயோர்க்கின் தெருக்களில் பென்சில்களும், ஆப்பிள்களும் விற்றார்கள் பணம் சம்பாதிப்பதற்காக. இதன் தாக்கம் இந்தியாவிலும் இருந்தது. அந்தக் கடினமான கால கட்டத்திற்கு கிரேட் டிப்ரெஷன் The Great Depression" என்று பெயர்).

**சார்லி, ஐன்ஸ்டைன், காந்திஜி**

அந்தக் கால கட்டத்தில்தான் சாப்ளின் ஐன்ஸ்டைனை சந்தித்தார். இயந்திரங்கள் (Machines) கண்டுபிடிக்கப்பட்டதினால்தான் மனிதனுக்கு வேலை வாய்ப்புப் போய்விட்டனவா? அப்படி ஒரு நிலைமை வரக்கூடும் என்றால் மனிதன் ஏன் இயந்திரக்களைக் கண்டு பிடித்தான்? இயந்திரங்களில் புதுப் புது கண்டுபிடிப்புகள் வளர, வளர மனிதனுக்கு வேலை வாய்ப்பு முழுமையாகவே போய் விடுமோ? இந்தப் பிரச்சினைகளை அந்த விஞ்ஞான மேதையும், இந்தத் திரையுலக மேதையும் காரசாரமாக விவாதித்தார்கள். விளைவு சாப்ளினின் மனதில் அடுத்த படத்திற்கு கரு வேரூன்றி விட்டது.

அதன் அடிப்படைக் கருத்து மனிதனும், இயந்திரமும்!

ஜெர்மனியிலிருந்து சாப்ளின் லண்டனுக்குச் சென்றார். அங்கு அவர் சந்தித்த மற்றொரு சரித்திரம் படைத்த மனிதர் 'மகாத்மா காந்திஜி'. காந்திஜியைப் பற்றி நிறையவே படித்திருந்தார். அவருடைய இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தைப் பற்றியெல்லாம் தெரிந்திருந்தார். உலகத்தில் பல நாடுகளில் அறிவாளிகள், பெரும் தலைவர்கள், வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையில் முன்னேறியதற்கு முக்கிய காரணம் அவர்கள் மனதில் ஒரே கொள்கை என்பதுதான். அந்த வகையில் காந்திஜியின் கொள்கையுடன் அவர்கள் வேறுபட்டிருந்தாலும், தன்னுடைய கொள்கைக்காக வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் தியாகம் செய்தவர் என்பது அவர்களை, மகாத்மாவை ஒரு மாபெரும் மனிதனாகப் போற்ற வைத்தது. அந்த வகையில் சாப்ளினுக்கு காந்திஜியிடம் கௌரவம், மரியாதை, அன்பு எல்லாமே இருந்தன.



சாப்ளின் காந்திஜியைச் சந்தித்த பொழுது அவருடன் என்ன பேசுவது என்பது புரியாமல் தவித்தார்! காந்திஜி சாப்ளினின் படங்களைப் பார்த்ததே இல்லை. இப்படியும் ஒரு மனிதரா என்று சாப்ளின் ஆச்சரியப்பட்டார்! உலகத் தலைவர்கள் என்று அந்நாளில் போற்றப்பட்டவர்கள் ஸ்டாலின், சர்ச்சில், ஹிட்லர்... போன்றவர்கள். அவர்கள் எல்லோருமே சாப்ளினின் விசிறிகள். அவர்கள் சாப்ளினின் படங்களை வாங்கி மனப் பதற்றம் அதிகரிக்கும் நேரங்களில் அவைகளை வீட்டிலேயே திரையிட்டுச் சிரித்து மகிழ்வார்கள்.


காந்திஜியிடம் சாப்ளின் பேசியபொழுது அந்த மகானும், சாப்ளினும் இயந்திரங்களின் ஆதிக்கத்தில் மனிதன் சிக்கித் தவிப்பதைப் பற்றி அலசினார்கள். காந்திஜிக்கு இயந்திரங்கள் என்றாலே பிடிக்காது. ஹாலிவுட் திரும்பியதும் தான் சந்தித்த இரு மேதைகளின் கொள்கைகளைத் தன் மனதிலே அலசினார். இயந்திரங்களுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் சிரிப்பிற்கு இடமுண்டு என்பதை அவரால் உடனே அறிய முடிந்தது.

*(தொடரும்)*

---

## கைகள் அளவுக்கு மிஞ்சி வம்பு பேசினால்...

**செல்போன்களில்** செய்திகளை (எஸ்.எம்.எஸ்.) அளவுக்கு மீறி அனுப்பினால், அது உடல் நலனைப் பாதிக்கும் என்று இத்தாலி நாட்டு டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.




செல்போன்களைப் பயன்படுத்துபவர்கள் தங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எஸ்.எம்.எஸ்., (ஷார்ட் மெசேஜ் சர்வீஸ்) மூலம் செய்திகளை அனுப்புவர்.


இளைஞர்களிடம் எஸ்.எம்.எஸ்., அனுப்பும் பழக்கம் அதிகம் உண்டு. பரிமாறிக் கொள்ள செய்தியே இல்லாவிட்டாலும் கூட, பழமொழிகள், கடி ஜோக்குகளை, வாழ்த்துக்களை அனுப்பி இளைஞர்கள் சந்தோஷம் அடைவது வழக்கம்.

அளவுக்கு அதிகமாக எஸ்.எம்.எஸ்.களை அனுப்பினால் அது உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும். குறிப்பாக கை விரல்களைப் பாதிக்கும் என்று இத்தாலி நாட்டு டாக்டர்கள் எச்சரித்து உள்ளனர்.

செல்போனில் உள்ள எழுத்துக்களை தொடர்ந்து அழுத்திக் கொண்டே இருந்தால், தசை நார்களில் வலி ஏற்படும் என்று அவர்கள் எச்சரித்து உள்ளனர். இத்தாலியில் இளைஞர்கள் மத்தியில் செல்போன் மோகம் அதிக அளவில் இருக்கிறது.

37 சதவீத சிறுவர்கள் செல்போன் பித்துப்பிடித்து, எப்போதும் செல்போனும் காதுமாக அலைகின்றனர்.

வடக்கு இத்தாலியில் உள்ள சவோனா நகரைச் சேர்ந்த 13 வயது சிறுமி நாள்தோறும் குறைந்தது 100 முறை எஸ்.எம்.எஸ்.களை அனுப்புவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தாள்.




இதனால் அவள் கைவிரல்களில் வீக்கம் ஏற்பட்டது. இதற்காக அவள் ஒரு முடநீக்கு இயல் நிபுணரிடம் சிகிச்சை பெற்று வருகிறார். மருந்து கொடுத்ததோடு கை விரல்களுக்கு ஓய்வு கொடுக்கும்படி டாக்டர்கள் கூறினர். இதைத் தொடர்ந்துதான் இத்தாலி நாட்டு டாக்டர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

---

## இதற்கும் விஞ்ஞான ஆராய்ச்சி...?

**இது** கொஞ்சம் கவர்சிகர விஷயம். பெண்களின் உள்ளாடை பற்றியது. படத்தில் காட்சியளிப்பவர் பிரேசில் நாட்டின் மாடல் அழகி கிஸ்லி பண்ட்சென். அண்மையில் இவர் டெமி பிரா என்னும் ரக பிராக்களை அறிமுகப்படுத்துவதற்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் சென்றார். அங்கே மாடல் அழகிகள் பலருடன் சேர்ந்து இந்த பிராக்களை அணிந்து மேடையில் பவனியும் வந்தார். இந்த புதிய மாடல் பிராவையும் அதை அணிந்து வந்த அழகிகளின் அணிவகுப்பையும் பார்ப்பதற்காக ஜொள்ளு ரசிகர்கள் ஏராளமாய் திரண்டு விட்டனர்.



சரி. அப்படியென்ன இந்த பிராவிற்குச் சிறப்பு என்கிறீர்களா?...

இதை உருவாக்குவதற்காக விஞ்ஞானிகள் தங்களின் மூளையைக் கசக்கி புதிய வழிமுறைகளைக் கூறியிருக்கிறார்கள். இது தவிர மாடல் அழகிகள், பேஷன் டிசைனர்களின் ஆலோசனையும் முழுமையாகப் பெறப்பட்டு இது வடிமைக்கப்பட்டுள்ளது. மார்பகத்திற்கு அழுத்தம் தெரியாமலிருக்க மூன்றடுக்கில் போம் வைத்து பிராக்கள் தைக்கப்பட்டுள்ளன.

மிகவும் எடை குறைவானது.

இந்த பிராக்களில் 75க்கும் மேலான ஒட்டு முறை கையாளப்பட்டிருக்கிறது என்பது விசேஷம்.

---



# பாடும் நிலாவின் சாதனைப் பயணம்

### ஸ்ரீதர் அறிமுகம்

**பாலுவை,** டைரக்டர் ஸ்ரீதரிடம் அறிமுகம் செய்து வைத்தார் பரணி. ஒரு பாட்டுப் பாடும்படி ஸ்ரீதர் கூற, பிரபலமான பாடல் ஒன்றைப் பாலு பாடினார்.

மறுநாள், தன்னுடைய சித்ராலயா அலுவலகத்துக்கு வந்து, இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனைச் சந்திக்கும்படி ஸ்ரீதர் கூறினார்.

அதன்படி பாலு அங்கே சென்றபோது, சுமார் 50 பேர் கொண்ட வாத்தியக் குழுவினருடன் இசையமைத்துக் கொண்டிருந்தார் எம்.எஸ்.விஸ்வநாதன்.

பாலு இதற்கு முன் சினிமாவுக்காக 10 தெலுங்குப் பாடல்களைப் பாடியிருந்த போதிலும், இவ்வளவு பெரிய வாத்தியக் கோஷ்டியைப் பார்த்தது இல்லை. அதனால் பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் ஒத்திகை முடிந்ததும், பாலுவை எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு ஸ்ரீதர் அறிமுகம் செய்து வைத்தார்.

எம்.எஸ்.விஸ்வநாதன் தனது ஆர்மோனியப் பெட்டி முன் அமர்ந்து, "எங்கே, ஒரு பாட்டுப் பாடுங்கள்!" என்றார். உடனே, ஒரு இந்திப் பாடலைப் பாடினார் பாலு.

"ஒரு தமிழ் பாட்டுப்பாட முடியுமா?" என்று எம்.எஸ்.விஸ்வநாதன் கேட்க, "தமிழ் பாட்டுப் புத்தகம் எதுவும் என்னிடம் இல்லையே" என்றார் பாலசுப்பிரமணியம். உடனே, "காதலிக்க நேரமில்லை" படத்தின் பாட்டுப் புத்தகத்தைக் கொண்டு வரச்சொல்லி, அதில் இடம் பெற்ற "நாளாம் நாளாம் திருநாளாம்" என்ற பாடலைப் பாடச் சொன்னார் விஸ்வநாதன்.

அந்த தமிழ்ப்பாட்டை, தெலுங்கில் எழுதிக் கொண்டு சிறப்பாகப் பாடினார் பாலு. அவருடைய குரல் வளம் எம்.எஸ்.வி.க்கு மிகவும் பிடித்திருந்தது. எனினும், தெளிவான உச்சரிப்புடன் தமிழில் பாட முடியுமா என்று சந்தேகப்பட்டார். "தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டுவிட்டு, பிறகு என்னை வந்து பாருங்கள்" என்று கூறி பாலுவை அனுப்பி வைத்தார்.

பாடுவதற்கு அப்போது வாய்ப்புக் கிடைக்காமல் போனாலும், தன்னுடைய குரல் மெல்லிசை மன்னருக்குப் பிடித்துவிட்டதில் பாலு திருப்தி அடைந்தார்.

இதன் பின் பல தெலுங்குப் படங்களுக்கு அவர் பின்னணி பாடினார்.

### எதிர்பாராத சந்திப்பு

இதற்குச் சரியாக ஒரு ஆண்டுக்குப் பிறகு, ஒரு ரெக்கோடிங் தியேட்டரில் பாலசுப்பிரமணியமும்,



எம்.எஸ்.விஸ்வநாதனுடன் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.

எம்.எஸ்.விஸ்வநாதனும் தற்செயலாக சந்தித்துக் கொண்டனர்.

தன்னை விஸ்வநாதன் மறந்திருப்பார் என்று பாலு நினைத்தார். ஆனால், அவரோ, "தம்பி! ஸ்ரீதர் ஆபீஸில் என்னைச் சந்தித்தது நீங்கள் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்று பதிலளித்தார் பாலு.

"மீண்டும் என்னை வந்து பார்க்கச் சொன்னேனே! ஏன் பார்க்கவில்லை?" என்று எம்.எஸ்.வி. கேட்க, "தமிழை இம்புரூவ் செய்து கொண்டு வரச்சொன்னீர்கள். அதனால்தான் வரவில்லை" என்று பாலு சிரித்துக்கொண்டே சொன்னார்.

"இப்போது உங்கள் தமிழ் நன்றாகத்தான் இருக்கிறது. நாளைக்கே என்னை வந்து பாருங்கள்!" என்றார் எம்.எஸ்.விஸ்வநாதன்.

அதன்படி, மறுநாள் எம்.எஸ்.விஸ்வநாதனைப் போய் சந்தித்தார், பாலு. "ஓட்டல் ரம்பா" என்ற படத்துக்குப் பாடல் பதிவு நடந்தது. எல்.ஆர்.ஈஸ்வரியுடன் இணைந்து ஒரு பாடலைப் பாடினார் பாலசுப்பிரமணியம்.

முதன் முதலாக அவர் பாடிய "ஓட்டல் ரம்பா" படம் வெளி வரவே இல்லை!

### சாந்தி நிலையம்

சில நாள் கழித்து "சாந்தி நிலையம்" படத்தில், "இயற்கை என்னும் இளைய கன்னி" என்ற பாடலைப்பாடும் வாய்ப்பை, பாலசுப்பிரமணியத்துக்கு வழங்கினார் எம்.எஸ்.விஸ்வநாதன்.

பாலசுப்பிரமணியமும், பி.சுசீலாவும் இணைந்து பாடிய அந்தப்பாடல் அற்புதமாக அமைந்தது.

தன்னுடைய இந்தப் பாடல் பெரிய 'ஹிட்' ஆகும், அதன் மூலம் தனக்கு புகழ் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தார் பாலு.



S.P. பாலசுப்பிரமணியமும், P. சுசீலாவும்

### எம்.ஜி.ஆர். அழைப்பு

அதற்குள், எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. பாலுவின் குரல் வளத்தை அறிந்த எம்.ஜி.ஆர்., அவரை தன்னுடைய "அடிமைப் பெண்" படத்தில் பயன்படுத்திக் கொள்ள எண்ணினார். கே.வி.மகாதேவன் இசை அமைப்பில், "ஆயிரம் நிலவே வா" என்ற பாடலை பாலு பாடுவது என்று முடிவாகியது.

*(தொடரும்*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## புலனாய்வுப் பத்திரிகையாளர்களும் புனைகதைகளும்

ராஜீவ் கொலையின் பின்னர் ஏற்பட்ட குழப்பங்கள் நால்வர் வன்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்களின் போது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மே 24ஆம் திகதி வரை தமிழ் நாட்டில் வன்செயல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. தமிழ் நாட்டில் மேலும் நால்வர் கொல்லப்பட்டனர்.




ராஜீவ் படுகொலையைப் புலிகளே புரிந்துள்ளனரென்று இலங்கை அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படை அணியொன்றினை அதே பாணியிலேயே புலிகள் தாக்கினரென்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். அந்தக் குண்டினை வெடிக்க வைப்பதற்காக ட்ரான்சிஸ்டர் வானொலியைப் போன்ற தொலைதூர இயக்குக் கருவியைப் புலிகள் பயன்படுத்தினரென்றும் இதே பாணியிலேயே ராஜீவ் காந்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமென்றும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். பூச்செண்டுக்குள் சிறு அளவிலான பிளாஸ்டிக் வெடி பொருளை மறைத்து வைக்கலாம் என்றும், 100 மீற்றர்களுக்கு அப்பாலிருந்து வெடிக்க வைக்கலாமென்றும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தற்கொலைக் குண்டுதாரியான பெண், தமிழ்நாடு காங்கிரஸ் முக்கியஸ்தர் மரகதம் சந்திரசேகரின் விருந்தாளியென்றும், அந்தப் பெண் மரகதத்தின் வீட்டிலேயே தங்கியிருந்தார் என்றும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அரைவேகாட்டு புலனாய்வுப் பத்திரிகையாளர்கள், முந்திரிக் கொட்டைகள் போல் முந்திக் கொண்டு சரிவரப் புலனாய்வுகள் நடத்தாமல் இவ்வாறு கதைகள் அளப்பதில் வல்லவர்கள். இந்தப் பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி பார்த்தால், மரகதம் சந்திரசேகரே கொலையாளிக்கு உதவியிருக்கலாமென்று வாசகர்களின் மனதில் சர்வசாதாரணமாக அபிப்பிராயம் எழுந்து விடும். மரகதம் சந்திரசேகரின் ஒரேயொரு மகளான லதா, இலங்கையைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரை திருமணம்

> **அரைவேகாட்டு புலனாய்வுப் பத்திரிகையாளர்கள், முந்திரிக் கொட்டைகள் போல் முந்திக் கொண்டு சரிவரப் புலனாய்வுகள் நடத்தாமல் இவ்வாறு கதைகள் அளப்பதில் வல்லவர்கள். இந்தப் பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி பார்த்தால், மரகதம் சந்திரசேகரே கொலையாளிக்கு உதவியிருக்கலாமென்று வாசகர்களின் மனதில் சர்வசாதாரணமாக அபிப்பிராயம் எழுந்து விடும். மரகதம் சந்திரசேகரின் ஒரேயொரு மகளான லதா, இலங்கையைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரை திருமணம் புரிந்திருப்பதாக அப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. லதாவின் கணவரின் பெயர் பிரியகுமார். ஆனால், சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் பிரியகுமார என்ற சிங்களவரை லதா மணம் முடித்திருந்தாகத் தெரிவித்திருந்தன. லதாவின் கணவர், அதாவது மரகதம் சந்திரசேகரின் மருமகன் ஓர் இந்தியர் ஆவார்.**

புரிந்திருப்பதாக அப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. லதாவின் கணவரின் பெயர் பிரியகுமார். ஆனால், சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் பிரியகுமார என்ற சிங்களவரை லதா மணம் முடித்திருந்தாகத் தெரிவித்திருந்தன. லதாவின் கணவர், அதாவது மரகதம் சந்திரசேகரின் மருமகன் ஓர் இந்தியர் ஆவார். லதா பிரியகுமார் அப்போது அரக்கோணம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். மரகதம் சந்திரசேகரின் மகனான லலித் என்பவரே சிங்களப் பெண்ணொருவரைத் திருமணம் முடித்திருந்தார்.

மற்றொரு தமிழகப் பத்திரிகை பாரிய கட்டுக்கதையொன்றினைக் கட்டவிழ்த்து விட்டது. 'கொலையாளியின் அடையாளத்தை மறைப்பதற்கு முயற்சிகள்' என்ற தலைப்பில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பான விசாரணையை நடத்திவரும் புலனாய்வாளர்கள் வேண்டுமென்றே கொலையாளியின் அடையாளத்தை மறைக்க முனைகிறார்கள் என்று தெரிவித்த அந்தப் பத்திரிகை, ஒரு பெண்ணின் படத்தைப் பிரசுரித்து, அவரே கொலையாளியாக இருக்கலாமென்று தெரிவித்திருந்ததோடு, அப்பெண்ணின் பெயர் பேகம் என்றும் குறிப்பிட்டிருந்தது.

மெல்லிய உடலமைப்புக் கொண்ட அந்தப் பெண் மணி, இருபது வயதிற்கு மேற்பட்டவராக இருக்க முடியாது. கூட்ட மைதானத்தில் லதா கண்ணனுக்கும் கோகிலாவுக்குமிடையில் கொலையாளியெனச் சந்தேகிக்கப்படும் பெண் காணப்பட்டதாகவும், அந்தப் பத்திரிகை தெரிவித்திருந்தது. குண்டு வெடிப்பில் சிதறிய உடல் பாகங்கள், ஒன்று சேர்த்துப் பொருத்தப்பட்டு, அரசாங்க பொது மருத்துவமனைப் பிரேத அறைக்கு கொண்டு சென்று வைக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்திருந்தது. அந்தக் கொலையாளிப் பெண், தென்னிலங்கையில் வாழும் கராவ அல்லது சலாகம என்ற சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாமென்றும், சென்னையில் வாழும் தமிழர்கள் சிலரை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் உண்மையில் முதல் நாள் 24ஆம் திகதி 'த ஹிந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த சல்வார்க் கமீஸ் பெண்ணைப் பற்றியே இந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. 'த ஹிந்து' பத்திரிகையின் புலனாய்வுப் பத்திரிகையாளர் பெற்றுப் பிரசுரித்த அதே படத்தை வைத்து, இப்பத்திரிகை கதை அளர்ந்திருந்தது. த ஹிந்து பத்திரிகையில் லதா கண்ணனுக்கும் கோகிலாவுக்குமிடையில் சந்தன மாலையுடன் கொலையாளி நிற்கும் படம் வெளிவந்த பின்னரே, விசேட புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'நியூஸ் ருடே' என்ற தமிழகப் பத்திரிகை மற்றொரு அதிர்ச்சிகரமான செய்தியை வெளியிட்டிருந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னால், வெளிநாட்டுக் கரங்கள் இருப்பதாக அப்பத்திரிகை தெரிவித்திருந்தது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் ஆர்.டி எக்ஸ்.வெடிமருந்து அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளிலேயே காணப்படுவதாகவும், திறமை வாய்ந்த வெடிகுண்டு நிபுணர்கள் குழுவொன்றினால் ஜக்கர் - பெல்ற் குண்டு பொருத்தப்பட்டு, ராஜீவைக் கொலை செய்வதற்காகவே இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அப்பத்திரிகை எழுதியிருந்தது. இந்தியாவிலிருக்கக்கூடிய எந்தவொரு தீவிரவாத இயக்கத்திடமும் சக்தி வாய்ந்த இந்தக் குண்டைத் தயாரிக்கக் கூடிய தொழில்நுட்ப அறிவு இல்லையென்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. "மிலேச்சத்தனமான படுகொலைக்குப் பின்னால் சீ.ஐ.ஏ.யின் கரங்கள்" என்று இந்தச் செய்திக்கு அந்தப் பத்திரிகை தலைப்பிட்டிருந்தது. பாரதிய ஜனதாக் கட்சிக்கும், ஜனதாக் கட்சிக்கும் எதிராக சந்தேகத்தைக் கிளப்பிவிடும் வகையில் அச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. சாதி, சமய, இனப்பிரச்சினைகள் இப்படுகொலைக்குக் காரணமாக அமையவில்லையென்றும், சீ.ஐ.ஏ.இந்தப் படுகொலையைச் செய்யத் திட்டமிட்டது என்ற தோரணையிலும் இச்செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

காங்கிரஸ் கட்சி தனித்தோ அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்தோ ஆட்சி அமைக்கக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும், இதனால் மீண்டும் ராஜீவ் காந்தி பிரதமராகலாமென்றும் சீ.ஐ.ஏ.கருதியதாலேயே, அவரைக் கொன்று விட்டது என்று அப்பத்திரிகை தெரிவித்திருந்தது.

இலங்கைப் பத்திரிகைகளும் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தன. கொழும்பிலிருந்து வெளிவந்த சிங்களப் பத்திரிகைகள், புலிகளே இக் கொலையைச் செய்திருக்கலாமென்று பல விடயங்களை மேற்கோள் காட்டி

*(அரசியல் தொடர்)*

செய்திகளை வெளியிட்டன. கொழும்பிலிருந்து வெளிவந்த தமிழ் பத்திரிகைகள் பெரும்பாலும் தமிழகச் செய்திகளை உள்வாங்கி, செய்திகளை வெளியிட்டன. யாழ்ப்பாணத்தில் அப்போது புலிகளின் ஆதிக்கம் காணப்பட்டதால் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் புலிகள் மீது குற்றம் சுமத்துவதைத் தவிர்த்துக் கொண்டன. இந்தியப் படை இலங்கையின் வடக்கு கிழக்கிலிருந்து 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியேறியதையடுத்து, புலிகள் இயக்கம் சிறு நூல் ஒன்றினை வெளியிட்டிருந்தது. அதில், இந்தியப்படை புரிந்ததாகக் கூறப்படும் அத்துமீறல்கள் பற்றி தெரிவிக்கப்பட்டிருந்ததோடு, ராஜீவ் காந்திக்கு எதிரான விமர்சனங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கிடையில், குண்டு வெடிப்பில் காயமுற்ற பலரின் பேட்டிகளைப் பத்திரிகைகள் பிரசுரித்து வந்தன. சம்பவத்தை நேரடியாகக் கண்டவர்கள் என்று கூறிக் கொண்ட பலரின், புனைகதைகளுக்கும் பத்திரிகைகள் இடமளித்திருந்தன. ஜனரஞ்சகமான ஒரு அரசியல் தலைவரைக் கொலை செய்வதற்கு மனிதக் குண்டுதாரி பயன்படுத்தப்பட்ட விதம் குறித்துப் பத்திரிகைகள் பத்தி, பத்தியாக எழுதித் தள்ளின. இக் கொலைக்குத் திட்டமிட்ட விதம், கொலைக்கான தயாரிப்பு, கொலை இடம்பெற்ற பாணி ஆகியவற்றைக் கொண்டு "இந்த நூற்றாண்டில் படுகொலை" என்று சில பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

(தொடர்ந்து வடியும்....)




**எளிமையான** சாப்பாடு வீட்டில் அம்மா செய்வது மாதிரியே ருசியாக இருந்தது.

"ஆமா இந்த விஷயமெல்லாம் லதாவுக்கு எப்படித் தெரிஞ்சுது?" - சட்டென்று அனந்தராமன் கேட்டான்.

"இங்க வந்த அந்தப் பொண்ணு சொல்லித்தான்." லதா பதில் சொன்னாள்.

அப்படியானால் மாயாவுக்கு என்னைப் பற்றிய விபரங்கள் நிறையத் தெரிந்திருக்கும்.

"நேரம் ரொம்ப ஆயிடுச்சின்னு நெனைக்கிறேன்" கடைசியாக சுந்தரராமன் ஞாபகப்படுத்தினார்."

"நான் கிளம்பறேன். கண்டிப்பா அங்க போயாகணும் போகலேன்னா சரிப்படாது." அனந்தராமன் எழுந்தான்.

"நான் வேணும்னா துணைக்கு வர்றேனே...."

"வேண்டாம். எனக்கு பாதுகாப்புக்கு துணையிருக்கு..." சொல்லியபடியே சட்டையை மேல்புறமாக உயர்த்திக் காட்டினான். இடுப்பில் சொருகியிருந்த கத்தியின் பளபளப்பு வெள்ளி மாதிரித் தெரிந்தது. அனந்தராமன் வீட்டை விட்டு வெளியேறினான்.

இடது பக்கம் தெரிந்த வழியில் நடந்தான்.

"சாப்பாடெல்லாம் ஆயிடுச்சா" பழகின குரல்.

மாயா!

"ஆயிடுச்சு."

"உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்கேன்."

"என்ன விஷயம்?"

"அந்த பங்களா வாசல்ல இரண்டு பேர் நிக்கிறாங்க. உங்ககூட மோதறதுக்காகத்தான்னு நினைக்கிறேன்."

"அதுதான் அவங்களோட வழியின்னா அதையும் பார்த்துட வேண்டியதுதான்" சொல்லியபடியே இடுப்பிலுள்ள கத்தியைக் காட்டினான்.

அவள் சொன்னது உண்மைதான். இரண்டு பேர் காத்திருந்தார்கள்.

"கொஞ்சம் வழி விடுகிறீர்களா?" - லாந்தர் விளக்கைப் பிடித்தபடி நின்றிருந்தவர்களைப் பார்த்து அனந்தராமன் கேட்டான்.

"வழி விடுறோம். ஒரு சின்ன விஷயம்!" எட்வர்டு பீடிகை போட்டான்.

"சொல்லுங்க!"

"இடத்தைக் காலி பண்ணினா நல்லது. காலி பண்ணச் சொல்லி சைமன் சொல்லச் சொன்னார்."

"அப்படியா? காலி பண்ணலேன்னா?"

"காலி பண்ண வைக்க வேண்டியிருக்கும்!"

"ஓகோ அப்படி ஒண்ணு இருக்கா?" அந்த நிமிடத்திலேயே இந்தச் சம்பவமும் நடந்தது.

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

ஒரு வலுவான மிதி.

எட்வர்டு யாரோ தூக்கி எறிந்தது மாதிரி விழுந்தான். உடனே மற்றவன் அசைய, அவனது வலதுகையைப் பிடித்து இழுத்து வீசி எறிந்தான். எட்வர்டு மெதுவாய் எழுந்து நெருங்கினான். அவன் கையில் கத்தி மின்னியது.

அனந்தராமன் சட்டென்று மேல்புறமாகக் குதித்து எட்வர்டின் கைமீது பாய்ந்தான். கத்தி எங்கேயோ விழுந்த சத்தம் கேட்டது. எட்வர்டு சினேகிதனைப் பார்த்தான்.

இருவரும் உஷாராகிப் பின் வாங்கினார்கள்.

லாந்தர் விளக்கு மெதுவாய் அகன்று மறைந்தது.


"கெட்டிக்காரர்தான்" மாயா பாராட்டினாள்.

"என்னைத் தற்காத்துக்கிட்டதைத் தவிர வேறு ஒண்ணும் பண்ணலையே?" அனந்தராமன் சிரித்தபடி சொன்னான்.

"சரி அப்படியே இருக்கட்டும். ஒரு விஷயம் தெரியுமா? கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எட்டி மரத்தடியில் ஒரு சம்பவம். இறந்து போன நீலகண்டனோட ஆவியை அந்த மரத்தில அறைஞ்சாச்சு. அப்படி ஒரு கட்டம் தாண்டியாச்சு."

"இவங்ககூட மந்திரவாதிங்களும் இருக்காங்களா?"

"அப்புறம்? அந்த பங்களாவை



உடைக்கணும்கிறது அவ்வளவு சுலபமா என்ன? சட்டு சட்டுன்னு அடுத்த நடவடிக்கையில் இறங்கிடுவாங்க.

"செஞ்சிட்டுப் போகட்டும்."

"கூடாது. அதைத் தடுக்கணும்!"

"அவங்களைத் தடுக்க நான் யாரு? இதுவரைக்கும் நான் செஞ்சதுகூட எங்க அம்மா சொன்னதினாலதான். இப்ப யோசிக்கும்போது இதுகூட தேவையில்லாததோன்னு தோணுது"

"சரி இனிமேல் நான் சொல்றதா நினைச்சுக்கோங்களேன்." பேசியபடியே அவனது தோள்மீது மாயா தன் கையைப் பதித்தாள்.

அவளது கை உடம்பில் பட்டபோது விர்ரென்று உடம்பில் உயர்ந்து கொண்டிருந்த இரத்த அழுத்தம் சமனப்பட்டது மாதிரி இருந்தது.

விடியற்காலையில், குளிரையும் பொருட்படுத்தாமல் வேலைக்காரர்கள் குழுமினார்கள்.

"இனிமேல் பயப்படுறதுக்கு ஒண்ணும் இல்லை. இப்படிச் செய்யலாமா? இந்தப் பங்களால - ஒரு மூலையை அசைச்சுப் பார்த்திடலாம். பங்களாவுக்கு நடுவுல இருக்கிற நாலு தூண்கள்ல ஒண்ண அசைச்சு எடுத்திடலாம். ஒண்ணு அசைஞ்சிட்டா, மத்ததெல்லாம் ஆட்டம் கொடுத்திடும்." சைமன் ஆலோசனை சொன்னான்.

*(பயங்கரம் தொடரும்)*

## மனதுக்கு நிம்மதி

# கடவுளை எப்போது நினைக்கலாம்?


**உலகத்தில்** மிகப் பரிதாபமான மனிதர்கள் யார் தெரியுமா? தாங்கள் செய்கிற தவறுகளை நியாயப்படுத்தி, யதார்த்ததைப் புரிந்து கொள்ளாமல் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்பவர்கள்தான்.

தவறான பாதையில் போகிறோம் என்று தெரிந்தாலும், அதைத் தங்கள் மனத்தளவில் கூட ஏற்க மறுப்பார்கள். இவர்களை யாராவது திருத்திச் சரியான பாதைக்குக் கொண்டு செல்ல நினைத்தாலும், அதற்கு ஒத்துழைக்க மாட்டார்கள். தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன், தன்னைக் கைகொடுத்துக் காப்பாற்ற முனைபவரையே தண்ணீருக்குள் இழுக்கிற மாதிரி, திருத்த வருபவரையே படுகுழிக்குள் இழுக்கப் பார்க்கிற ரகம் இவர்கள். நாளாவட்டத்தில் ஆபத்துக்கு உதவக்கூட நண்பர்கள் இல்லாமல் படுசோகமாக இவர்களது கதை முடியும்.

நான் சந்தித்த ஒரு நபரையே இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அரைமணிநேரம்கூட அவரால் சிகரெட் பிடிக்காமல் இருக்க முடியாது. இதயநோய் வரை இந்தப் பழக்கம் கொண்டுபோய் விட்ட பிறகும், அவர் தன்னைத் திருத்திக் கொள்ளவில்லை. மனைவி, குழந்தைகளின் அறிவுரையும் கெஞ்சலும் அவரிடம் எடுபடவில்லை. எப்போதும் புகைமூட்டத்துக்கு நடுவிலேயே இருப்பார்.

சிகரெட் பழக்கத்திலிருந்து அவரை விடுவிக்க எல்லா வழிகளையும் கையாண்டு பார்த்துவிட்ட அவரின் மனைவி, கடைசி உபாயத்துக்கு வந்தார். வீட்டில் மணிக்கணக்கில் பூஜைகள் செய்ய ஆரம்பித்தார். கணவரை புகைப் பழக்கத்திலிருந்து மீட்டுத் தரும்படி இறைவனிடம்



வேண்டியதோடு, "பூஜை நடக்கிற வேளையிலாவது புகை விடாமல் இருங்களேன்..." என்று கணவருக்கு வேண்டுகோளும் வைத்தார்.

முதலில் ஒருசில நாட்கள் மனைவிக்குக் கட்டுப்பட்ட அந்த ஆசாமி, "உன் பூஜைக்கும் என் சிகரெட்டுக்கும் என்ன சம்பந்தம்? உன்பாட்டுக்கு நீ... என்பாட்டுக்கு நான்!" என்று மறுபடி கொளுத்த ஆரம்பித்தார்.

"இது சாமிக் குற்றம் ஆயிடும். குடும்பத்தைப் பாதிக்கும். நான் சொல்றதை நம்பலேன்னா, ஒரு மகான் சொல்றதையாவது நம்புங்க..." என்று தன் கணவரை ஒரு துறவியிடம் அழைத்துப் போனார் மனைவி.

'ஆமாம்... பூஜை நேரத்தில் சிகரெட் பிடிப்பது தெய்வக் குற்றம்தான்' என்று துறவி சொல்லிவிட்டால், அப்புறம் அவர் பேச்சைத் தட்டமுடியாமல் போய்விடுமோ என்று யோசித்த கணவர், தன் மனைவியை முந்திக் கொண்டு துறவியிடம் பேச்சுக் கொடுத்தார்.

"சுவாமி, கடவுளை எப்போதெல்லாம் நினைத்துக் கொள்ளலாம்?"

"கடவுள் சர்வவியாபி... அவனுக்குக் காலம், நேரம் எதுவும் கிடையாது. அவனை எந்த நேரமும் நினைக்கலாம். நினைக்க நினைக்கப் புண்ணியம் தான்!" என்றார் துறவி.

"பூஜை நேரம் தவிர குளிக்கும் நேரம், சாப்பிடும் நேரம் போன்ற மற்ற நேரங்களிலும் சுவாமியை மனசுக்குள் நினைத்துக் கொள்ளலாமா சுவாமி?"

"தாராளமாக... அது மிகமிகப் புண்ணியமாயிற்றே!! என்றார் துறவி. உடனே மனைவி பக்கம் திரும்பினார் கணவர்.

"கேட்டாயா? கடவுளை எப்போது வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாமாம்! புகைக்கும்போதுகூட நினைக்கலாம்' என்று சுவாமியே சொல்லிவிட்டார்!! என்றபடி தனது அக்னி ஹோமத்தை ஆரம்பித்து விட்டார்.

'சுயபுத்தி இல்லாவிட்டாலும் சொல்புத்தியாவது வேண்டும்' என்பார்கள். அந்தச் சொலிபுத்தியையே தன் குதர்க்கவாதத்தால் இஷ்டத்துக்கு வளைத்து முறுக்கி அனர்த்தமாக்கி, தன் விருப்பம் போல் நினைப்பவர்கள் இவர் போல நிறையப் பேர் இருக்கிறார்கள்.

"பீர் குடிச்சா உடம்புக்குக் குளிர்ச்சி, தெரியுமா?" என்பார்கள். "தினம் ஒரு பெக் பிராண்டி குடிச்சா, ஹார்ட் அட்டாக்கே வராதாம்!! என்பார்கள். இவர்களில் அநேகம் பேர் அடிபட்ட பிறகே திருந்துகிற கேஸ்.

இன்னொரு பரவலான உதாரணத்தையும் சொல்லலாம்.

'எல்லோரும் செல்போன் வைத்திருக்கிறார்களே.... நம்மிடம் இல்லாவிட்டால் கேவலமாக நினைப்பார்களோ?' என்று இப்போதெல்லாம் தேவை இருக்கிறதோ, இல்லையோ... வெட்டிப் பந்தாவுக்காக செல்போன் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள் பலர்.

கடைசியில் பில் வந்ததும் விளக்கெண்ணெய் குடித்த மாதிரி ஆகி... மூன்று, நாலு பில்களுக்குமேல் தாக்குப்பிடிக்க முடியாமல் செல்கனெக்ஷனையே துண்டித்து விடுகிறார்கள்!


காலையில் எழுந்ததும் முதல் வேலையாகத் தன் வீட்டு பெல்கனியில் உள்ள பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது பேராசிரியர் ஒருவரது வழக்கம். ரோட்டில் செல்பவர்கள் அண்ணாந்து பார்த்து, இவர் தண்ணீர் ஊற்றுவதைக் கவனித்து விட்டால் போதும்... பேராசிரியருக்குப் பெருமை தாளாது. கூடவே, 'அட, கலர் கலரா நிறையப் பூ பூத்திருக்கே!! என்று யாராவது சொல்லிவிட்டால் போதும்... தலை, கால் புரியாது. அன்று அரைமணி நேரம் அதிகமாகவே தண்ணீர் ஊற்றுவார்.

பேராசிரியரின் எதிர்வீட்டு ஆசாமிக்கு ஒரு சந்தேகம். பேராசிரியர் பல மாதங்களாகத் தண்ணீர் ஊற்றியும் பெல்கனி செடிகளில் காணப்பட்ட பூக்களின் எண்ணிக்கையில் ஒன்றுகூடக் கூடவில்லை.... குறையவில்லை! என்ன மர்மம் இது? பேராசிரியர் இல்லாத சமயம், இவர் அவர் வீட்டு பெல்கனிக்குப் போய் பூக்களைத் தொட்டுப் பார்த்தார். அவையெல்லாம் பிளாஸ்டிக் பூக்கள்!

இதைக் கண்ணுற்ற இந்த ஆசாமி பேராசிரியரிடமே கேட்டுவிட்டார். - "நீங்கள் தண்ணீர் ஊற்றினாலும் ஊற்றாவிட்டாலும் இந்தப் பூக்கள் வாடப்போவதில்லை. எதற்காகப் பொன்னான காலை நேரத்தையும் தண்ணீரையும் இப்படி வீணடிக்கிறீர்கள்?"

பேராசிரியருக்குக் கோபம் பொத்துக்கொண்டது. "அது எனக்குத் தெரியாதா? எனக்காகவா இதையெல்லாம் செய்கிறேன்? ரோட்டில் போகிறவர்கள், என்னைப் பார்த்து நாலு வார்த்தை பாராட்டிப் பேசவேண்டாமா? அதற்குத்தான் செய்கிறேன். நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்!!

இப்படி தங்களைத் தாங்களே கோமாளி ஆக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அனைவரது வாழ்க்கையிலும் உண்டு. யோசித்துப் பார்ப்போம்... வெட்கப்படாமல் திருத்திக் கொள்வோம்....



# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.211க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஜெயப்ரதா சிறிஸ்காந்தன், 986/A, ஸ்ரீ ஜெயந்தி மாவத்தை, ஸ்டேசன் வீதி, ஹனுப்பிட்டிய, வத்தளை

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சி. இராஜேந்திரா, 33-5/1, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06
2. திருமதி. அனுசுயா சுகுமார், 'மாருதி மஹால்' வெளிக்குளம், வவுனியா.
3. சி.மிதுஷான், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு-2, கல்முனை.
4. A.சந்தியாகோ, 34/12, அம்பிட்டிய வீதி, கண்டி.
5. ஏ.பாத்திமா ஹப்ஷா, இல.20, கோட் வீதி, திருகோணமலை.
6. அ.றதீஸ், பிரதான வீதி, பண்டாரவளை.
7. சு.வனிதா, செட்டிக்குளம் வவுனியா.
8. ந.காஞ்சனா, பிரதான வீதி, அநுராதபுரம்.
9. க.ஜெயமதி, மடு வீதி, மன்னார்.
10. ற.தர்மினி, செங்கலடி மட்டக்களப்பு.

## குறுக்கெழுத்துப் போட்டி 213

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | ■ | 10 | 11 | ■ |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| ■ | 32 | ■ | 34 | 35 | 36 |

### மேலிருந்து கீழ்

1. உண்மை என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
2. பல்லியினங்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)
4 கொலை என்றும் கூறலாம்.
5. அலை அல்லது மறைப்பு என்றும் பொருள்படும்.
15. முகத்திலுள்ள பகுதி.(குழம்பியுள்ளது)
18. ஆவணப்பதிவேடு அல்லது திருமுகம் என்றும் கூறலாம். (தலைகீழ்)
23. உயிரற்றவை. (குழம்பியுள்ளது)
26. விருட்சம் ஒன்று.(தலைகீழ்)
28. முக்கனிகளில் ஒன்று. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. கலைவாணி
7. குலம் அல்லது ஒழுக்கம்.
10. நிலம் என்றும் கூறலாம்.
13.நட்சத்திரங்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)
23.பிரணவ மந்திரம். (திரும்பியுள்ளது)
25.அஜித் நடித்த திரைப்படம் ஒன்று.(குழம்பியுள்ளது)
34. கட்டுக்கதவை இப்படிக்கூறுவர்.

## குறுக்கெழுத்துப் போட்டி 211- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மூ | 2 ர | 3 ணி | 4 த | 5 ற | 6 ன் |
| 7 க | 8 ண் | ■ | 10 பு | 11 சி | ■ |
| 13 ரு | 14 அ | 15 ழ | ■ | 17 ம | 18 ழை |
| ■ | ■ | ■ | 22 ச | 23 ம் | 24 வா |
| 25 ரி | 26 ஆ | ■ | 28 தா | ■ | ■ |
| 31 உ | 32 ம் | 33 ள | ■ | 35 வீ | 36 ணை |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 03.04.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-213
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# வாழ்க்கையில் முன்னேற ஏழு வழிகள்

### நன்மை தரும் 7 விடயங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை.
2. கோபத்திலும் பொறுமை.
3. தோல்வியிலும் விடாமுயற்சி.
4. வறுமையிலும் உதவி செய்யும் மனம்.
5. துன்பத்திலும் துணிவு.
6. செல்வத்திலும் எளிமை.
7. பதவியிலும் பணிவு.

### வழிகாட்டும் 7 விடயங்கள்

1. சிந்தித்துப் பேசவேண்டும்.
2. உண்மையே பேசவேண்டும்.
3. அன்பாகப் பேசவேண்டும்.
4. மெதுவாகப் பேசவேண்டும்.
5. சமயம் அறிந்து பேசவேண்டும்.
6. இனிமையாகப் பேசவேண்டும்.
7. பேசாதிருக்கப் பழக வேண்டும்.

### நல்வாழ்வுக்கான 7 விடயங்கள்

1. மகிழ்ச்சியாக இருக்கப் பழகுங்கள்.
2. பரிசுத்தமாக சிரிக்கக் கற்று கொள்ளுங்கள்.
3. பிறருக்கு உதவுங்கள்.
4. யாரையும் வெறுக்காதீர்கள்.



5. சுறுசுறுப்பாக இருங்கள்.
6. தினமும் உற்சாகமாக வரவேற்கத் தயாராகுங்கள்.
7. மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்.

### கவனிக்க 7 விடயங்கள்

1. கவனி உன் வார்த்தைகளை.
2. கவனி உன் செயல்களை.
3. கவனி உன் எண்ணங்களை.
4. கவனி உன் நடத்தையை.
5. கவனி உன் இதயத்தை.
6. கவனி உன் முதுகை.
7. கவனி உன் வாழ்க்கையை.

## பிளட் போல்!

**1975இல்** நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் நெருப்பாக இருந்தவர் ஆஸ்திரேலிய வீரர் ஜெ.ஃப் தாம்ஸன். இவர் பந்து வீசுகிறார் என்றாலே மைதானத்துக்கு வெளியே ஒரு ஆம்புலன்ஸ் நிற்கும். இலங்கைக்கு எதிரான போட்டியில் துலீப் மெண்டிஸ், சுனில் வெட்முனி என்ற இரண்டு பாட்ஸ்மான்களை அடுத்தடுத்த ஓவர்களில் இரத்தம் சொட்டச்சொட்ட ஆஸ்பத்திரிக்கு அனுப்பியது இவரது சாதனைகளில் ஒன்று. இது எப்படி இருக்கு?

## ஹலோ.... மை டியர் ஒயி:ஃப்

பந்து வீச்சாளர்களைப் பார்த்துச் சத்தம் போட்டுக் கொண்டே இருப்பது விக்கெட் கீப்பர்களின் வழக்கம். ஆனால் 1992இல் உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஸ்டம்பின் அடிப்பகுதியைப் பார்த்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார் கிரண் மோரே. மற்ற வீரர்கள் இது பற்றிக் கேட்டதற்கு, "ஸ்டம்புக்குக் கீழே மைக்கில் பேசினால் டி.வி.யில் கேட்கும். எனவே, பரோடாவில் உள்ள என் மனைவிக்குச் சில தகவல்களைச் சொல்கிறேன்" என்றாராம் மோரே. இது எப்படி இருக்கு?

# ஒரு பெண்ணின் அவலம்

**ஈழத்திருநாட்டின்** செல்வச் செழிப்பும் விவசாயம் தழைத்தோங்கும் பூமிதான் உடுவில் எனும் ஊர். கல்விமான்களுக்கும் தஞ்சம் இல்லை. இவ்வூரிலே ஒரு சாதாரண விவசாயியாக சிவயோகன் விவசாயம் செய்து வந்தான். அவரது மனைவி பார்வதி உடுவில் பாடசாலையொன்றில் ஆசிரியையாக பணியாற்றி வந்தாள். அவர்களுக்கு இறைவன் அருளினால் 3 அழகான பிள்ளைகள் இருந்தனர். மூத்த பிள்ளை கௌசல்யா அப்போது வயது 10. இளையவள் சந்தியா வயது 3. 2ஆம் பிள்ளை ஆண் பிள்ளை அச்சுதன் வயது 5. மூத்தவள் படிப்பில் கெட்டிக்காரி. அக் குடும்பம் ஒரு சாதாரண குடும்பமாக சந்தோசமாக வாழ்ந்து வந்தது.

அன்று ஒரு நாள் அதிகாலை ஊர்மக்கள் எல்லோரும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இராணுவம் அளவெட்டிப்பகுதியிலிருந்து முன்னேறுகிறதாம். வீதியில் மக்கள் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். இராணுவம் அகோரமான செல்வீச்சுக்களை நடத்தியவாறு முன்னேறி கொண்டிருந்தது. ஷெல்கள் அவ்வூர்ப்பகுதியிலும் விழ ஆரம்பித்தன. அவ்வூர் மக்களும் கையில் கிடைப்பதை எடுத்துக் கொண்டு உறவினர் வீடுகளுக்கோ அல்லது பாதுகாப்பான இடங்களுக்கோ செல்லத் தயாரானார்கள். ஷெல்கள் அக்கம்பக்கமெல்லாம் விழுகிறது. தாயும் தகப்பனும் பொருட்களை எடுத்து கொண்டு, பிள்ளைகளை கேற்றடிக்கு போகுமாறு தாய் பார்வதி கத்தினாள். அவர்களும் சென்றனர். தாயும் தகப்பனும் வீட்டு முற்றத்தில் பொருட்களை எடுத்து கொண்டு செல்ல ஆயத்தமாகும் தறுவாயில் முற்றத்தில் ஒரு ஷெல் விழுந்தது. இருவரும் ஸ்தலத்திலேயே உடல் சிதறி பலியானார்கள். பிள்ளைகளை அந்த தயானவள் கேற்றடிக்கு போக சொன்னதால் எவ்வித காயமுமின்றி உயிர்தப்பினார்கள். அப்பிள்ளைகள் தாயன்பின்றி அனாதையாக்கப்பட்டார்கள்.

மிக அருகில் ஷெல் விழுந்ததால் பிள்ளைகள் பயத்தில் அம்மா அம்மா என கத்தினார்கள். எப்படி வருவார். விசயம் அறியும் வயதுடைய கௌசல்யா ஓடி வந்து பார்த்தாள். அப்பாவையும் அம்மாவையும் பார்த்து கதறி கதறி அழுதாள். அப்போது தான் அருகிலுள்ள அவர்களின் பெரியம்மா ஓடிவந்தாள். பார்த்தவுடன் அதிர்ச்சி ஐயோ...ஐயோ...! என கத்தினார்கள். ஆனால் ஷெல்களோ எல்லா இடமும் விழுந்து கொண்டிருக்கின்றது. தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவ்விடத்தை விட்டு


-ம.யசோதரன், இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்.

உடனே செல்ல வேண்டியதாயிற்று. பெரியம்மா அப் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தன் குடும்பத்துடன் உறவினர் வீடொன்றுக்குச் சென்றார்கள். உறவினர் வீடோ சோகமே வடிவாய் காட்சியளித்தது.

அந்த இரு சின்னஞ்சிறுசுகளும் அம்மா...அம்மா...என புலம்பிக் கொண்டிருந்தார்கள். மூத்தவளோ என்ன செய்ய? அவர்களையும் கட்டியணைத்துக்கொண்டு கண்களில் கண்ணீர் வடிய பேயறைந்தவள் போல் வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள். எல்லாம் விதிபயன். யார் அறிவார்.

இரண்டாம் நாள் யுத்த நடவடிக்கைகள் தணிய அவர்கள் வீடு சென்று செய்ய வேண்டிய காரியத்தையெல்லாம் படபடவென செய்து அடக்கம் செய்தார்கள்.

பிள்ளைகள் அவர்களின் பெரியம்மா வீட்டில் வளர்ந்து வந்தார்கள். என்னதான் இருப்பினும் ஒரு சொந்த தாயின் அரவணைப்பும் அன்பும் போல் வருமா மாற்றந்தாயின் அன்பு. இருப்பினும் தன் பிள்ளைகளுக்கும் அவர்களுக்கும் எந்தவித வேறுபாடுகளும் காட்டாமல் தன் சொந்த பிள்ளைகள் போலவே கவனித்து வந்தாள். யுத்தம் பின்பும் விட்டு வைத்ததாகவில்லை. 1995ஆம் ஆண்டு மிகபெரும் இடம்பெயர்வொன்றை யாழ்ப்பாண மக்கள் சந்தித்திருந்தார்கள். இவ் விடப்பெயர்வாலும் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தார்கள் அப்பிள்ளைகள். கற்றல் செயற்பாடுகள் நிர்க்கதியாக்கப்பட்டன. அப் பிள்ளைகளை வளர்த்து படிப்பித்து ஒரு நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டிய முழு பொறுப்பும் உடையவளாக பெரியம்மா காணப்பட்டால். தம்பி, தங்கையின் முழு செயற்பாடுகளையும் கவனித்து பாடம் சொல்லி கொடுத்து தானும் ஏதோபடித்து கௌசல்யா தனது வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டினாள். எத்தனையோ முறை தன் தம்பி தங்கைகளுக்காக பிறரிடம் ஏச்சு வாங்கியிருப்பாள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஏதோ நாங்கள் அனாதை தானே யார் திட்டினாலும் தட்டி கேட்க யார் இருக்கிறார்கள் என எண்ணி சகித்துகொள்வாள். எத்தனையோ முறை அடிக்கடி அம்மா அப்பாவையும் தன்னையும் தம்பி தங்கையையும் நினைத்து நினைத்து தனக்குள்ளே அழுதிருக்கிறாள். அம்மாவும் அப்பாவும் ஒரே நேரத்தில் இறந்தமை, அதை நேரில் பார்த்தமை எல்லாமே ஒரு பெரிய உளவியல் தாக்கத்தை அவள் அடி மனதில் ஏற்படுத்தியிருந்தது.


பெரியம்மாவின் மகன் வெளிநாடு என்பதால் பொருளாதாரக் கஷ்டம் ஒன்றும் இருக்கவில்லை. பிள்ளைகளுக்கு கேட்ட பொருட்களையோ, படிப்பிற்கோ பணம் கொடுக்க அந்த தாய் பின்னின்றதில்லை. என்னதான் இருந்தாலும் தங்கள் சொந்த தாயிடம் தமக்குத் தேவையானதைக் கேட்டு வாங்குவதுபோல் வருமா? அடிகடி கேட்கமுடியுமா? இவ்வாறாக எல்லா கஷ்டங்களையும் தாங்கியவர்களாக வளர்ந்து அக்கா கௌசல்யா உயர்தர பரீட்சை எழுதிவிட்டிருந்தாள். இருப்பினும் பல்கலைக்கழக அனுமதிக்குப் போதாதிருந்தது. கௌசல்யா தனது படிப்பை இடைநிறுத்திக் கொண்டு உடுவில் மகளிர் கல்லூரியில் எழுதுவினைஞராக சேர்ந்து வேலைசெய்து வந்தாள். இக்காலத்தில் சசிகரன் எனும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப்பிரிவு இறுதியாண்டு மாணவனின் தொடர்பு ஏற்பட்டது. அவனும் அதே ஊரைச் சேர்ந்தவன். கௌசல்யா நல்ல அழகானவள். அன்பு, அரவணைப்பின்றி இருந்த கௌசல்யாவுக்கு சசிகரனது அன்பும் அவனுடன் கதைப்பதும் ஒரு புதுவித சந்தோஷத்தைக் கொடுப்பது மாதிரி இருந்தது. அவன் முதலில் தனது காதலை தெரியப்படுத்தினான். ஆனால் அவள் மறுத்தாள். தான் இருக்கும் நிலையில் இதுக்கெல்லாம் பொருத்தமானவள் நான் அல்ல என கூறினாள். தனது பொறுப்புக்களையும் தன் தம்பிதங்களையும் பற்றி எடுத்து கூறினாள். ஆனால் அவனோ தான் அறிவேன். தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாக கூறி மற்றும் பலவிதமான கருத்துக்களையும் சொல்லி அவளை வற்புறுத்தினான். சசிகரன் ஒரே ஊரை சேர்ந்தவன் என்பதால் அவனுக்கு அவர்கள் குடும்பம் பற்றியும் நடந்தவைகள் பற்றியும் சகலவற்றையும் அறிந்திருந்தான். தவிர்க்கமுடியாத காரணத்தால் அவனது அன்புக்கட்டளையை மறுக்கமுடியாதவளாய் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. சிறிது காலம் அவர்களது காதல் மலர்ந்தது.

சசிகரன் பல்கலைக்கழகம் முடித்து வேலை பார்த்துக்கொண்டிருந்த பொழுது கௌசல்யாவை எல்லோர் சம்மதத்துடனும் திருமணம் செய்தான். சசிகரன் குடும்பத்தாருக்கு சீதனத்தின் மேல் ஒரு கண் இருந்தது. ஆனால் சசிகரன் கட்டுப்படுத்தியிருந்தான். கௌசல்யாவை இனி வேலைக்குப் போவதை நிறுத்தச் சொன்னான். அவளும் கணவனின் அன்புக்குக்கட்டுப்பட்டு வீட்டில் இருந்தாள். அக்காலத்தில் கௌசல்யா கற்பமானாள். வழமைபோல் சிறுசிறு சச்சரவுகள் மாமியாருக்கும் கௌசல்யாவுக்கும் இடையில் ஏற்பட்டன. அது காலபோக்கில் பெரிதாகிக் கொண்டு சென்றது. அவள் யாரிடம் போக? அவர்களுக்கு அம்மா, அப்பாதான் இருக்கிறார்களா? யாரிடமும் சொல்லாதவளாய் மனதிலேயே வைத்துக் கொண்டு வாழ்ந்தாள். இந்நிலையில் ஒரு அழகான ஆண்குழந்தை பிறந்தது. பார்ப்பதற்கு கௌசல்யா மாதிரியே அழகாக இருந்தது அக்குழந்தை. கௌசல்யாவின் குடும்பத்தைப் பற்றி தெரிந்திருந்தும், சீதனமின்றி திருமணம் செய்தவள்தானே. அவளின் பெரியம்மா வீட்டார் வெளிநாடுதானே, அவர்களிடம் சீதனம் என்ற பெயரில் பணம் பெற மாமியார் கௌசல்யாவை கேட்டு கேட்டு துன்புறுத்தினாள். இதனால் பிள்ளை பிறந்திருந்தும் ஒரு நிம்மதி கௌசல்யாவிற்கு இல்லை. இவையொன்றுமே சசிகரனுக்குத் தெரியாது. அவன் தன் மனைவி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தான். அவன் நல்லவன். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவள் தப்பான முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தாள். ஒரு நாள் தன் இரு கண்கள் போல கட்டிக்காத்த கணவனையும் தான் கஷ்டப்பட்டு பெற்றெடுத்த தன் பிள்ளையும் மறந்து அவ்வீட்டு கிணற்றிலேயே யாரும் இல்லாத நேரம் பார்த்து விழுந்து தன் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டாள் கௌசல்யா தாங்கமுடியாத உளவியல் தாக்கத்தை சந்தித்ததனாலேயே இவ்வாறான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்க வேண்டும். தொடர்ச்சியாக மனோரீதியான உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறாள். யுத்தத்தின் கொடுமையை பார்த்தீர்களா? இந்த இடத்தில் தாய், தந்தை இருந்திருப்பின் நிம்மதி தேடி தன் தாய் வீட்டுக்கு போயிருப்பாள். அவளுக்குதான் யாரும் இல்லையே? அவள் எங்கே போக?

# தடைகளைத் தாண்டி...

**நிரோஸ்** ஆழ்ந்த சிந்தனையில் கன்னத்தில் கைகள் இரண்டையும் ஊன்றியபடி ஒரு கல்லில் உட்காந்திருந்தாள். அவள் இருக்கும் விதமே ஒரு லுக் ஆக இருந்தது. உணர்வோட்டங்களால் அவள் மனம் அலைக்கழிந்து கொண்டிருந்த நேரம் அது. அவ்வுணர்வோட்டங்களை முகத்தில் காட்டுவது போல அவளது வெண்ணிறச் சருமம் மாலை நேரச் சூரியனாகி இருளை வாடகைக்கு வாங்கியிருந்தது.

கிளைகளிலிருந்த குயில்கள் இன்னிசை எழுப்பாதிருந்தால் அவள் சுயநினைவிற்கு வந்திருக்க மாட்டாள். அழகிய அவளது இருவண்ண விழிகளிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் அவளது உணர்வோட்டங்களுக்கு முன்னால் அப்பாவியாய்விழ, நினைவிற்குத் திரும்புகிறாள்.


-செல்வி. எம்.பி.எப். பர்ஸானா. ஓட்டமாவடி - 01

ஆம், அவள் ஒரு நடுத்தர குடும்பத்தில் நாலாவது பிள்ளையாகப் பிறந்தாள். தந்தையின் தொழில் வருமானத்தைக் கொண்டு ஓரளவு சிரமமின்றி காலச் சக்கரத்தை ஓட்டியது அந்தக் குடும்பம். நிரோஸ் சிறு வயதிலிருந்தே தான் ஒரு வைத்தியனாக வரவேண்டும் என்றே பாடசாலைக்கு காலடி எடுத்து வைத்திருந்தாள்.

இக் காலத்திலேதான் அவளது அண்ணன்மார் அவளுக்கு இட்ட பெயர் பைத்தியக்காரி. பேச்சி என்பதெல்லாம் அவள் எதைத் தொடங்கினாலும் தடைக்கல்லாக இருந்தது அவர்களது அநியாயமான, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள்தான்.

தன் துன்பம் எல்லாவற்றையும் கொட்டித் தீர்க்க அப்பிஞ்சுள்ளம் நாடியது மலசல கூடத்தைத்தான். அவள் பிறந்த போதே அவள் சுதந்திரமும் பரிபோய்விட்ட படியால் அழுவதைக்கூட மலசல கூடத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறாக துன்பம் அனுபவித்த அந்த பிஞ்சுள்ளத்தை ஸ்கொலஷிப் காலை வாரிவிட, புழுதி மண்ணில் புரண்டாள். அன்பான வார்த்தைகளையும் அரவணைப்பையும் வேண்டியிருந்தவளுக்கு கிடைத்ததோ அடியும் உதையும்தான்.

படிக்கன், படிக்கன் என்று காசை வீணாக செலவழித்தது போதும் போ, போய்த் தொலைடி என் கண் முன்னால நிற்காதடி அந்த பிச்சைக் காரன்ட மகள் எவ்வளவு அழகா படிச்சி பாஸ் பண்ணியிருக்காள். உனக்கென்னடி படிக்கிறதுக்கு? என்று திட்டி வீட்டை விட்டு வெளியே தள்ளி கதவைப் பூட்டினார்கள்.

இரவெல்லாம் பனியின் கொடுங்குளிரில் நடுநடுங்கி கத்திக்கத்தி தொண்டை வரண்டு போனவள் இனி நான் படிச்சு டொக்டரா வந்து இவங்களுக்கெல்லாம் ஒரு பாடம் படிப்பிக்கிறேன் என்று தனக்குள்ளேயே கருவிக் கொண்டாள். இரவின் அந்தகாரத்தில் பயத்திலேயே அப்பிஞ்சுள்ளம் உறங்கிப் போனது. காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் மட்டும் பட்டிராவிடில் அன்றிரவே பனியோடு போராடிய அவ்வுடலை விட்டு உயிர் பறந்திருக்கும். ஆனால் இறைவனின் அன்பு வரையறைக்குள்ளானதல்லவே.

இவ்வாறாக உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் படித்து 9ஏ,சி என்ற பெறுபேறு பெற்றாள். எதிர்பார்ப்பது கிடைப்பதில்லை என்பது போல அவளது வாழ்க்கையும் அமைந்தது.

விஞ்ஞானத்தில் அவளுக்கு சி என்றதும் தலை கிர்ரென்று சுற்றியது. அப்போ நான் நினைச்சது நடக்காதா? வீட்டிலே என்னை பயோ படிக்க விடமாட்டாங்களே. ஐயோ!ஐயோ! என்று புலம்பலானாள். இப்படி நல்ல பெறுபேறு எடுத்ததற்கு அவள் ஒரு ஆண்பிள்ளையாக இருந்திருந்தாள் அவள் கேட்ட எல்லாவற்றிற்கும் பச்சைக் கொடியையே காட்டியிருப்பார்கள். பெண்ணாய்ப் பிறந்தால் எங்கும் பழியும் பாவமும்தானோ? என்று அவளது மனம் விம்மியது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவளது விஞ்ஞானம் படிக்கும் ஆசைக்கு சிவப்புக் கொடியே காட்டப்பட்டது. பொண்ணு அதுவும் குமருப்புள்ள அங்க இஞ்ச திரிஞ்சி நாலைந்து பஸ்ஸிலே ஏறி இறங்கி படிக்கத்தான் வேணுமா? பேசாம அடக்க ஒடுக்கமா எல்லோரும் படிக்கிறாங்களே. அதுல நீயும் படி, உனக்கு திமிரும் ரொம்ப அதிகம். வேற ஊருல படிக்கவும் கொண்டு விட்டுவிட்டா என்னத்த பாக்குற. உன்னை பிடிக்கக்கூட முடியாதாக்கும் என்று அவளை பலவாறாக அவளது தாய் திட்டினாள்.

அவளது பாடசாலையில் பயோ சயன்ஸ் படிப்பதற்கான எவ்வித ஆளணிகளும் இல்லாததனால் கலைப்பிரிவிலேயே தனது கல்வியைத் தொடர்ந்து சட்டத்துறைக்கு ஏற்ற வகையில் தன்னை தயார் படுத்தலானாள்.

இறைவா! எனது முயற்சியை வீணாக்கிவிட்டாதே என்று அநுதினமும் பிரார்த்தனையுடன் தனது படிப்பை தொடரலானாள். இடையில் தன்னிடம் அடைக்கலம் பெறவேண்டி வந்த சங்கடங்களுக்கெல்லாம் வளைந்து கொடுத்து உயர்தரம் திறமையாக படித்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறாக காலம் யாருக்குத்தான் காத்துக் கொண்டிருக்கும். உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு வீட்டிலே தோட்டத்தை நிர்வகித்து கொண்டிருந்தாள். இடையிடையே அப்படி செய் இப்படி செய் என்று அம்மாவின் நச்சரிப்பு ஒருபுறம். இவ்விதமாக அவள் விடுதலையை எண்ணிக் கொண்டிருந்த போதுதான் பெறுபேறுகள் வெளியானது.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது போல மாவட்டத்திலே முதல் ராங்க் உடன் சட்ட கல்லூரிக்கு நிரோஸ் தெரிவாகியிருந்தமையை அறிந்து அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவளை புறக்கணித்த அவளது வீட்டினர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இதை எதையுமே அறியாத அவள் ஆனந்த வெள்ளத்தில் தனது மிச்சக் கல்வியையும் தொடர்வதற்காக சிட்டாய் சிறகடிக்க தயாரானாள்.

தன்னை சட்டக் கல்லூரியின் ஒரு மாணவியாக தயார்படுத்திக் கொண்டு நாட்களை எண்ணி எண்ணி தவமிருந்தாள்.

எல்லோருக்கும் அழைப்பு வர தனது விடியலை நோக்கி ஆனந்த கண்ணீருடன் கொழும்பு சட்டக்கல்லூரியில் தன்னை பதிவு செய்ய வீறுநடை போட்டுக் கொண்டிருந்தவளை வஞ்சக உள்ளத்துடன் அவளது சம்பளத்தை இனி எவ்வாறு பிடுங்கலாம் என்ற திட்டமிடலுடன் உறவினர் என்ற அந்தப் பெரும்படை அவள் போவதையே விஷமத்துடன் பார்த்துக் கொண்டு ஊமையாய் நின்றனர்.

ஆனால் அவள்தான் விடுதலையையெண்ணியே கடவுளுக்கு நன்றி கூறி தனது கல்வியையும் தொடர்வதற்காக சிறகடித்து விட்டாளே.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

"**பாம்பு** தின்னும் ஊருக்குப் போனால், நடுமுறி நமக்கு என்று சொல்ல வேண்டும்" என்று பழமொழி கூறிக் கொண்டு, உலகை ஏமாற்றும் சந்தர்ப்பவாத ஞானிகளும், நெறி தவறிப் போறவர்களும் இன்று அதிகமாகத் தோன்றுவதும், அவர்களால் நெறியோடு வாழ நினைப்பவர்கள் துன்பமடைவதும் நாகரீகமாக்கப் பட்டுக்கொண்டு வருகின்ற காலகட்டத்திலும் சமுதாயம் சாக்கடையாகாமல் இருப்பதற்காக சட்டங்களும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளும் அமைக்கப் பட்டிருப்பது, தர்மம் இன்னும் அழியவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கு வள்ளுவப் பெருந்தகை கூறிவைத்த எடுத்துக்காட்டு என்ன?

*"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று*
*போற்றினும் பொத்துப் படும்"*

*- குறள் : 468*

ஒரு கருமத்தைச் செய்ய வேண்டிய வழிவகை அறியாது செய்தபின் ஏற்படும் கெடுதியானது, பலர் துணையாக நின்று தடுத்தாலும் தடுக்க முடியாது.

# கடலலையும் நானோ?

**கடந்த** கால இன்ப நினைவுகளில் தன்னை மறந்திருந்த மரகதவல்லி, தொடர்ந்து அந்த இனிமையான எண்ணங்களைக் கலைத்து விட யாராவது வந்து விடுவார்களோ என்றதோர் ஏக்கம் அவள் இதயத்தை நெருடிக்கொண்டிருந்த வேளையில்தான், யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டெழுந்தாள். "யாராக இருக்கும், இந்த வேளையில் அந்தப்புரத்தின் கதவைத் தட்டுமளவுக்கு" ஓரளவுக்குத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு படுக்கை அருகில் அமைக்கப்பட்டிருந்த முள்ளரியில் கிடந்த குத்து வாளைக் கையில் எடுத்துக் கொண்டு கதவை நோக்கி நடந்தாள்.

உலகமே உறங்கிக் கொண்டிருந்த வேளை, நடுநிசியில் கதவைத் தட்டியது யாராக



இருக்கலாம் என்பதில் மரகதவல்லிக்கு ஐயம் ஏற்பட்டபோதிலும், கோட்டைக்குள் இருந்த காவலர்களின் கண்ணில் மண்ணைத் தூவுவது சாதாரண விடயமல்ல. அனுமதி பெற்றவர்கள்தான் நுழைய முடியும் என்பதால் அவராகத்தானிருக்கும் என்று முடிவுக்கு வரவேண்டியிருந்தது.

மெதுவாகக் கதவைத் திறந்தாள். ஆனால், அங்கு யாரையும் காணவில்லை. என்ன இது யாரையும் காணவில்லையே. ஒரு வேளை பிரமையாக இருக்குமோ என்று நினைத்தவள் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

சிங்கபுரத்து அரண்மனை அமைந்திருந்த நிலப்பரப்பு தென்பகுதியின் கடற்கரையை அண்டியிருந்தது. அதில் நீண்டு பரந்து கிடந்த கடற்பரப்பில் அமைக்கப்பட்டிருந்த தளத்தில் அமர்ந்த வண்ணம் மரகதவல்லி, கடலலைகளின் ஒன்றை ஒன்று துரத்திச் செல்வதையும் பின்பு முன்னே சென்ற சிற்றலையை ஒரு பேரலை வந்து விழுக்கிக் கொள்வதையும், இப்படியே மாறி மாறி நடந்தேறுகின்ற நாடகங்கள் அவள் மனதில் ஒரு கேள்வியை எழுப்பியது. அதற்கு விடைகாண எண்ணித் தோல்வி கண்டவளாய், கடலலையை ரசிப்பதை விட்டு விட்டு விக்கிரமனின் முகத்தைப் பார்த்தாள் மரகதவல்லி.

பௌர்ணமி நிலவின் ஒளி கடல் நீர்ப்பரப்பில் பட்டுத் தெறிப்பதனால் இயற்கையாகவே நிலவின் ஒளியைவிட மேலும் பலமடங்கு வெளிச்சத்தைத்தந்து சிறு துரும்பு கூட தெளிவாகத் தெரியக் கூடியதாக இருந்தது. இவைகளுக்கெல்லாம் மேலாக மரகதவல்லியின் கழுத்திலுள்ள வைர மாலையிலிருந்து பிரகாசம் அவள் முகத்தில் படுவதால் அவளது தாமரை முகத்தில் படர்ந்திருந்த மிருதுவான ரோமங்கள்கூடத் தெரியுமளவுக்கு அந்தச் சூழ்நிலை இருந்தது.

மரகதவல்லி விக்கிரமனின் முகத்தைப் பார்த்ததும், "மரகதம் ஏன் அப்படிப் பார்க்கிறாய்" என்றவாறு அவள் வலதுகையை எடுத்து தன் இரு கைகளுக்குள்ளும் வைத்துக் கொண்டு, அவள் விரல்களை ஒவ்வொன்றாக அளப்பதுபோல் வருடிக் கொண்டிருந்தான். அவன் கேள்விக்கு அவள் பதிலேதும் கூறாதது கண்டு "ஏன் பேசாமலிருக்கின்றாய். இவ்விடத்தில் இருக்கப் பிடிக்கவில்லையா?" என்றதும் "அப்படியொன்றும் இல்லை" என்றவாறு மெல்ல நெடுமூச்செறிந்தாள். இதைப் பார்த்ததும் விக்கிரமன் சற்று கலங்கிப் போய் "மரகதம் ஏன் கலக்கம் உனக்கு? நான் ஏதும் குறை வைத்துவிட்டேனா? ஏனிந்த நெடு மூச்சு" என்று கேட்டதும் "நெடு மூச்சு விட்டால் குறை இருக்கிறது என்று அர்த்தமா?" என்றாள் மரகதவல்லி.... "ஏக்கத்தின் பிரதிபலிப்புத்தானே நெடுமூச்சு" என்றான் விக்கிரமன். வேறு காரணங்கள் இருக்கக் கூடாதா?" இது மரகதவல்லி. "இல்லையென்று நான் சொல்லவில்லையே." "எனக்குப் புரியவில்லை." "அந்தக் கடலலையைப் பாருங்கள்." "அந்திமாலை தொடக்கம் அதைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறோம். புதிதாகப் பார்ப்பதற்கென்ன இருக்கிறது?" என்று சலித்துக் கொண்டான் விக்கிரமன். "நீங்கள் தான் பலகலையில் வல்லவராச்சே. அதனால் தான் எதையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு தெளிவில்லாத முடிவுக்கு வந்து விடுகிறீர்கள்." அப்படி என்ன நான் தெளிவில்லாமல் செய்து விட்டேன்" அந்தி தொடக்கம் கடலையே பார்க்கிறோம் என்று கூறினீர்களே. அதில் உங்களுக்கு ஏதும் புதுமையாகப் படவில்லையா?" "புதுமையாகவா வழமையாகவா?" வழமையாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது!" "எதைச் சொல்கிறாய்?" என்னிடம் ஏன் கேட்கிறீர்கள் நீங்களே கண்டு பிடிப்பதுதானே!" ஓகோ உன் கண்களின் கருநீலம் இந்தக் கடலுக்கு எப்படி வந்தது என்று கேட்கிறாயா?" அது நீ என்னைக் குழப்புவதற்காக அர்த்தமில்லாமல் கண்ணீர் வடித்த போதெல்லாம் உன் கண்களில் உள்ள நீலம் கண்ணீரோடு சென்று கடலில் கலந்து விட்டதுபோல் தோன்றுகிறது" "போங்கள் என்னை வர்ணிப்பதிலேயே உங்கள் கற்பனை வீணாகப்போகிறது. இதெல்லாம் நீங்கள் என்னை மயக்குவதற்காகக் கூறும் புகழுரைகள் என்று நீ எதைச் சொல்கிறாய்?" மயங்கிக் கிடப்பவள் நானல்லவா! மயக்கம் என்பது பேசுவதால் மட்டும் ஏற்படுவதல்ல வாஞ்சையின் முதிர்வுதானே மயக்கத்திற்குக் காரணம் என்பதை இதுவரை நீ அறியாதிருப்பது வியப்பாக இருக்கிறது.

புரிந்து கொள்ளாமலிருப்பது நீங்களா நானா என்பது.... புரிந்தபின்தானே தெரியப் போகிறது. நான் கடலைக் காட்டியது எதற்காக என்பதை இன்னும் உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று மரகதவல்லி கூறிய தொனியில் லேசாகப் பரிகாசம் இளையோடியிருப்பதைக் கவனித்த விக்கிரமனுக்குத் தன் திறமையில் சோர்வு ஏற்படுவதுபோல் தோன்றவே, "ஆழ்கடலைவிட ஆபத்தானவர்கள் பெண்கள்." "பெண்கள் ஆபத்து என்று சொல்லிவிட்டதுபோல் அல்லவா தோன்றுகின்றது" "அதற்குள் சந்தேகம் வந்து விட்டதா?" என்றாள் மரகதவல்லி. "வேறென்ன அலைகடலைக் காட்டி என்னை ஆட்டிப் படைக்கிறாயே அது போதாதா?" அலைகடல் என்று கூறும் பொழுது, முன்னுக்குள்ள சொல் எது என்று கூறுங்கள் பார்க்கலாம்" இது மரகதவல்லியின் கேள்வி. "அலை. இதுகூடவா தெரியாமலிருக்கிறேன்." "எதற்கும் அவசரப்பட்டு விடுகிறீர்கள் அத்தான். அந்த அலைகளை உற்றுப் பாருங்கள் அவை ஒவ்வொன்றும் சிறிதும் பெரிதுமாக ஒன்றையொன்று துரத்திக் கொண்டு வருவது தெரிகிறதல்லவா?" "ஆமாம் அதற்கென்ன இப்போ? அதில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் சிறிய அலை. அதைத் துரத்துவதுபோல் வந்த பெரிய அலை சிறியதை தனக்குள் அடக்கிக் கொண்டு விடுவது தெரிகிறதல்லவா?" "ஓகோ! அப்படியா?" "அதைப் போன்று உங்களுக்குள் நான் சங்கமித்துப் போகிறேன் அத்தான்" என்று விக்கிரமனின் பரந்த மார்பில் சாய்ந்தாள் மரகதவல்லி.

**தருவது கற்பகன்**

*"தம்மில் இருந்து தமது பாத் துண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு"*

*- குறள் : 1107.*

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியா, தென் இலங்கையில் தாக்குதல் நடத்துவோம் என்று புலிகள் சொன்னாலும் இன்னும் தாக்காமல் இருப்பது, அவர்கள் யுத்த ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்திருப்பதைக் காட்டுவதாகக் கருதலாமா?**

*- ஜி.வாகீசன், தலைமன்னார்.*

இப்படித்தான் சிலர் ஒரு கருதுகோளுடன் இருந்தார்கள். அதை 26ஆம் திகதி அதிகாலையில் புலிகள் நடத்தியிருக்கும் விமானத்தாக்குதல் தகர்த்துப்போட்டிருக்கிறதே. பயங்கரவாத அமைப்பொன்று, அதாவது இறைமையுள்ள அரசு தவிர்ந்த ஆயுதம் ஏந்திய அமைப்பு ஒன்று விமானம் கொண்டு தாக்கியிருப்பது உலகில் இது முதல் தடவை என்றும், இத் தாக்குதல் இது போன்ற பயங்கரவாத, கிளர்ச்சி அமைப்புக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்து விடக்கூடும் என்றும் சிலர் நிபுணத்துவம் பேசிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் இலங்கை அரசின் கவலையீனத்தையும், பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருக்கக் கூடிய குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். புலிகளின் விமானத் தாக்குதல் என்பது தொடர முடியாதது என்பது ஒரு பக்கம் இருக்க, புலிகளின் தாக்குதல் வீச்சு எப்படியானது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருப்பது மறுபக்கம்.

இந்திய மத்திய அரசின் மௌனத்தைப் பார்த்தால் புலிகளின் விமான விடயத்தை அவதானித்துக் கொண்டிருக்கிறார்களாம். பயங்கரவாத விடயத்தில் இந்தியா, செத்த பாம்பாக இருந்தால் அடிக்கலாம் என்று பார்ப்பதுபோல் தெரிகிறது. இப்போதைய நிலைமையைப் பார்த்தால் இந்தியா இலங்கை விடயத்தில் வந்து தலையிடுவதை விட தனது நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தித் தன் தலையைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது என்று சிந்தித்துக் கொள்வதே நல்லது. வன்னியிலிருந்து - கொழும்புக்கும், வன்னியிலிருந்து - இந்தியாவுக்கும் ஐந்து நிமிடத் தூரம்தான் வித்தியாசம். இந்தியா அவதானமாக இருக்கட்டும்.

✉ **மடு தேவாலயப் பகுதிக்குள் தஞ்சமடைந்தவர்களைப் புலிகள் தடுத்து நிறுத்திய சம்பவத்தை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்து விட்டனவே. அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

*- அ.கேதீஸ்வரன், வவுனியா.*

சம்பவங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் நடந்துள்ளன என்பதை முதலில் பார்க்க வேண்டும். படையினரின் கட்டுப்பாட்டில் நடந்தால்தான் எங்கள் ஊடகங்கள் கவனம் எடுப்பார்கள். புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் நடந்திருப்பதால், அதைக் கோயில் கணக்கில் சேர்ந்து விடுவார்கள். இதுதான் இப்போதைக்கு நம் நாட்டில் நிலவும் ஊடக (அ)தர்மம்.

✉ **இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?**


*- ம.தனபாலன், மட்டக்களப்பு.*

சிறியளவில் முன்னேற்றமடைந்திருந்த போதும், கட்டுநாயக்காவில் புலிகள் தாக்கியதன் பின்னர் சிறிது பின்னடைவைக் காணலாம். தலைநகரின் பாதுகாப்பு கேள்விக்கிடமாக இருக்கும் வரையும், பொருளாதார முன்னேற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

✉ **இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் அளவுக்கு மீறிய கோபமும் - எதிர்பார்ப்பு நடவடிக்கையும் நியாயமானதா?**

*- ப.ஜெகன், தெஹியத்தகண்டி.*

நூறு வீதம் நியாயமானது. அளவுக்கதிகமான ஆதரவையும், எதிர்பார்ப்பையும் அவர்கள் கொண்டிருப்பதால்தான் ஒவ்வொருவரும் வீரர்களாகவும், கதாநாயகர்களாகவும் மதிக்கப்பட்டார்கள் என்பதை எவராவது மறுக்க முடியுமா? அப்போதெல்லாம் கர்வத்தோடு தன்னைக் காட்டிக் கொண்டு பணம் உழைத்தவர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்யத் தவறிய போது, ரசிகர்களின் கோபத்தையும் எதிர்ப்பையும் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். இது பற்றி ராகுல் ட்ராவிட் கூறியிருப்பது வேடிக்கையானது. அதாவது, தாங்கள் ஏன் சரியாக ஆடவில்லை என்பது அதிர்ச்சியாக இருக்கிறது. அதற்காக இதை ஒரு விளையாட்டாகத்தான் பார்க்க வேண்டும். அதை விடுத்து ரசிகர்கள் உடல் ரீதியான துன்பம் தருவார்கள் என்று நான் நம்பவில்லை. 100 கோடி ரசிகர்களை ஏமாற்றி விட்டதற்காக வருந்துகிறேன். முழுப்பொறுப்பும் என் மீதானதுதான். அதை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியிருக்கும் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் சூப்பர் எட்டுக்குள் போயிருக்கும் நிலையில் இந்தியா பாகிஸ்தானுக்குப் பின்னால், "நீ முன்னாலே போனா.... நான் பின்னாலே வாறேன்...." என்று உலகக் கோப்பைப் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அணியில் மறுசீரமைப்பு அவசியம் என்ற கருத்து வரவேற்கத்தக்கது.



சபரி

✉ **பிராந்திய வல்லரசான இந்தியா, தனது பிராந்தியத்தில் பயங்கரவாதிகளின் விமானம் பறப்பதை அனுமதிக்குமா?**

*- தி.குணபாலன், வெள்ளவத்தை.*

✉ **சிந்தியா, இம்முறை உலகக் கோப்பையை இலங்கை அணி பெறும் வாய்ப்பு அதிகரித்து வருவதுபோல் இருக்கிறது. நடக்குமா?**

*- வி.எஸ்.காந்தன், மீராவோடை.*

தற்போதைக்கு நம்பிக்கை தரும் அணிகளை வரிசைப்படுத்தினால் அவுஸ்திரேலியா, இலங்கை, ஆகிய அணிகள் இரண்டு இடத்தில் இருக்கின்றன. 1996ஆம் ஆண்டு வில்ஸ் உலகக் கோப்பையை சுவீகரித்ததுபோல இம்முறையும் இலங்கைக்குச் சாதகமான நடு நிலைமை இருக்கத்தான் செய்கிறது. இலங்கை வீரர்களுக்கு வாழ்த்துச் சொல்லி, அந்த வெற்றிக்காக காத்திருக்கிறோம். ஆசியாவின் தற்போதைய நம்பிக்கை நட்சத்திர அணி இலங்கை அணி என்பது ரசிகர்களுக்கு மகிழ்ச்சிதான்.

✉ **இயலாத வேலைகளை செய்ய முடியும் என்று கூறிக் கொள்பவர்கள் பற்றி சிந்தியா என்ன கூறுகிறீர்?**

*- சி.பரிமளா, காத்தான்குடி.*

இந்தக் கேள்வியின் உதாரண புருஷர்களாக நம் நாட்டில் பலரைக் காட்டலாம். கேள்வியின் நோக்கம் வேறுபட்டதால், அவர்கள் தப்பித்துக் கொள்ளட்டும்.

சிலருக்கு இருக்கும் தன் நம்பிக்கையாகவும் இருக்கலாம். அநேகமானவர்களுக்கு தன்னம்பிக்கை என்பது முடியாததுகளை எல்லாம் ஏற்றுக் கொள்கின்ற முட்டாள்தனம்தான் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

✉ **விஜயகாந்த் நல்ல நடிகனா? அரசியல் வாதியா?**

*- எம்.இந்திராணி, பதுளை.*

ஒரு அரசியல்வாதியாக அவர் இன்னும் மிளிரவில்லை. அவர் கடைசியாக நடித்த ஐந்து படங்களைப் பார்த்தால், அதில் நல்ல நடிகன் என்ற பெயரையும் எடுக்க முடியவில்லை. விருதுகளுக்கும், விழாக்களுக்கும், விஜயகாந்துக்கும் சம்பந்தமே இல்லதாததுபோல் இருக்கிறது. பின்னங்காலைத் தூக்கி உதைப்பதை எத்தனை நாளைக்குத்தான் சகித்துக் கொள்வது. விதி விளையாடுகிறது. இதை நிரூபிக்கும் இன்னொரு படம்தான் "சபரி". வித்தியாசமான எத்தனையோ படங்களுக்கு முன்னால் "சபரி" அதன் ஆங்கிலத் தலைப்புப் போல், பெரும் அறுவை. விஜயகாந்த் ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலும் வைத்துப் பயணிக்கிறார் என்பதைத் தவிர என்ன சொல்ல முடியும்.

✉ **சிந்தியா, கேட்டால்தான் ஜோக் சொல்வீரா?**

*- மு.பாண்டியன், நிலாவெளி.*

அழுதால்தானே பால் கிடைக்கும்.

ஜோக் 01:

பொலிஸ்:- ஏண்டா கதவை உடைச்சுத் திருடினே?

திருடன் :- வழமையாத் திறந்து கிடக்கிற ஜன்னலை, அன்னைக்கென்று மூடிட்டாங்களே.

ஜோக் 02:

நீதிபதி:- அடிக்கடி திருட்டுச் செய்திட்டு இந்தக் கூண்டிலேயே வந்து நிக்கிறியே. வெட்கமா இல்லையா?

திருடன்:- மன்னிக்கணும் எஜமான். நீங்ககூட அடிக்கடி வழக்குகளுக்கு ஆஜராகி அதே கதிரையில இருக்கீங்களே...

✉ **சிந்தியா, உமக்கு ஜோக் மட்டுமா சொல்லத் தெரியும்?**

*- வி.லதுர்ஷன், திருமலை.*


இல்லை, இன்பங்களை விடவும் துன்பங்களே நிறைந்த இவ்வுலகில் கொஞ்சம் சிரிப்பதற்காகவே ஜோக்குகளைப் பரிமாறிக் கொள்கிறேன்.

உலக மக்களையெல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த சிரிப்பு மேதை சார்ளி சாப்ளினின் சொந்த வாழ்க்கை மிகுந்த துயரம் நிறைந்தது என்பது முரசு வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஒரு தடவை சார்ளி சாப்ளின் தன் நண்பரிடம் சொன்னாராம், "எனக்கு மழையில் நனைவது மிகவும் பிடிக்கும்" என்று. ஏனென்றால் "அப்போதுதான் நான் அழுவதை யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள்" என்றாராம். இந்தத் துணுக்கை அண்மையில் வாசித்துத் தெரிந்து கொண்டேன். இப்படி வித்தியாசமாகக் கேள்வி கேட்டதற்கு நன்றி.

# தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிக்க நடவடிக்கை!

இலங்கையில் சில தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் நாட்டின் பாதுகாப்பிற்கும் ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கும் எதிராக செயற்பட்டு வருவதாக அவ்வப்போது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அவ்வாறான தேச விரோத நடிவடிக்கைகளைத் தடுப்பதற்கு தேவையான சட்ட வாக்கங்களைத் தயாரிக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக தொண்டர் அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் சம்பந்தமான 1980ஆம் ஆண்டின் இலக்க 31ஆவது பிரிவிற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இது தொடர்பாக சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமித்த குழுவின் அறிக்கை கடந்த மாதப் பிற்பகுதியில் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இதே வேளை அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியும் தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் தொண்டர் அமைப்புக்களை கட்டுப்படுத்த வேண்டிய தேவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.



தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கு சீர் திருத்தங்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி அண்மையில் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தனது அறிக்கையைக் கையளித்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிக்கையை கையேற்பதை முலாவது படத்திலும் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினதும், அரசியல்யாப்புச் சபையினதும் முன்னாள் தலைவரான எஸ்.எஸ்.விஜேரத்னவின் தலைமையிலான இக் குழுவின் உறுப்பினர்களை இரண்டாவது படத்திலும், காணலாம்.

சுனாமி நிவாரணப் பொருட்கள் என்ற போர்வையில் ஜெர்மனியிலிருந்து விமான உதிரிப்பாகங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி பிரிட்டன், இலங்கை போன்ற நாடுகளில் முடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சில தன்னார்வத் தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகள் நிதி மோசடிகளில் ஈடுவடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ள இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்மையாக சேவையாற்றும் சர்வதேச மற்றும் தேசிய தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் இருக்கின்றனவென்று சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் எச்சரிக்கைக்கு மத்தியில் விமானத் தாக்குதல்

புலிகள் இயக்கம் இலகு ரக விமானங்களை நேரடியாக இந்தோனேஷியாவிலிருந்து கடத்தி வந்ததா அல்லது உதிரிப்பாகங்களாகக் கடத்தி வந்து வன்னியில் வைத்துப் பொருத்தப்பட்டதா என்பது தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கினாரென்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மாதம் அமெரிக்காவில் கைது செய்யபட்ட இந்தோனேஷியக் கடற்படை அதிகாரி ஜெனரல் எரிக் வூட்டுலோ என்பவர், புலிகளுக்கு விமானப் பாகங்களை விற்றாரா என்பது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற இந்த இந்தோனேஷியக் கடற்படை அதிகாரி அமெரிக்காவின் குவாம் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் மீதான நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதோடு விரைவில் இவர் தண்டனைக்கு உள்ளாவாரென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி கடந்த ஞாயிற்றுக்கிழமை 25ஆம் திகதி அந்தமான், நிக்கோவா தீவுகளுக்கு விஜயம் செய்தபோது பயங்கரவாதிகளின் கடல்வழித் தாக்குதல் குறித்து எச்சரிக்கை விடுத்து, 24 மணி நேரத்திற்குள் கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் தாக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் சாம் ஏவுகணைகளை வாங்க புலிகள் இயக்கம் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. தரையிலிருந்து விமானங்களைத் தாக்கக் கூடியவையே இந்த சாம் - 18 ஏவுகணைகளாகும். 1998ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்த சாம் ஏவுகணைகளைப் பாவித்து புலிகள் இலங்கை விமானப் படையின் சில விமானங்களைத் தாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் தற்போதைய யுத்தத்தின் போது சாம் ஏவுகணைகள் இல்லாததால் விமானங்களைத் தாக்கக் கூடிய சக்தியை இழந்து படு தோல்வியைச் சந்திக்கக் கூடிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இலகு ரக விமானத்தைக் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதல் பாரிய வெற்றியை அளிக்காமல் போனதற்குக் காரணம், படைத்தரப்பினர் கூறுவதுபோல் விமானப்படையினரின் தீவிர கண்காணிப்பு காரணமாகவிருக்கலாம் என்று சில இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர். படையினரின் மனோதிடத்தைச் சீர் குலைக்கும் ஓர் உத்தியாகவும் பிரசாரத் தேவைகளுக்காகவும் இத் தாக்குதலைப் புலிகள் மேற் கொண்டிருக்கலாம் என்றும் வேறு சில விமர்சகர்கள் கூறுகின்றனர். இருந்தாலும் திருகோணமலை, வீரவில உட்பட நாட்டிலுள்ள விமானத்தளங்களிலும் படையி னரின் முகாம்கள் அமைந்துள்ள பகுதி களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள தாக பந்தோபஸ்துத்தரப்பினர் தெரி விக்கின்றனர்.

இதேவேளை, நாட்டின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு வேலைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. தேடுதல் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா விமானப் படைப் பகுதியில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சுனாமி நிவாரண உதவியென்ற போர்வையில் ஜெர்மனியிலிருந்து கடந்த பல மாதங்களுக்கு முன்னர் விமான உதிரிப்பாகங்கள் கொண்டு வரப்பட்டமை தொடர்பாக மீள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்ட எம்.பி. தி.மகேஸ்வரனுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றிற்குள்ளிருந்து சில மாதங்களுக்கு முன்னர் விமானத்தின் இறக்கையொன்று கண்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வாகரை மக்கள் சுயவிருப்பின் பேரில் மீள் குடியேற்றம்; மேலும் வசதிகள் தேவை

மோதல் காரணமாக வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்காக அரசாங்கத்திற்கும் அரச அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். சொந்த இடங்களில் எவருடைய வற்புறுத்தலுமின்றி மீளக் குடியேற வேண்டுமென்பதே இடம் பெயர்ந்த மக்களின் விருப்பமாகும். இருந்த போதும் வாகரை மக்கள் இன்னமும் பூரணமான வசதிகள் கிடைக்காத நிலையிலேயே வாழ்கிறார்கள். மின்சார வசதிகள் மற்றும் வசதிகள் செய்து தரப்பட்டிருந்தாலும் சில மக்கள் அரைகுறையாகச் சேதமடைந்த வீடுகளிலும், கூடாரங்களிலும் வாழ்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று மட்டக்களப்பு - திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் தெரிவித்தார். வாகரையில் மீளக் குடியமர்ந்த மக்களின் குறைநிறைகளைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த பல்வேறு சமய முக்கியஸ்தர்களின் குழுவில் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் அங்கம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரச படைகளுக்கும் - புலிகளுக்குமிடையிலான மோதல் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து வாகரையிலுள்ள 16 கிராமசேவகர் பிரிவுகளிலிருந்து மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். சுமார் 4500 குடும்பங்களுக்கு மேற்பட்ட 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனரென்று வாகரைப் பிரதேச சபைச் செயலாளர் கிரிதரன் தெரிவித்திருந்தார். கடந்த 6ஆம் திகதி முதலாம் கட்ட மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இம்மாதம் 31ஆம் திகதிக்குள் அனைத்து மக்களும் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவார்களென்றும் அவர் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த வாகரை மக்கள், தமது சுயவிருப்பின் பேரிலேயே மீளக்குடியேறியுள்ளனர். பனிச்சங்கேணி, கட்டுமுறிவுக்குளம் ஆகிய பகுதிகளிலேயே இறுதிக்கட்டமாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்றும் அவர் சொன்னார்.

வாகரைக்குச் சென்று திரும்பிய சைவ சமயப் பிரமுகரான கதிரவேல் தெரிவிக்கையில், புலிகளிடமிருந்து கைப்பற்றிய இப் பகுதியில் இவ்வளவு விரைவாக மீள்குடியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை பாராட்டுக்குரியது. இன்னமும் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டிய பகுதிகள் இருக்கின்றன. 12 பாடசாலைகளில் 7 பாடசாலைகளே இயங்குகின்றன. மாணவர்களுக்குக் கற்றல் வசதிகள் போதியதாக இல்லை. ஆசிரியர் பற்றாக் குறையும் நிலவுகின்றது. தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் அரசாங்க அதிகாரிகளும் இவர்களுக்குத் தேவையான மேலதிக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். வாகரை மக்களை நிர்ப்பந்திக்காமல் சுயவிருப்பின் பேரில் மீளக் குடியேற்றியமை பாராட்டுக்குரியதென்றும் அவர் கூறினார்.

## ஐ.தே.கட்சி...(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பொது இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கு ஐ.தே.க.வின் மாற்றுத் தரப்பினர் முற்று முழு தான ஆதரவை வழங்குவதால், அவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டுமென்பது நியாயமானது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு மட்டும்தான் யோசனைகளைச் சமர்ப்பிக்க சர்வகட்சிக் கூட்டம் இடமளிக்க வேண்டுமென்று சிலர் வாதிடுவது தவறானது. ஐ.தே.க.வின் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களே. அவர்கள் தனி அணியாக பாராளுமன்றத்தில் செயற்படுகின்றனர். சுதந்திரக் கட்சியோடு கூட்டணியாக இணைந்து தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியவை சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அங்கம் வகிக்க அனுமதிக்கமுடியுமென்றால், ஐ.தே.க. மாற்றுக் குழுவினரை ஏன் அனுமதிக்கமுடியாது என்றும் அவர் கேள்வி யெழுப்பினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தி லிருந்து ஜே.வி.பி. வெளியேறினாலும் அதில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான கட்சிகள் தமது யோசனைகளை சமர்ப்பித்திருக்கின்றனர். அரசியல் விவகார அமைச்சராகப் பணியாற்றி அனுபவம் பெற்றிருப்பவரும் சட்டப் பேராசிரியராகத் திகழ்ந்தவருமான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் போன்றோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியமென்றும் அவர் சொன்னார்.

# மாவட்ட ரீதியில் முதியோர் பராமரிப்பு சபை

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையை மாவட்ட ரீதியில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு ஈடுபட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கிணங்க அமைச்சு அதிகாரிகள் இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பிள்ளைகளால் பராமரிக்கப்படாது கைவிடப்பட்ட பெற்றோர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்புக்களை வழங்கும் முகமாக இப்பராமரிப்பு சபைகள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதுகாலவரை நாவல வீதி, நுகேகொட கொழும்பிலமைந்திருந்த முதியோர் பராமரிப்புச் சபை மத்திய நிலையமே பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களின் முறைப்பாடுகளை விசாரித்து, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வந்தது. ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டட்லி கருணாரட்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழு செய்த சிபார்சுகளுக்கமைய முதியோர் பராமரிப்புச் சபைகளுக்கு சட்ட ரீதியான சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச வலைப்பின்னல் பலம் பெறும் - ஜனாதிபதி

கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் புலிகள் இயக்கம் உலக நாடுகளின் எதிர்ப்பை சம்பாதித்துள்ளது. இந்தத் தாக்குதல் புலிகள் இயக்கத்திற்கு எதிரான சர்வதேச வலைப்பின்னலை மேலும் பலம் பெறச் செய்யும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 27ஆம் திகதி உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். கெரில்லா அமைப்பொன்றிடம் விமானப் படையணி இருப்பது எவ்வளவு தூரம் பயங்கரமானது என்பது உலக நாடுகளுக்குத் தெரியும். புலிகளின் இத்தகைய செயற்பாடுகள் பிராந்தியத்தில் இந்தியா போன்ற நாடுகளுக்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகவே அமையும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் முயற்சி எடுத்து வரும் இத் தருணத்தில் புலிகள் இயக்கம் இத்தாக்குதலை நடத்தியிருப்பது துர்ப்பாக்கியமானது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடருமானால், கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்க மாட்டோம். தேசம் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் சகல அரசியல் கட்சிகளும் சந்தர்ப்பவாத செயற்பாடுகளைக் கைவிட்டு பொது நோக்குடன் ஐக்கியப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

## பரமேஸ்வரி...(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் சுதந்திரமான தொழில்சார் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பது அபத்தமானதென்பதை இனியாவது இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சாதாரண ஒரு பத்திரிகையாளரை, தவறான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்ததின் மூலம், அவரை ஜனரஞ்சகப்படுத்தி, அவரது பெயரை உலகமயமாக்கியது தான் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் செய்த வேலையென்று சொல்ல வேண்டும். இன்று அவருக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் சில அரசியல்வாதிகள் தம்மை ஊடக சுதந்திரத்தின் ஜாம்பவான்களாகக் காட்டிக் கொண்டு அரசியல் இலாபம் தேட முனைகிறார்கள். ஊடக சுதந்திரத்திற்காகப் போராடுவது வேறு, ஊடக சுதந்திரமென்ற போர்வையில் அரசியல் வலைக்குள் சிக்குவது வேறு என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கூட்டமைப்புக்குள் குத்து வெட்டு

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான தங்கேஸ்வரிக்கும் கனகசபைக்கும் மட்டக்களப்பு சென்று வருவதற்கான பாதுகாப்பை வழங்குவதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்புத் தரப்பினர் செய்திருந்தனர். இவர்கள் இருவரும் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே கடந்த 26ஆம் திகதி இவர்கள் மட்டக்களப்புக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய இரு எம்.பி.க்களான அரியநேந்திரனுக்கும், ஜெயானந்த மூர்த்திக்கும் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் கிட்டவில்லை. இதனால் ஆத்திரமுற்ற இந்த இரு எம்.பி.க்களும் தமது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்ததோடு, தங்கேஸ்வரிக்கும் கனகசபைக்கும் மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுப்பது தவறானது என்றும் சுட்டிக்காட்டினார். இதனையடுத்து தங்கேஸ்வரியும் கனகசபையும் தமது மட்டக்களப்பு பயணங்களை ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.


# அடால்ஃப் ஹிட்லர்

## (கி.பி. 1889 ~ 1945)

**ஹிட்லர்** தலைமை அமைச்சரான பிறகு, அரசு எந்திரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒழித்துக் கட்டிவிட்டு, விரைவிலேயே ஒரு சர்வாதிகாரத்தை ஏற்படுத்தினார். குடியியல் உரிமைகளுக்கு, தற்காப்பு உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்பட்டு இந்த சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டதாகக் கருதிவிடலாகாது. குடியியல் உரிமைகள் பறிக்கப்படுவது மிகத் துரிதமாக நடைபெற்றது. விசாரணைகள் நடத்துவது குறித்து நாஜிகள் கவலைப்படவேயில்லை.

பெரும்பாலான அரசியல் எதிர்ப்பாளர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். அல்லது படுகொலை செய்யப்பட்டனர். அப்படியிருந்தும் இரண்டாம் உலகப் போருக்கு முந்திய ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைத்தார். பொருளாதார மீட்சிக்கும் ஓரளவு வழி வகுத்தார். இதனால், பெரும்பாலான ஜெர்மானியர்கள் ஹிட்லருக்கு ஆதரவளித்தனர்.


ஹிட்லர் இதன் பின்பு இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாக இருந்த படையெடுப்புகளில் இறங்கினார். சில நிலப்பகுதிகள் போரிடாமலே அவருக்குக் கிடைத்தன. இங்கிலாந்தும், ஃபிரான்சும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்



தவித்துக் கொண்டிருந்தன. அவை யாருடனும் போரிடும் மனப்போக்கில் இல்லை. வர்சேல்ஸ் உடன்படிக்கையை மீறி ஹிட்லர் ஜெர்மன் இராணுவத்தைப் பெருக்கியபோதும், அவருடைய படைகள் ரைன்லாந்தைக் கைப்பற்றி (1936 மார்ச்) அதை வலுப்படுத்திய போதும், ஆஸ்திரியாவை அவர் வல்லந்தமாகத் தன் வசப்படுத்திக் கொண்டபோதும் (1938 மார்ச்) இங்கிலாந்தும், பிரான்ஸும் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்தன. அரண்காப்பு செய்யப்பட்ட செக்கோஸ்லாவாக்கியாவின் எல்லைப் பகுதியாகிய சூடட்டன்லாந்தை ஹிட்லர் இணைத்துக் கொண்டபோதுகூட (1938 செப்டம்பர்) இந்த நாடுகள் அந்த இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஹிட்லருடன் சமரசம் செய்து கொள்வதற்காக பிரிட்டனும், பிரான்சும் முனீக் ஒப்பந்தம் என்ற பன்னாட்டு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இந்த உடன்படிக்கையின்படி, சூடட்டன்லாந்தை ஹிட்லர் கைப்பற்றிக் கொண்டதை இவ்விருநாடுகளும் ஏற்றுக் கொண்டன. செக்கோஸ்லாவாக்கியாவின் மற்றப் பகுதி முழுவதையும் ஹிட்லர் கைப்பற்றிக் கொண்டார். ஒவ்வொரு கட்டத்திலும் ஹிட்லர் மிகத் தந்திரமான வாதங்களைக் கூறினார். தம்முடைய நடவடிக்கைகளுக்குத் தடங்கல் விளைவிப்பவர்களுடன் போரிடப் போவதாக மிரட்டினார். ஒவ்வொரு கட்டத்திலும் அவருடைய மிரட்டல்களுக்கு மேலைநாட்டு மக்களாட்சிகள் கோழைத்தனமாக அடிபணிந்தன.

## உலகை வியக்க வைத்தவர்கள்

**வியப்புக்கள் தொடரும்**

உ

ஓம் சக்தி சிவமயம்! ஓம் அகத்தீஸ்வராய நம!

**ஞானயோகி. டாக்டர் ப.இசக்கி IBAM,RMP,DISM**

தமிழ்நாடு, இந்தியா

சித்தர்களின் தெய்வீக சாதன ஜோதிட தியான மையம் ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் சித்தர்களின் அனுக்கிரகத்தாலும் ஆன்மீகம், தியானம், மணி, மந்திரம், மருத்துவம் ஜோதிடத்தின் மூலம் எமது 30 ஆண்டு கால அனுபவத்தின் நற்கன்ம வழியில் லோக மேஷத்தின் பொருட்டு மனித வாழ்வில் ஏற்படுகின்ற அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு ஆயுள், ஆரோக்கியத்துடன் ஐஸ்வர்யத்துடன் வாழ அணுகவும்.

1.தியானம்:- தகுதி உள்ளவர்களுக்கு சித்தர்களின் ரகசிய வழியிலான தியான தவயோக காயகல்ப்ப பயிற்சி முறைகளும் மற்றும் எமது தெய்வீக கலைகளும் கற்றுத் தரப்படும்.

2.பாதரச மணி:- நவக்கிரக தோஷம், மனோவியாதி, ஒற்றுமைக்குறைவு, கடன் தொல்லை, மாந்திரீகப்பாதிப்பு, வலிப்புநோய், இயற்கைச் சீற்றங்கள், வாஸ்துகுறைபாடு, ஞாபக சக்தியின்மை, திருமணத்தடை, திடீர் விபத்து, செய்தொழில் நஷ்டம் ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாக்கும். மேலும் வியாபார விருத்தி, செல்வச் செழிப்பு முதலியவை ஏற்படவும் தியானம், ஜோதிடம், மந்திரம் இவைகளில் எளிதில் சித்தி அடையவும் அரசு வழக்கு, விவகாரங்கள் தீர்ந்து சகல ஐஸ்வரியத்தையும் தரக்கூடியதாகும். பூஜைக்குரிய பெரிய பாதரச மணிகள் கிடைக்கும்.

3.மந்திரம்:- சகல விதமான தேவதைகளின் மந்திர, எந்திர, தாயத்து சக்கரங்களும் கிடைக்கும். இதை உடம்பில் அணிந்தும் வீடு, மற்றும் தொழில் ஸ்தாபனத்தில் வைத்து பூஜித்து வர சகல காரிய சித்தி உண்டாகும்.

4.இராஜவஷ்ய அஞ்சனம்:- பல தெய்வீக மூலிகைகளால் உருவாக்கப்பட்டது. சகல விதமான இராஜ வசியத்தை உண்டு செய்து சகல காரிய ஜெயத்தையும் ஏற்படுத்தும் அற்புத சக்தி கொண்டதாகும். அருள்வாக்கு சொல்பவர்களும், தியான தேவதாசித்தி செய்பவர்களுக்கும் அற்புதமான நற்பலன் தரக்கூடியதாகும். சகல விதமான நோய்கள் தீர்க்கூடிய நாட்டுமுறை சித்த மருந்துகள் கிடைக்கும்.

5.ஜோதிடம்:-ஜெனன ஜாதகம், பிரசன்னம், பெயரியல், எண்ணியல், எழுத்தியல் வாஸ்து இவற்றின் மூலம் மிகத்துல்லியமான பலாபலன்களை அறிந்து சிறந்த பரிகாரம் செய்து நற்பலனடைய அணுகவும். எமது 30 ஆண்டுகால ஜோதிட அனுபவத்தில் அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளிலிருந்து பல ஆன்மீகவாதிகளும்,அருள்வாக்குசொல்பவர்களும், தொழில்அதிபர்களும், கலைத்துறையைச் சார்ந்தவர்களும், பொதுப்பிரிவினர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு நற்பலன் அடைந்துள்ளனர்.

சுபமஸ்து!

**Contact:**

Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar , Muligai Nambi , Mani ManthiraV aithiya Jothisa Galagnani

Gnanayohi Dr p.Esakki, IBAM,RMP , D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur -627759

Thirunelveli District , Tamil Nadu > India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029

Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390, Email:Pramasivan_esakki@yahoo.com

Website;-www.gnanayohi.com Consultation by appointment only


# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

தீர்வுத்திட்ட யோசனையை முன்வைக்க இன்னும் அறுபதுநாள் காத்திருக்க வேணுமெண்டு, அமைச்சர் வித்தாரண சொல்லி இருக்கிறார். ஒரு மாசத்துக்கு முன்னமும் உப்பிடித்தான் சொன்னவர். ஜனாதிபதி மகிந்தவின்ர காலத்திலேயே தீர்வுக்குப் போகாட்டில் பிறகு தீர்வெண்ட பேச்சுக்கே இடமில்லை எண்டு சிலபேர் சொல்லினம். சும்மா ஒரு பேச்சுக்கு இன்னொரு பத்து வருஷம் கழிச்சு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் ஜனாதிபதியாகிறார் எண்டு வச்சுக்கொண்டால், ஏற்கனவே ஏமாத்தினவர் எண்ட இயக்கம், மீண்டும் அவரோடை எப்புடி சமரசம் பேசவருவினம். சரி அவரோடையும் பேசாட்டில் அங்காலை ஒரு பத்து வருஷம் கழிச்சு யாரோ ஒருத்தர் வரப்போகினம். அவையும் கடந்து போகப் போகிற இருபது வருஷத்தில எப்படியானவை எண்டது தெரிஞ்சு போகும். அவரையும் நிச்சயமாக நம்பவோ சமரசம் கதைக்கவோ முடியாது எண்டுதான் நிலைமை வரும். உப்பிடியே ஒருவரோடையும் பேச ஏலாதெண்டால் பேச்சுக்குப் போறதெண்டதே நடக்காத காரியம் எண்டு நிச்சயமாகுது. இயக்கம் இருபது வருஷம் கழிச்சு உதைத்தான் செய்யப்போகுது. ஆனால் அரசாங்கம் அவை வருவினமோ வரமாட்டினமோ எண்டதை ஒரு சாட்டாக சொல்லிக் கொண்டிருக்காமல் தாங்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ் மக்களுக்கு என்ன தீர்வைத் தரப்போகினமெண்டு ஒரு தீர்மானம் எடுத்து, அதை முதலில சொல்லட்டும் எண்டதுதான் இயக்கம் தவிர்ந்த அனைத்து தமிழர்களினுடையதும் முதல் விருப்பமும், எதிர்பார்ப்புமாக இருக்கிறது.

உது ஒரு பக்கமிருக்கட்டும், போன வாரத்தில நடந்த ஒரு பகிடி தெரியுமோ. கூட்டமைப்பு எம்.பி. தங்கேஸ்வரி பாராளுமன்றத்தில கதைக்கேக்க தமிழ் மக்களுக்கு சுதந்திரமும் வேண்டாம். சோறும் வேண்டாம் செல் அடிக்கிறதை நிறுத்தினால் போதும் எண்டு பேசியிருக்கிறார். உதில இருந்து என்ன தெரியுது. எனக்கெண்டால் பல சந்தேகங்கள் வருகுதுங்கோ. இயக்கத்துக்கு கிழக்கிலை பட்டினியாக இருந்தாலும் பரவாயில்லை, உந்த ஷெல் அடியை மட்டும் நிறுத்தி வச்சால் போதும் எண்ட நிலையில இருக்கினம். மற்றது சுதந்திரமும் - சோறும் வேண்டாமாம். அகதியாக வந்த சனம் பட்டினியாக நிண்டு தவிக்குதுகள். அவைக்கு ஏதாவது உதவி செய்து அவையை பாதுகாத்து பராமரிக்கிறதை விட்டுப்போட்டு, செல் அடிச்சு சனம் சாகினமாம் எண்ட மாதிரி மனிசி கதைச்சிருக்கிறா. அப்படியெண்டால் வடக்கு - கிழக்கில எந்தப் பக்கமும் ஷெல் அடிக்காமல் நிப்பாட்டினால் சுதந்திரத்துக்கான போராட்டம் நடத்திறம் எண்டு சொல்லிற இயக்கம், உதை நிறுத்திப்போட்டு துப்பாக்கிகளை எல்லாம் கடலுக்குள்ள கொண்டுபோய் போடுவினமோ. தொழில் இழந்து, சொத்து இழந்து, நிற்கிற சனத்துக்கும், அகதி முகாம்களில தவித்துக் கொண்டிருக்கிற சனத்துக்கும் நஷ்டஈடுகள், உணவுப் பொருட்கள் எண்டு ஒண்டும் தேவையில்லை. மொத்தத்தில இனப்பிரச்சினை முடிவுக்கு வந்திடும் எண்ட மாதிரியெல்லோ பேசியிருக்கிறா. உவாவின்ர உந்தப் பேச்சு அரைவேக்காட்டுத்தனமானது மட்டுமில்லையுங்கோ. இயக்கத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவில இருந்து அவைக்கு தேவைப்படுகிற ஓய்வைப் பெற்றுக் கொடுக்கத்தான் எண்டது சின்னப்பிள்ளைக்கும் தெரியும். எட பொலிரிக்ஸில பழம் திண்டு கொட்டையிட்ட மூத்த அரசியல் வாதியான அவையின்ர தலைவர் சம்பந்தம் அண்ணனே நிலைமைகளை அவதானிச்சுக் கொண்டு, கிழக்கில இரண்டில ஒண்டு நடக்கட்டும் எண்டு புத்திசாலித்தனமாக உந்த சப்ஜெக்டைத் தொடாமல் காய் நகர்த்திக் கொண்டிருக்கேக்க, உவாக்கேன் முந்திரிக் கொட்டைத்தனம் எண்டு கூட்டமைப்புக்குள்ளேயே சில எம்.பி. மார் சொல்லினம். எனக்கெண்டால் ஒண்டுதான் தெரியுது. உவை எதிர்காலத்தில் கிழக்கில வசிக்கப் போறதில்லை எண்டத கன்போ்ம் பண்ணி தங்கட பெமிலியை செட்டில் பண்ணிப் போட்டுத்தான் உந்த மாதிரி கதைக்கினம். அவைக்கு சனங்கள் எக்கேடு கெட்டாலும் பிரச்சினையில்லை. கிழக்கு மாகாணத்தில தமிழ் மக்கள் ரோட்டு ரோட்டாக அலைஞ்சு கையேந்தி பிச்சை எடுத்துக்கொண்டு திரிஞ்சாலும் அவைக்குப் பிரச்சினையில்லை. உந்த எம்.பி.ப் பதவிக்காலம் முடிஞ்சு ஊருக்குள்ள வந்து இனஞ்சனத்தோடை வாழவேணுமெண்ட விருப்பமெல்லாமல் இல்லாமல் போச்சுது. அதாலதான் சனத்தைப் பலிகொடுத்தெண்டாலும் தங்கட இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள வேணுமெண்டு யோசிக்கினம் எண்டு அகதி முகாம்களில அடுத்தவேளை உணவுக்காக காத்துக் கிடக்கும் சனம் சொல்லினம். அது மட்டுமே சொல்லினம்.

தங்களுக்கு இயக்கமும் வேணாம், போராட்டமும் வேணாம். உந்த உதவாக்கரை எம்.பி.மாரும் வேண்டவே வேண்டாம். தங்கள் நிம்மதியாக யாருடைய அச்சுறுத்தலும், அல்லுத் தொல்லையும் இல்லாமல் வீட்டில குடும்பத்தோடை வாழவிட்டால் போதுமெண்டும் சொல்லினம். போராட்டம் எண்டு சொல்லி எதிரி யார் எண்டு தெரியாமல் சொந்த மக்களையும், நண்பர்களையும் சகோதரர்களையும் கொலை செய்து, இருந்ததுகளை இழக்கச் செய்து வீதியில் இறக்கிவிட்டுப் போட்டினம். இதுக்கு மேலயும் சண்டை தான் வழியெண்டு மிச்சமிருக்கிற எங்களையும் சாக்காட்டிப்போட்டு உவை என்ன செய்யப்போகினம் எண்டும் அந்த மக்கள் கேட்கும் கேள்விக்கு உந்த எம்.பி.அம்மணி என்னங்கோ பதில் சொல்லப்போகிறாவோ. பாராளுமன்றத்தில பேசுறம் எண்டதுக்காக பல்லுமேலை நாக்கைப் போட்டு கண்டபடிப் பேசினால் உப்பிடித்தானுங்கோ. கேள்வியாலையே சனம் உருட்டி உருட்டி அடிக்கும். உப்புப் போட்டுச் சாப்பிடுறவைக்கு உந்த அடி வலிக்குமாமுங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(29.03.2007 தொடங்கி 04.04.2007 வரை)**

## ஞானயோகி. டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:-** அன்பார்ந்த மேஷராசி வாசகர்களே; சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். செய்தொழிலில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால், எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. தந்தை, மகன் உறவில் சுமுகமான சூழ்நிலை காணப்படுகிறது. புதிய வேலை வாய்ப்பு சம்பந்தமாக வெளிநாடு செல்லும் முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படும். குடும்பத்தில் கணவன், மனைவி உறவில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். நண்பர்களால் பொருட்செலவுகள் உண்டாகும். உடம்பில் வயிறு மற்றும் முழங்கால் சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். கூல்டிரிங்ஸ், திரவபொருள்கள், மற்றும் ஐஸ் போன்ற குளிர்சாதன வியாபாரிகள், பூஜை பொருள் வியாபாரிகள் நற்பலனடைவார்கள். பிள்ளைகளால் பொருள் வரவு உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும். அதிர்ஷ்டமான எண்:-2, அதிர்ஷ்டமான நிறம்:- வெள்ளை, அதிர்ஷ்டமான திசை:-மேற்கு, பரிகாரம்:- அம்மன் வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:-** அன்பார்ந்த ரிஷபராசி வாசகர்களே; சூரியன் நன்மை தரும் கிரகமாகும். நெருப்பு, எரிபொருள், கேஸ், வெல்டிங், சம்பந்தமான தொழில் செய்வோர்கள் லாபம் அடைவார்கள். குடும்பத்தில் மன அமைதி உண்டாகும். உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றம் ஏற்படும். பூமி, நிலம் சம்பந்தமான புதிய ஒப்பந்தங்களை தள்ளிப் போடுதல் நல்லது. உடம்பில் மூளை மற்றும் சிறுநீர் சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். அடுத்தவருக்காக உழைப்பதில் மன மகிழ்ச்சி அடைவீர்கள். சமுதாயத்தால் புதிய பொறுப்புகள் வந்து சேரக் கூடிய காலமாகும். மாணவர்கள் எச்சரிக்கையுடன் இருந்தால் கல்வியில் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-1
அதிர்ஷ்டமான நிறம்:-வெள்ளை
அதிர்ஷ்டமான திசை:-கிழக்கு
பரிகாரம்:-சூரியநமஸ்காரம் செய்து வரவும்.

**மிதுனம்:-** அன்பார்ந்த மிதுனராசி வாசகர்களே; புதன், கேது நன்மை தரும் கிரகமாகும்.அந்நிய மதத்தவரால் ஆதாயம் உண்டு. உடம்பில் நரம்பு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். ரேஸ்., லாட்டரி போன்றவற்றை தவிர்த்தால் வீண் பொருட் செலவுகளைத் தவிர்க்கலாம். பேப்பர், பேனா, பிரிண்டிங், புத்தகம் சம்பந்தமான தொழில் செய்வோர்கள், தபால் தந்தித் துறையினர்கள் லாபம் அடைவார்கள். அரசியல் வாதிகளுக்கு ஆதாயம் இல்லை. யாத்திரையில் கவனமுடன் சென்று வருதல் நல்லது. சிலருக்கு புதிய வீடு மாற்றம் உண்டாகலாம். பொருளாதாரம் சுமாராக காணப்படும். எதிர்பார்த்த பணம் கிடைக்க சிறு காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும். அதிர்ஷ்டமான எண்:-5,7, அதிர்ஷ்டமான நிறம்:- பச்சை, கருஞ்சிகப்பு, அதிர்ஷ்டமான திசை:- வடக்கு, வடமேற்கு, பரிகாரம்:- கணபதி, மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:-** அன்பார்ந்த கடகராசி வாசகர்களே; சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். உறவினர் வரவால் மன மகிழ்ச்சி அடைவீர்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணக் காரியம் கைகூடும். குலதெய்வ வழிபாடு செய்து வருதல் நல்லது. பூர்வீகச் சொத்துகள் கிடைக்கும். அரசு சம்பந்தமான வழக்குகளில் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்காது. பணியாட்களிடம் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. உடம்பில் வாயு மற்றும் வயிறு உபாதைகள் வந்து போகும். கலைத்துறை சார்ந்தவர்கள், அழகு சாதன பொருள் வியாபாரிகள், சினிமா, நாடகத்துறை போன்ற அமைப்பினர் லாபம் அடைவார்கள். சகோதரர்களின் தடைப்பட்ட தொழில்கள் மீண்டும் துவங்க வாய்ப்புள்ளது. இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-6
அதிர்ஷ்டமான நிறம்:-வெள்ளை
அதிர்ஷ்டமான திசை:-தென்கிழக்கு
பரிகாரம்:-மஹாலெஷ்மி வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:-** அன்பார்ந்த சிம்மராசி வாசகர்களே; செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். நாட்பட்ட தீராத நோய்க்கு நல்லதொரு மருத்துவத்தின் மூலம் விடை காணும் காலமாகும். வராத கடன், கொடுத்த பணம் திரும்ப கை வந்து சேரும். பங்காளிகளால் ஆதாயம் இல்லை. புதிய கூட்டுத் தொழில் முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடவும். நீண்ட தூரப் பயணங்கள் உண்டாகும். சிலருக்கு அந்நிய நாடு செல்ல வாய்ப்புள்ளது. பொலிஸ், இராணுவம், தீயணைப்புத் துறை சார்ந்தவர்கள், அரசுத்துறை உயர்அதிகாரிகள், மின்சாரத்துறை சார்ந்த அலுவலர்கள் நற்பலன் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் பாராட்டுதலும் பரிசும் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் ஏற்படும். பொதுவாக இது ஒரு நடுத்தரமான நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-9,அதிர்ஷ்டமான நிறம்:-சிகப்பு
அதிர்ஷ்டமான திசை:-தெற்கு
பரிகாரம்:-முருகன் வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:-** அன்பார்ந்த கன்னிராசி வாசகர்களே வியாழன், ராகுநன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் இருந்து வந்த தொல்லைகள் தீரும். ரேஸ், லாட்டரி போன்றவற்றின் மூலம் திடீர் தன வரவு உண்டாகும். மனைவி அல்லதுமனைவி வழிச் சொந்தங்கள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். உடம்பில் முதுகு, மற்றும் மார்பு சம்பந்தமான வலிகள் வந்து போகும். தந்தை, மகன் உறவில் விரிசல் காணப்படும். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்க திட்டம் போடுவீர்கள். செய்தொழிலில் சில எதிர்ப்புகளைச் சந்தித்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். உணவுப் பொருள் வியாபாரிகள், இனிப்புத் திண்பண்ட வியாபாரிகள், கம்ப்யூட்டர் சாதன வியாபாரிகள் லாபம் அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-3,4
அதிர்ஷ்டமான நிறம்:-மஞ்சள், கறுப்பு
அதிர்ஷ்டமான திசை:-வடகிழக்கு, வடமேற்கு
பரிகாரம்:-சிவன் மற்றும் பிதுர் வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:-** அன்பார்ந்த துலாராசி வாசகர்களே; சனி நன்மை தரும் கிரகமாகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். கலைத்துறைச் சார்ந்தவர்கள் பரிசும் பாராட்டுதலும் பெறுவார்கள். கமிஷன், தரகுத் தொழில் அழுகல் சம்பந்தமான வியாபாரிகள் நற்பலனடை வார்கள். அடிமையாட்களால் புதிய பிரச்சினைகள் வந்து நீங்கும். செய்தொழிலில் மிகக் கவனமுடன் இருக்கவும். செய்யாத குற்றங்களுக்காக பழிச்சொல் வந்து நீங்கும். காதல் வெற்றித் தேடித்தரும். சகோதரர்களால் தனவரவு உண்டு. தாயின் உடல் நிலைப் பாதிப்படையும். உடம்பில் உஷ்ணம் மற்றும் ஜுரம் சம்பந்தமான பீடைகள் வந்து நீங்கும். கடன் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லது. பொதுவாக இது ஒரு நடுத்தரமான நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-8,அதிர்ஷ்டமான நிறம்:-நீலம்
அதிர்ஷ்டமான திசை:-தென்மேற்கு
பரிகாரம்:-ஐயப்பன் வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:-** அன்பார்ந்த விருச்சிகராசி வாசகர்களே சனியே நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் தனவரவு உண்டு பூர்வீகச் சொத்துகள் கிடைக்கும். மணமாகாதவர்களுக்கு திருமணக் காரியம் கைகூடும். மாமன் வழியில் பண வரவு உண்டு. புதிய தொழில் சம்பந்தமான ஒப்பந்தங்களை தள்ளிப் போடவும். புதிய ஆடை, அணிகலன்கள் வாங்குவதைத் தவிர்க்கவும். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் கிடைக்கும் காலமாகும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். உடம்பில் அலர்ஜி, மற்றும் சனி சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். பெண்களால் ஆதாயம் இல்லை. யாத்திரையை விலக்குதல் நல்லது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-8
அதிர்ஷ்டமான நிறம்:-நீலம்
அதிர்ஷ்டமான திசை:-தென்மேற்கு
பரிகாரம்:-ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:-** அன்பார்ந்த தனுசுராசி வாசகர்களே; வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்து நீங்கும். எதிர் பார்த்த பணம் கிடைக்க சற்று காலதாமதமாகும். உத்தியோகத் துறையினருக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் உண்டு. யாத்திரையில் புதிய பெரிய மனிதர்கள் தொடர்புகளால் மன நிம்மதி அடைவீர்கள். அரசியல் வாதிகள் கவனமுடன் இருக்கவும். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமான பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளது. நண்பர்களால் பொருளாதார நெருக்கடிகள் குறையும். உடம்பில் மேகம் மற்றும் உஷ்ண சம்பந்தமான பிரச்சினைகள் வந்து போகும். பூ, பழம், இலை சம்பந்தமான பொருட்கள் வியாபாரம் செய்வோர்கள், மற்றும் பேராசிரியர்கள் லாபம் அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும். அதிர்ஷ்டமான எண்:-3
அதிர்ஷ்டமான நிறம்:-மஞ்சள்,அதிர்ஷ்டமான திசை:-வடகிழக்கு
பரிகாரம்:-சிவ வழிபாடு செய்து வரவும்.

**மகரம்:-** அன்பார்ந்த மகரராசி வாசகர்களே; செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். உடம்பில் நெருப்பு மற்றும் ஆயுதங்களால் சில சிறிய விபத்துகள் வந்து போகும். ஹோட்டல் தொழில் செய்வோர்கள் அரசு உயர் அதிகாரிகள் லாபம் அடைவார்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். வங்கிகளால் ஆதாயம் உண்டு. புதிய வாகனங்கள் மற்றும் நிலபுலன்கள் வாங்கலாம். விவசாயம் நன்றாக பலிதமாகும். புதிய ஆடை அணிகலன்கள் மற்றும் அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். சிலர் வீட்டைத் திருத்திக் கட்ட வாய்ப்புள்ளது. பெண்களால் பிரச்சினைகள் வந்து சேரும். எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-9
அதிர்ஷ்டமான நிறம்:-சிகப்பு
அதிர்ஷ்டமான திசை:-தெற்கு
பரிகாரம்:-துர்க்கை வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:-** அன்பார்ந்த கும்பராசி வாசகர்களே; சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். கலைத்துறை சார்ந்தவர்கள்,கல், மணல், செங்கல், சிமிண்ட் வியாபாரிகள் நற்பலனடைவார்கள். துலைதூரப் பயணங்களால் வெற்றி கிடைக்கும். உடம்பில் எலும்பு மற்றும் இரத்த சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும். கணவன், மனைவி உறவில் எச்சரிக்கை தேவை. பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். சமுதாயத்தில் புதிய பொறுப்புகள் வந்து சேரும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். தாயின் உடல் நிலைப் பாதிப்படையும். உறவினர்களால் பொருட்செலவுகள் ஏற்படும். வட்டித் தொழில் செய்வோர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-6
அதிர்ஷ்டமான நிறம்:-வெள்ளை, அதிர்ஷ்டமான திசை:-தென்கிழக்கு
பரிகாரம்:- மஹாலெஷ்மி வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:-** அன்பார்ந்த மீனராசி வாசகர்களே; புதன் நன்மை தரும் கிரகமாகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பிரச்சினைகள் வந்து சேரும். தந்தையால் பொருள் வரவு உண்டாகும். உத்தியோகம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணிதத்துறை சார்ந்தவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், வக்கீல்கள், மற்றும் காய்கறி வியாபாரிகள் நற்பலனடைவார்கள். ரேஸ், லாட்டரி மூலம் தனவரவு உண்டாகும். காதல் விஷயங்களில் வெற்றி கிடைக்கும். அரசியல் வாதிகளால் ஆதாயம் உண்டாகும். உடம்பில் இரத்த மற்றும் தோல் தொடர்பான பிணிகள் வந்து போகும். நீண்டத் தூரப் பயணங்களால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கண்களில் கவனம் தேவை. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
அதிர்ஷ்டமான எண்:-5
அதிர்ஷ்டமான நிறம்:-பச்சை
அதிர்ஷ்டமான திசை:-வடக்கு
பரிகாரம்:-மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)







உலகமே உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஜுரத்தில் தவித்துக் கொண்டிருக்கின்றது. மொத்தம் 16 நாட்டு அணிகள் களத்தில் இறங்கியுள்ளன. இவ்வேளை போட்டி நடைபெறும் போது ஊடகங்கள் வாயிலாக வர்ணனைகளைச் செவிமடுப்போர் 'ஆடுகளம்' என்ற சொற்பிரயோகத்தினை அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆடுகளம் என்பது கிரிக்கெட் வெற்றி தோல்வியினை தீர்மானிப்பதில் பெரும் பங்கினை வகிக்கின்றது. உண்மையில் ஆடுகளம் என்பது இரு வகையான அர்த்தத்தினை வெளிப்படுத்துகின்றது. முதலில் ஆடுகளம் அமைந்திருக்கும் இடம், அதன் தட்ப வெப்ப நிலைமைகள் என்பன நேரடியான தாக்கத்தினை வீரர்கள் மத்தியில் செலுத்துகின்றது. மற்றையது ஆடுகளம் அமைக்கப்பட்ட விதம். இதுவே மறைமுகமானதும் வெற்றி தோல்வியில் கணிசமான பங்கினை வகிப்பதுமாகும்..

***ஆடுகளம் எவ்வாறு அமைக்கப்படுகின்றது?***

20.12மீட்டர் நீளமும் 2.64 மீட்டர் அகலமும் கொண்ட ஆடுகளம் (Pitch) உருவாக்கப்படும் போது,

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)




உலகம் சுருங்கிக் கொண்டு வருகிறது என்பதை வீட்டிலிருக்கும் தொலைக்காட்சி உணர்த்தியது. பின்னர் கணனியின் வருகை அதை இன்னும் சுருக்கியதோடு உலக நடப்பின் எல்லாப் பக்கங்களையும் பார்க்கவும், தெரிந்துகொள்ளவுமான வாய்ப்பைத் தந்தது. இப்போது புதிய தயாரிப்புக்களான கையடக்கத் தொலை பேசிகளுடாகவே உலக சமாச்சாரங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இனி கணனியும், கையடக்கத் தொலைபேசியளவில் கிடைக்கவிருக்கிறது. சீனாவின் பீஜிங் நகரில் புதிய ரக பாக்கெட் கம்பியூட்டரை அறிமுகம் செய்கிறார் ஒரு மாடல்.




கிங்ஸ்டனில் பாகிஸ்தான் ஜிம்பாப்வே அணிகளுக்கிடையே நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடியதுடன் பாக். கேப்டன் இன்சமாம், ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுகிறார். பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் வுல்மரின் கொலையும், உலகக் கோப்பைத் தொடரில் முதல் சுற்றிலேயே அயர்லாந்திடம் பெற்ற படுதோல்வியும் பாகிஸ்தான் அணியின் கிரிக்கெட் வரலாற்றை புரட்டிப்போட்டு விட்டது. இந்த நிலையிலேயே கசப்பான பல அனுபவங்களால் இன்சமாமின் ஓய்வும் பதியப்பட்டுள்ளது.




"எல்லா விலங்குகளின் உடம்பிலும் நம்மைப் போன்றே உறுப்புக்கள் உள்ளன. ஆகவே சைவத்துக்கு மாறுங்கள்." இந்த வாசகங்கள் எழுதிய அட்டையை வைத்துப் போராடுகிறார் பிராணிகள் நல அமைப்பான பீட்டாவின் உறுப்பினரான கனடாவைச் சேர்ந்த ஆஷ்லி ப்ருனோ. பிராணிகளைத் துன்புறுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி அடிக்கடி ஆடையில்லாமல் போராடுவது இவரது வழக்கம். இம்முறை குட்டியூண்டு ஆடைகளுடன், உடலில் பாகங்களின் பெயரை எழுதிக் கொண்டு போராடுகிறார் தாய்லாந்தில்.

